இரண்டாம் பதிப்பு

விலை: 20
பக்கங்கள்: 28

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 32
கதிர் 262
ஆடி 30ஆம் நாள்
செவ்வாய்க்கிழமை
15 ஒகஸ்ட் 2017
வள்ளுவர் ஆண்டு 2048

அமைச்சர் பதவி விவகாரத்தால்

# இக்கட்டுக்குள் முதலமைச்சர்

### புதிய அமைச்சரவையை எப்போது நியமிப்பார் என்ற குழப்பத்தால் பணிகள் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஒகஸ்ட் 15

வடக்கு மாகாண சபையின் அமைச்சர்கள் இருவரைப் பதவியில் இருந்து அகற்றுவதற்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் எடுத்த நடவடிக்கைகளைத் தொடர்ந்து மாகாண சபைக்குள் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. மீன்பிடி மற்றும் போக்குவரத்துத்துறை அமைச்சர் பா.டெனீஸ்வரன் தனது பதவியிலிருந்து விலக மறுத்துள்ளதை அடுத்து புதிய அமைச்சரவையை அமைப்பதில் இழுபறி, இக்கட்டுக்குள் சிக்கிக் கொண்டுள்ளார் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன். இந்த நிலைமையை அவர் விரைவில் சீர்செய்யவில்லை என்றால் வடமாகாண அரச கட்டமைப்புக் கடும் குழப்பங்களுக்குள்ளாகும் நிலையே ஏற்படும்.

வடக்கு மாகாண அமைச்சர்கள் மீது சுமத்தப்பட்ட மோசடி மற்றும் முறைகேட்டுக் குற்றச்சாட்டுக்களை விசாரிக்க முதலமைச்சர் நியமித்த குழு தனது அறிக்கையைக் கையளித்ததைத் தொடர்ந்தே குழப்பம் ஆரம்பமானது. விவசாய அமைச்சராக இருந்தவரான பொ.ஐங்கரநேசனையும் கல்வி அமைச்சராக இருந்தவரான க.குருகுலராசாவையும் உடனடியாகப் பதவி விலக்கவேண்டும் என்று விசாரணைக் குழு முதலமைச்சருக்குப் பரிந்துரை வழங்கியது.

அந்த அறிக்கையை வடக்கு மாகாண சபையில் முன்வைத்த முதலமைச்சர் குறித்த இரு அமைச்சர்களது பதவிகளையும் தியாகம் செய்யுமாறு அவர்களிடம் கேட்டார். கடும் இழுபறிகளின் பின்னர் அமைச்சர்கள் இருவரும் தமது பதவிகளை முதலமைச்சருக்காகத் தியாகம் செய்தனர். ஆனால் அத்தோடு திருப்திப்படாத முதலமைச்சர் அமைச்சரவையில் இருந்த மற்றைய அமைச்சர்களான சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கத்தையும் மீன்பிடி மற்றும் போக்குவரத்துத்துறை அமைச்சர் பா.டெனீஸ்வரனையும் பதவி விலக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டார். அவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை விசாரிக்கப் புதிய விசாரணைக் குழு நியமிக்கப்படும் என்று அறிவித்தார்.

இது கட்சிகளுக்கு இடையே மேலும் குழப்பத்தையும் பிரச்சினையையும் ஏற்படுத்தியது. கூட்டமைப்பு இரு தரப்பாக உடைந்தது. தமிழ் அரசுக் கட்சி ஒரு தரப்பாகவும் ஏனைய கட்சிகள் மறு தரப்பாகவும் பிரிந்தன. >> 25

## சிறார்களின் நினைவேந்தலில் உறவுகள் கண்ணீர்



செஞ்சோலை வளாகத்தில் நடத்தப்பட்ட விமானக் குண்டுவீச்சில் உயிரிழந்த மாணவர்களை நினைவேந்தும் நிகழ்வுகள் நேற்று வடக்கு. கிழக்கில் நடைபெற்றன. கண்ணீர் மல்கத் தங்கள் செல்வங்களை உறவினர்கள் மலர்தூவி அஞ்சலி செய்தனர். (விரிவு 3 ஆம் பக்கத்தில்)

# நானாக விலகமாட்டேன் வேண்டுமெனில் நீக்குக

### தனது பிடியில் டெனீஸ் இறுக்கம்

மன்னார், ஒக. 15



அமைச்சுப் பதவியில் இருந்து கொண்டு நீதியை நிலைநாட்டுவதற்காகப் போராடுவதா?, அல்லது வெளியே வந்து போராடுவதா என்பதை எமது இனத்துக்காக உயிரைக் கொடுக்க முன் >> 25

## முதன் முறையாக செப்ரெம்பரில் ட்ரம்ப்பை சந்திக்கிறார் மைத்திரி

>> 25

## நிதிப் பற்றாக்குறையால் தேநீர், சிற்றுண்டி “கட்”

### யாழ். பிரதேச செயலகத்தில் இந்த நிலை

யாழ்ப்பாணம், ஒக.15

நிர்வாகச்செலவினங்களுக்கான நிதி குறைக்கப்பட்டுள்ளதால் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டோ >> 25

## கடுகதி ரயிலுடன் மோதியது ஓட்டோ

### இளம் குடும்பத்தலைவர் சாவு வவுனியாவில் நேற்றுத்துயரம்



வவுனியா, ஒக.15

கடுகதி தொடருந்துடன் முச்சக்கர வண்டி மோதி விபத்துக்குள்ளானது. அதில் இளம் குடும்பத் தலைவர் ஒருவர் உயிரிழந்தார். இந்தச் சம்பவம் நேற்று மாலை 4.30 மணியளவில் வவுனியாவில் நடந்துள்ளது. விபத்தில் வவுனியா, ஈச்சங்குளத்தைச் சேர்ந்த குகேந்திரன் கிருபாகரன் >> 25

## விஜயதாசவை சுதந்திரக்கட்சி ஆதரிக்கும்

கொழும்பு, ஒக. 15

நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டால் சிறி லங்கா சுதந்திரக் கட்சி அதற்கு ஆதரவளிக்காது என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான மகிந்த அமரவீர தெரிவித்தார்.

“அமைச்சர்க >> 25

கேப்பாபிலவு காணி விடுவிப்புக்காக

## படையினருக்கு நிதி வழங்குவது குறித்து அமைச்சரவையில் நாளை ஆராய்வு

முல்லைத்தீவு, ஒக. 15

கேப்பாபிலவில் மக்களுக்குச் சொந்தமான 111ஏக் ர் காணியை விடுவிப்பதற்காக 148 மில்லியன் ரூபாவை இராணுவத்துக்கு வழங்குவது தொடர்பில் அமைச்சரவையில் நாளை ஆராயப்படவுள்ளது. இதற்கான அமைச்சரவைப் பத்திரம் சிறைச்சாலைகள் >> 25

## தொண்டர் ஆசிரியர்கள் 676 பேருக்கு நியமனம்

### 25இல் பெயர்ப்பட்டியல் வரும்

யாழ்ப்பாணம், ஒக. 15

வடக்கு மாகாணத்தில் தொண்டர் ஆசிரியர்களாகப் பணியாற்றியவர்களில் 676 பேர் நியமனம் வழங்கத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அவர்களது பெயர்ப்பட்டியல் எதிர்வரும் 25 ஆம் திகதி வெளியிடப்படும் என்று வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் தெரிவித்தார். (விரிவு பக்.07)

see more news in newuthayan.com

## ஐ.தே.கவின் தீர்மானத்துக்கு பௌத்தபீடங்கள் போர்க்கொடி

### விஜயதாஸ மீது கைவைக்க முடியாதாம்

கொழும்பு, ஒக. 15

நீதிஅமைச்சர் விஜயதாஸ ராஜபக்சவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவர ஐக்கிய தேசியக் கட்சி எடுத்த தீர்மானத்துக்கு முதன்மைப் பௌத்த பீடங்கள் நான்கும் கடும் எதிப்பு வெளி >> 25

# காணாமற்போனோர் அலுவலகத்தை திறக்க இன்னும் வழியைக் காணோம்

### வேண்டும் என்றே தாமதிக்கப்படுவதாக மனித உரிமைகள் ஆர்வலர்கள் சீற்றம்

யாழ்ப்பாணம், ஒக. 15

காணாமற்போனோர் தொடர்பான அலுவலகத்தை அமைப்பதற்கான பணிகள் மேலும் தாமதமடைந்து வருவது மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களைவிசனம்அடைய வைத்துள்ளது. இது வேண்டும் என்றே செய்யப்பட்டு வரும் நடவடிக்கை என்றும் அவர்கள் சீற்றம் காட்டினர்.

இந்த அலுவலகத்தை நல்லிணக்க அமைச்சுக்குப் பாரப்படுத்தும் வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டபோதும், அலுவலகத்தைஅமைப்பதற்கான வர்த்தமானி அறி வித்தல் அந்த அமைச்சின்அமைச்சர் என்ற வகையில் அரச தலைவரால் இன்னும் விடுக்கப்பட வில்லை. இதனால் அந்த அலுவலகத்தை அமைக்கும் பணிகள் இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை. >> 25

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT



## அக்கரை கடற்கரையில் கலாசாரச் சீர்கேடுகள்

### அந்தப் பகுதி அமைப்புகள் ஆர்ப்பாட்டம்

தொண்டமானாறு, ஓக 15

தொண்டமானாறு அக்கரை உல்லாசக் கடற்கரைச் சாலையை மறித்து நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. உல்லாசக் கடற்கரையில் கலாசாரச் சீர்கேடுகள் நடக்கின்றன என்றும், கஞ்சா கடத்தலில் முக்கிய தளமாக அது மாறியுள்ளது என்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் குற்றஞ்சாட்டினர்.

அக்கரை கடற்றொழிலாளர் சங்கம், தொண்டமானாறு கடற்றொழிலாளர் சங்கம், அந்தப் பகுதி மாதர்சங்கம்என்பன இணைந்துஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருந்தன.

உல்லாசக் கடற்கரை அமைக்கப்படுவதற்கு முன்னர் இப்படியான சீர்கேடுகள் இங்கு இடம்பெறவில்லை. கோப்பாய் பிரதேச செயலரின் அனுமதியுடன் தனியார் ஒருவருக்கு இந்தக் கடற்கரை குத்தகைக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. இரண்டு உல்லாசப் பயணப் படகுகள் மாத்திரமே அங்கு பயன்படுத்தப்படும் என ஆரம்பத்தில் கூறப்பட்டது. தற்போது ஆறு உல்லாசப் படகுகள் பயன்படுத்தப்படுகின்றன. இதனால் வீச்சுவலை தொழிலில் ஈடுபடும் மீனவர்களின் தொழில் பாதிக்கப்படுகின்றது என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்தனர்.

இந்த சமூகக் கலாசாரச் சீரழிவுகளை நிறுத்துவதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்திய மக்கள், பிரதேச செயலரின் நடவடிக்கைகளுக்கும் எதிர்ப்புத் தெரிவித்தனர். கடற்கரைக்குச்செல்பவர்களையும் அவர்கள் தடுத்தனர்.

வடக்கு முதலமைச்சரின் செயலாளர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்களைச் சந்தித்தார். பிரச்சினை தொடர்பில் எழுத்து மூலம் தருமாறு கோரினார். அதற்கு உடன்படாத மக்கள் தமக்குத் தீர்வு கிடைக்கும் வரை போராட்டத்தை முன்னெடுப்போம் என்று தெரிவித்தனர். (ற-26)

## மன்னார் மீனவர்கள் பருத்தித்துறையில் கைது

பருத்தித்துறை, ஓக. 15

பருத்தித்துறைக் கடற்பரப்பில் சட்டவிரோதமான முறையில் எல்லைதாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட 4 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுஅதிகாலைமீன்பிடித்துக்கொண்டிருந்த போது, ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட கடற்படையினரால் அவர்கள் கைது செய்யப்பட்டுப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது. அவர்களிடமிருந்து இரு படகுகள் மற்றும் மீன் பிடிக்குப் பயன்படுத்திய உபகரணங்களை கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர். இது தொடர்பாக பருத்தித்துறைப் பொலிஸார் மேலதி விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ற-10, 101, 26, ரி)

## அத்துமீறிய தமிழக மீனவர் 4 பேர் கைது

பருத்தித்துறை, ஓக. 15

பருத்தித்துறைக் கடல்பகுதிக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் 4 பேர் நேற்று அதிகாலை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு நீரியல்வளத் திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இந்தியாவின் தங்கச்சிமடத்தைச் சேர்ந்த மீனவர்களே கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட 4 பேரும் கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டனர். அவர்கள் பருத்தித்துறை நீதிவான்நீதிமன்றில் முற்படுத்தினர். கைதான மீனவர்களை 28 ஆம் திகதி வரையில் விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

அதேவேளை கடந்த தினங்களில் அத்துமீறி மீன்பிடித்த குற்றச்சாட்டில் 65 தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (ற-10,101,26,8)

# கிராம அலுவலர்களின் அலுவலகங்களில் முறைப்பாட்டுப் பெட்டி

யாழ்ப்பாணம், ஓக.15

யாழ்ப்பாண பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் உள்ள கிராம சேவையாளர் அலுவலகங்களில் பொது மக்கள் முறைப்பாட்டுப் பெட்டி வைப்பது என்று யாழ்ப்பாணப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

யாழ்ப்பாணப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. அதிலேயே இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது.

கூட்டத்தில் கலந்துகொண்ட ஒருவர் யாழ்ப்பாணத்தின் கடற்கரையோர பிரதேசங்களில் போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ளது என்றும் அதைக் கட்டுபடுத்த பொலிஸார் உரிய நடவடிக்கை எடுப்பதில்லை என குற்றம் சாட்டினார்.

கடற்கரைப் பிரதேசத்தில் உள்ள கிராமங்களில் ஏராளமானோர் கஞ்சா பாவனையில் ஈடுபடுகின்றனர். கிராமங்களுக்கு வரும் வெளியிட இளைஞர்கள் அந்தக் கிராமத்தைச் சேர்ந்த சில இளைஞர்களுடன் சேர்ந்து கஞ்சா போன்ற போதை பாவனையில் ஈடுபட்டுவருகின்றனர் என அந்த கிராமங்களைச் சேர்ந்தவர்களும் சுட்டிக்காட்டினர்.

இந்த சம்பவங்கள் தொடர்பில் வெளிப்படையாக முறைப்பாடு செய்ய அச்சப்படும நிலை காணப்படுகின்றது. அதைப் பொருட்படுத்தாமல் சிலர் முறைப்பாடுகளைச் செய்தாலும் பொலிஸ் எவ்வித நடவடிக்கையும் எடுப்பதில்லை என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

இது தொடர்பாக இணைத் தலைவர்கள் பொலிஸாரிடம் வினவினர். தமக்கு அவ்வாறான முறைப்பாடுகள் கிடைப்பதில்லை. போதைப்பொருள் பாவனை அல்லது குற்றச் செயல்கள் தொடர்பான முறைப்பாடுகள் எமக்குக் கிடைத்தால் உரிய நடவடிக்கை எடுப்போம் என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

யாழ்ப்பாணப் பிரதேச செயலக பிரிவில் கடமையாற்றும் கிராம சேவகர்களின் அலுவலகத்தில் பொதுமக்களுக்கான முறைப்பாட்டுப் பெட்டி அமைக்கப்படும்.

பொதுமக்கள் அங்கு தமது முறைப்பாடுகளை இட முடியும். முறைப்பாடுகள் தொடர்பில் அந்தந்த பிரதேச கிராம சேவகர்களின் உதவியுடன் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு குற்றச்செயல்களை கட்டுப்படுத்தலாம் என்று கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (ற-8)

## குளத்துக்கு அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று

வதிரி, ஓக. 15

வதிரி கண்ணகி அம்மன் ஆலயத்துக்கு அருகில் குளம் அமைப்பதற்கான அடிக்கல் நடும் விழா இடம்பெற்றது. ஆலய நிர்வாக சபை செயலாளர் தலைமையில் நேற்றுக் காலை 11.30 மணியளவில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் க.தர்மலிங்கம் குளத்துக்கான அடிக்கல்லை நட்டார். குளத்துக்கான 25 பரப்புக் காணியை ஆலய நிர்வாகம் வழங்கியது. குளம் அமைப்பதற்கான 10 லட்சம் ரூபா நிதியை வடக்கு மாகாண உறுப்பினர் க.தர்மலிங்கம் தனது குறித்தொதுக்கப்பட்ட நிதியிலிருந்து வழங்கினார்.

அந்தக் காணியில் மழை காலங்களில் 9 அடி அளவுக்கு நீர் தேங்கி நிற்பது வழமை. அதைக் கருத்திற் கொண்டு நன்னீர் சேமிக்கும் முகமாக இந்தக் குளம் அமைக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

நிகழ்வில் பருத்தித்துறை பிரதேச செயலர் ஆழ்வாப்பிள்ளை ஸ்ரீ, நீர்ப்பாசனப் பொறியியலாளர்கள், ஆலய நிர்வாகத்தினர் மற்றும் பிரதேச மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ற10, 26, ரி)





## புதைக்கப்பட்ட சிசுவின் சடலம் லிந்துலையில் மீட்பு

கொழும்பு, ஓக. 15

லிந்துலை மட்டுகலை தோட்டத்தில் மரக்கறி பயிர் செய்யும் தோட்டத்தில் ஆண் சிசுவின் சடலம் மீட்கப்பட்டுள்ளது என்று லிந்துலை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்று லிந்துலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நடந்துள்ளது. தோட்டத்தைச் சேர்ந்த 23 வயதுடைய பெண் சுகவீனம் ஏற்பட்டு லிந்துலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அதையடுத்து அந்தப் பெண் சிசு ஒன்றைப் பிரசவித்த விடயம் மருத்துவர்களுக்கு தெரியவந்தது. பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. திருமணமாகிய இரண்டு பிள்ளைகளின் தாய் ஒருவர் தனது வீட்டில் வைத்து சிசு ஒன்றை பெற்றெடுத்துள்ளார். சிசுவின் தாயும், மூதாட்டி ஒருவரும், தாயின் மாமியாரும் சேர்ந்து சிசுவை கொலை செய்து மரக்கறி பயிரிடப்படும் தோட்டத்தில் புதைத்தனர் என்று ஆரம்ப கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்தது.

விசாரணைகளை ஆரம்பித்த பொலிஸார் சம்பவம் தொடர்பில் பெண்ணின் தாயையும், மாமியாரையும் கைது செய்துள்ளனர் என்று தெரிவித்தனர். சிசு புதைக்கப்பட்ட இடத்துக்கு நுவரெலியா மாவட்ட நீதிமன்றத்தின் பதில் நீதிவான் தயா நணயகார முன்னிலையில் சிசுவை தோண்டி எடுக்கப்பட்டு நுவரெலியா மாவட்ட மருத்துவமனைக்கு உடற்கூற்று பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ற-10)

யாழ்.பிரதேச செயலர் பிரிவில்

## காணியற்றோர் விவரத்தை மீளச் சேகரிக்கத் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஓக.15

யாழ்ப்பாண பிரதேச செயலக பிரிவில் காணி இல்லாதவர்களின் விவரங்களை மீளவும் சேகரிக்க வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் இணைத்தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

யாழ்ப்பாண பிரதேச செயலக பிரிவில் 2 ஆயிரத்து 343 பேர் வரையில் சொந்தமாக காணி இல்லாதவர்களாக காணப்படுகின்றனர் என அதில் சுட்டிக்காட்டப்பட்டது. காணி இல்லாதவர்களுக்கு காணிகளையும் வீட்டுத் திட்டங்களையும் வழங்க வேண்டிய தேவை உள்ளது என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

காணி இல்லாத முஸ்லிம் மக்களுக்கு பரச்சை வெளி பகுதியில் உள்ள தனியார் காணிகளைக் கொள்வனவு செய்து அவற்றை மேட்டு நிலக்காணிகளாக மாற்றியமைத்து வீடுகள் கட்டிக் கொடுப்பது தொடர்பில் ஆராயப்பட்டது. காணி இல்லாதவர்களின் சிலரது விவரங்கள் சேர்க்கப்படவில்லை என்றும் கூறப்பட்டது.

அதனால் யாழ்ப்பாணப் பிரதேச செயலகப் பிரிவில் காணி இல்லாதவர்களின் விவரங்களை மீள சேகரிப்பது என தீர்மானிக்கப்பட்டது. (ற-8)

## யானை தாக்கி பாகன் சாவு

கொழும்பு, ஓக.15
யானையின் தாக்குதலில் அதன் பாகன் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தச் சம்பவம் மொரகாஹேன, கன்னங்கர பிரதேசத்தில் நேற்று இடம்பெற்றது. மாத்தறைப் பிரதேசத்தைச் சேர்ந்த 40 வயதுடையவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (ற-10)



## வவுனியாவில் சடலம் மீட்பு

வவுனியா, ஓக.15
வவுனியா கோவிற்குளம் பகுதியில் அமைந்துள்ள விருந்தினர் விடுதியில் சடலம் நேற்று மீட்கப்பட்டது என்று வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர்.
மூன்று பிள்ளைகளின் தந்தையான அலேசு அருளப்பு ( வயது 58) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று தெரியவந்துள்ளது. பணியாளர்களின் ஓய்வறையில் கதிரையில் அமர்ந்தவாறு உயிரிழந்த நிலையில் சடலம் மீட்கப்பட்டுள்ளது.
வவுனியா கோவிற்குளம் பகுதியில் அமைந்துள்ள விருந்தினர் விடுதியின் மதுபானசாலைப் பகுதியில் கடமையாற்றும் அவர் தனது கடமைகளை முடித்து விட்டு விடுதியில் தங்கியுள்ளார். விடுதி அறைக்குச் சக ஊழியர் ஒருவர் நேற்றுக் காலை சென்ற சமயத்தில் கதிரையில் இறந்த நிலையில் இருந்துள்ளார். உடனடியாக வவுனியா பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ற-10)



# வாழும் உரிமையை எமக்குத் தாருங்கள்

கிளிநொச்சி, ஓக.15
எமது ஊரில் சென்று வாழ்வதற்கான உரிமையை நல்லாட்சி அரசு ஏற்படுத்தித்தர வேண்டும்.
இவ்வாறு தொடர் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் இரணைதீவு மக்கள் தெரிவித்துள்ளனர்.
கடற்படையினர் தமது பூர்வீக இடத்தை விடுவிக்க வேண்டும் என்று வலியுறுத்தி இரணைதீவு மக்கள் நடத்திவரும் போராட்டம் நேற்று 106ஆவது நாளாகவும் தொடர்ந்தது. கடந்த மே மாதம் முதல் மக்கள் போராட்டம் நடத்திவரும் நிலையில் அவர்களின் கோரிக்கை இதுவரை நிறைவேற்றப்படவில்லை.
தமது கோரிக்கையை நிறைவேற்றக் கோரி கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம், வீதி மறியல் போராட்டம் எனப் பலதரப்பட்ட போராட்டங்களை அந்த மக்கள் முன்னெடுத்தனர். கொழும்பிலும் அவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். எனினும் இதுவரை அவர்களுக்கு உரிய பதில் ஏதும் வழங்கப்படவில்லை.
தமது நிலங்களை விடுவித்து அங்கு நிம்மதியான வாழ்வை வாழ்வதற்கு உரிய நடவடிக்கைளை கூட்டரசு உருவாக்க வேண்டும் என்று போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
கூட்டரசின் மீது நம்பிக்கையிருக்கின்றது. எங்களின் நிலங்களை விடுவிக்க வேண்டும். எங்களின் நம்பிக்கைகள், ஆசைகள் வீண் போகாது. எங்களது நிலத்தைக் கூட்டரசு விடுவிக்க வேண்டும். வீதியில் கிடக்கும் எங்களை எமது நிலங்களில் குடியமர அனுமதிக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர். (ற)

## டெங்கால் ஒருவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஓக.15
டெங்குத் தொற்றால் மானிப்பாயைச் சேர்ந்த 30 வயதுடைய மருந்து விற்பனையாளர் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.
யாழ். நகரில் இயங்கும் தனியார் மருந்தகத்தில் மருந்து விற்பனையாளராகப் பணியாற்றும் மானிப்பாயைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான கா. இன்பராய் என்பவரே உயிரிழந்தவராவார்.
பணியின் நிமித்தம் கொழும்பு சென்றுவரும் இவர் காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளார். காய்ச்சல் அதிகமானதை அடுத்து நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். சிகிச்சை பயனின்றி நேற்று அதிகாலை அவர் உயிரிழந்தார்.
டெங்குத் தொற்றே உயிரிழப்புக்குக் காரணம் என்று கூறப்படுகின்றது. மருத்துவமனையில் தாமதமாகச் சேர்க்கப்பட்டமையே உடனடி உயிரழப்புக்குக் காரணம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற-10,101)



# செஞ்சோலை மாணவர்கள் நினைவேந்தல் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஓக.15
2006 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 14ஆம் திகதி வள்ளிபுனம், செஞ்சோலை வளாகத்தில் விமானக் குண்டுவீச்சில் கொல்லப்பட்ட மாணவர்களின் 11ஆவது ஆண்டு நினை வேந்தல் நேற்று நடைபெற்றது.
குண்டு வீச்சு நடத்தப்பட்ட செஞ்சோலை வளாகத்தில் நினைவேந்தல்கள் நடைபெற்றது. யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலும் நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது மட்ட க்களப்பிலும் நடைபெற்றது.
செஞ்சோலை வளாகத்தில் நடைபெற்ற நிகழ்வேந்தல் நிகழ்வில் பலர் கலந்து கொண்டு மாணவர்களுக்கு அஞ்சலி செலுத்தினர். உயிரிழந்த மாணவர்களின் உருவப் படங்களுக்கு மலர் தூவி, ஒளித்தீபம் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. உயிரி ழந்த மாணவர்களின் உறவினர்கள் கண்ணீர் விட்டழுத னர்.
நினைவேந்தல் நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு உயிரிழந்த மாணவர்களுக்கு அஞ்சலி செலுத்தினர் என்று தெரிவிக்கப்பட்டது.
யாழ். பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற நினைவேந்தல் நிகழ்வில் மாணவர்களின் உருவப் படங்களுக்கு மலர் தூவி மாணவர்கள் அஞ்சலி செலுத்தினர். மெழுகு வர்த்திகள் ஏற்றி நினைவேந்தினர்.
பல்கலைக் கழகத் துணை வேந்தர், பேராசிரியர்கள், மாணவர்கள் எனப் பலர் அதில் கலந்து கொண்டனர். மட்டக்களப்பு கோப் சென்டர் மண்டபத்தில் நினைவேந்தல்கள் நடைபெற்றன. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் ஏற்பாட்டில் தீபம் ஏற்றி அஞ்சலிக்கப்பட்டது. (ற-ரி,10,106)











## நெதஸ்டல் தோட்டத்தில் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஓக.15
அக்கரப்பத்தனை கிளாஸ்கோ தோட்டப் பிரிவான நெதஸ்டல் தோட்டத் தொழிலாளர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தினர்.
தோட்டத்தைச் சேர்ந்த சுமார் 125 தொழிலாளர்கள் அதில் கலந்து கொண்டனர். தோட்டத்தின் தொழிலாளர்களின் வருமானத்தைப் பாதிக்கும் வகையில் நல்ல விளைச்சலைத் தரக்கூடிய தேயிலைச் செடிகள் அடங்கிய தேயிலை மலையின் செயற்பாடுகள் முடக்கப்பட்டுள்ளன. தோட்டத்தில் முறையான சுகாதாரத்தைப் பேணும் வகையில் மருத்துவர் ஒருவர் இல்லை, ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளிலும் பின்னடைவு என்று தெரிவித்து தோட்ட நிர்வாகத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. முழு நாள் பணிப் புறக்கணிப்பையும் தொழிலாளர்கள் முன்னெடுத்தனர். (ற-10,43)



## வவுனியாவில் இருந்து நல்லூருக்கு யாத்திரை

வவுனியா, ஒக. 15
வவுனியாவிலிருந்து 7ஆவது தடவையாக நல்லூருக்கு வேல் தாங்கிய பாத யாத்திரை நேற்றுக் காலை ஆரம்பமானது. வேப்பங்குளம் ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயத்திலிருந்து ஆரம்பமான யாத்திரையில் பெருமளவு பக்தர்கள் கலந்து கொண்டனர்.

பாத யாத்திரை 20ஆம் திகதி நல்லூர்க் கந்தன் ஆலயத்தை வந்தடையவுள்ளது. பாத யாத்திரை செல்லும் பிரதான வழியில் இருக்கும் ஆலயங்களில் பூசை வழிபாடுகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. ஆலயங்களின் நிர்வாக சபையினர் வேல்தாங்கிய பாதயாத்திரிகர்களுக்கு தேவையான ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும் என்று வவுனியா வேப்பங்குளம் ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலய பரிபாலகர் சபையின் தெரிவித்தனர். (ற-10)

# சுகாதார அபிவிருத்திக்கான நிதி திரும்பினால் விக்கியே பொறுப்பு

### முதலமைச்சர் மீது முன்னாள் அமைச்சர் சத்தியலிங்கம் காட்டம்

வவுனியா, ஒக. 15
மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் நடைமுறைப்படுத்தவதற்கு திட்டமிடப்பட்டுள்ள சுகாதார அபிவிருத்தி திட்டங்களுக்காக நெதர்லாந்து அரசு 14 ஆயிரம் மில்லியன் ரூபா வழங்க ஒப்புதல் வழங்கியுள்ளது. அந்த நிதி திரும்பச் சென்றால் அதற்கான முழுப்பொறுப்பை முதலமைச்சரே ஏற்கவேண்டும். இவ்வாறு வடக்கு மாகாண முன்னாள் சுகாதார அமைச்சர் மருத்துவர் ப. சத்தியலிங்கம் தெரிவித்தார்.



வவுனியா சேமமடுவில் புதிதாக அமைக்கப்படவுள்ள கிராமிய மருத்துவமனைக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. அதில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது;
கடந்த வருடம் இந்தப் பிரதேசத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் மருத்துவமனை ஒன்றின் தேவை பற்றி பொது மக்களால் கோரிக்கைவிடுக்கப்பட்டது. இந்த பிரதேசத்தில் மருத்துவமனையின் அவசியம் உணரப்பட்டாலும் அதற்கான நிதியை ஒதுக்கீடு செய்வதில் பிரச்சினை இருந்தது. எமது மாகாணத்துக்கான கொழும்பு அரசின் நிதியொதுக்கீடானது மூன்றில் ஒன்றாக குறைக்கப்பட்ட நிலையில் அபிவிருத்தி வேலைகளை செய்வது பிரச்சினையாக இருந்தது. நிதியொதுக்கீடு போதாதென்று கொழும்பு அரசை வசைபாடுவதை தவிர்த்து நிதியை பெறுவதற்கான புதிய மூல உபாயங்களை பயன்படுத்தி செயற்பட்டோம்.

வடக்கின் ஐந்து மாவட்டங்களிலும் தெரிவுசெய்யப்பட்ட பொது மருத்துவமனைகளில் சிறப்பு மருத்துவ அலகுகளை அமைப்பதற்கு நெதர்லாந்து அரசு மத்திய அரசினூடாக 14 ஆயிரம் மில்லியன் ரூபா நிதியை வழங்க முன்வந்தது. இந்த பெரும்தொகை நிதியை பெற்றுக்கொள்வதற்கு எனக்கு இந்த மாகாணத்தில் யாரும் வழிகாட்டவுமில்லை. அதற்காக பாராட்டவும் இல்லை.

மத்திய சுகாதார அமைச்சால் எமது மாகாணத்துக்கு ஒதுக்கப்படும் நிதி இங்குள்ள தேவைகளை பூர்த்தி செய்யக்காணாமல் உள்ளது. அவர்கள் நாட்டின் ஏனைய எட்டு மாகாணங்களைப்போலவே எம்மையும் பார்க்கின்றார்கள். கொழும்பு சுகாதார அமைச்சிடம் பேசி அவர்களின் அனுமதியுடன் வெளிநாட்டு நிதி வழங்குநர்களிடமிருந்தும் இவ்வாறான நிதியுதவிகளைப் பெற்று இந்த மாகாணத்தின் சுகாதாரத் துறையை அபிவிருத்தி செய்ய செயற்பட்டு வந்தேன். இவ்வாறாக செயற்படும் என்னைப் போன்றவர்கள் மீது கேட்பார் கதை கேட்டு பொய்க் குற்றச்சாட்டுகளை முன்வைத்து வெளியில் துரத்துவதற்கே ஆர்வமாக செயற்படுகின்றார்கள் - என்றார்.

வடக்கு மாகாண முன்னாள் சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கத்தின் வேண்டுகோளுக்கு இணங்க கொழும்பு மறுவாழ்வு அமைச்சின் சுமார் 5மில்லியன் ரூபா நிதியில் இந்த மருத்துவமனை கட்டப்படுகின்றது. அதற்கான அடிக்கல் நேற்றுக் காலை நடப்பட்டது. வவுனியா பிரதேச சபையின் முன்னாள் தலைவர் க.சிவலிங்கம் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது. (ற-10,101)

# கிழக்குப் பல்கலைக் கழக மாணவர்கள் ஊர்வலம்

### பல கோரிக்கைகளை வலியுறுத்தி

மட்டக்களப்பு, ஒக. 15
கிழக்குப் பல்கலைக் கழகத்தில் மாணவர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நேற்று ஊர்வலம் நடத்தினர்.

விடுதிப் பிரச்சினைக்கு உடனடியாக தீர்வு வழங்க வேண்டும். விடுதி வசதி ஏற்படுத்தக் கோரி நடத்தப்பட்ட போராட்டங்களுக்குத் தலைமைதாங்கிய மாணவ தலைவர்களுக்கு வழங்கப்பட்ட வகுப்புத்தடையை உடனடியாக நீக்க வேண்டும் போன்ற கோரிக்கைகளை அவர்கள் முன்வைத்தனர்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மட்டக்களப்பு வந்தாறுமூலை வளாக நிர்வாகப் பகுதியிலிருந்து ஊர்வலமாகச் சென்ற மாணவர்கள் பிரதான வீதியோரத்தில் கோரிக்கைகள் அடங்கிய பதாகைகளை ஏந்தி கோசங்கள் எழுப்பினர்.

மாணவர்களோ வீதியில் துணைவேந்தரோ மாடி வீட்டில், துணைவேந்தர் மறைந்திருந்தது போதும், மாணவர்களை நீதிமன்றத்துக்கு அழைப்பதை நிறுத்து, விடுதி வசதிகளை வழங்கு, நியாயமான முறையில் போராடும் மாணவர்களுக்கு வழக்குக்கு அழைப்பது மோசமான செயல், நிர்வாகமே போலி நாடகத்தை நிறுத்து, வகுப்புத் தடைகளை நிறுத்து போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை அவர்கள் ஏந்தியிருந்தனர்.

"கிழக்குப் பல்கலைக் கழகத்தில் கல்வி பயிலும் இரண்டாம் வருட மாணவர்கள் அனைவரும் விடுதிகளிலிருந்து வெளியேற வேண்டும் என்று பல்கலைக் கழக நிர்வாகம் அறிவித்துள்ளது. மாணவர்களுக்கு விடுதி வசதி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று மாணவர்கள் கடந்த சில தினங்களாக போராட்டத்தில் ஈடுபட்டு நிர்வாகக் கட்டடத்தில் குடியேறியுள்ளனர்.

நாங்கள் போராட்டங்களில் ஈடுபடுகின்ற போதிலும் பல்கலைக்கழக நிர்வாகத்தால் எந்த வித சாதகமான பதிலும் கிடைக்கவில்லை. எமது சக மாணவர்கள் 17 பேருக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு பதிவுசெய்யப்பட்டுள்ளது. விடுதிகளிலிருந்து வெளியேறாத மாணவர்கள் பரீட்சைகளில் தோற்றுவதற்கும் தற்போது தடை விதிக்கப் பட்டுள்ளது.

பல்கலைக் கழகத்தை அண்டிய பகுதியில் வீடுகளைப் பெறுவதில் பெரிய சிரமம் ஏற்பட்டுள்ளது. செலவும் அதிகம் ஏற்படுகிறது. பல்கலைக் கழக நிர்வாகம் வழங்கும் கொடுப்பனவுகளைக் கூட குறித்த காலத்தில் வழங்குவதில்லை"என போராட்டத்தில் கலந்து கொண்ட மாணவர்கள் தெரிவித்தனர்.(ற-10,47)



## பொலிஸ் காவலரணில் பொலிஸின் சடலம் மீட்பு

மட்டக்களப்பு, ஒக. 15
மட்டக்களப்பு காத்தான்குடி, கர்பலா பொலிஸ் காவலரணில் இருந்து, பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் சடலம் நேற்றுக் காலை மீட்கப்பட்டது என்று தெரிவிக்கப்படுகிறது.

காவலரணில் கடமையாற்றும் கந்தேவத்த கெத்தர முல்லையை சேர்ந்த எஸ்.திலகரத்ன (வயது44) என்ற பொலிஸ் உத்தியோகத்தரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கஸ்தூரி ஆராச்சி தெரிவித்தார்.

காலையில் கடமைக்காகச் சென்ற பொலிஸ் உத்தியோத்தர், அந்த பொலிஸ் உத்தியோகத்தரை எழுப்பியுள்ளார். அசைவற்ற நிலையில் அவர் இருந்தார். பின்னர் அவர் உயிரிழந்தமை தெரிய வந்துள்ளது. மாரடைப்புக் காரணமாக பொலிஸ் அதிகாரி உயிரிழந்திருக்கலாம் என ஆரம்பக் கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது என்றுகாத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ற10,46,ரி)

## ஷிரந்தி, யோசித விசாரணைக்கு அழைப்பு

கொழும்பு, ஒக.15
றகர் வீரர் வசீம் தாஜுதீன் கொலை தொடர்பில் விசாரணை மேற்கொள்ள முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் மனைவி ஷிரந்தி ராஜபக்ச மற்றும் மகன் யோசித ராஜபக்ச ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

தாஜு தீனின் கொலைச் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு இதற்கு முன்னரும் ஷிரந்தி ராஜபக்சவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. உடல் நிலை சரியின்மையைக் காரணம் காட்டி வேறொரு தினத்தை வழங்க வேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்திருந்தார். அதையடுத்து ஷிரந்தி ராஜபக்சவை நேற்றும், யோசிதவை இன்றும் விசாரணைக்கு முன்னிலை யாகு மாறு அறிவுறுத்தப்பட்டிருந்தது. எனினும் திடீர் சுகவீனம் காரணமாக திகதிகளை மாற்றம் செய்யுமாறு மீண்டும் கோரப்பட்டது. அதையடுத்து நாளையும், நாளை மறுதினமும் விசாரணைக்கு முன்னிலையாகுமாறு கூறப்பட்டுள்ளது.

தாஜு தீனின் கொலையுடன் சம்பந்தப்பட்ட நபர்கள் ஷிரந்தியின் பாதுகாவலர்களின் டிபெண்டர் வாகனங்களைப் பயன்படுத்தினர் என்று ஷிரந்திக்கு எதிராகக் குற்றச்சாட்டு முன்வைக்கப் பட்டுள்ளது. 2007ஆம் ஆண்டு வசீம் தாஜுதீன் நாரஹேன்பிட்டிப் பகுதியில் கார் ஒன்றுக்குள் இறந்திருந்த நிலையில் மீட்கப்பட்டார். (ற)

## மரத்துடன் மோதி இளைஞன் காயம்

சாவகச்சேரி, ஒக. 15
சாலையின் குறுக்கே நாய் ஓடியதால் சாலையோரத்துக்குச் செலுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள் மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானது. அதில் இளைஞர் ஒருவர் காயமடைந்தார். இந்தச் சம்பவம் நேற்றுக்காலை பளையில் நடந்துள்ளது.


வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த 25 வயதுடையவரே முகத்தில் காயமடைந்தார். அவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். (ற-10,9)

## தனியார்துறையில்இணைய இளையோருக்கு வாய்ப்பு

### *300 வெற்றிடங்கள் உள்ளதென யாழ். செயலர் அறிவிப்பு*

யாழ்ப்பாணம் ஒகஸ்ட் 15
யாழ்ப்பாண மாவட்டத்தில் தொழில் தேடுவோருக்கான வேலைவாய்ப்புக்கள்பெற்றுக்கொடுக்கப்படவுள்ளன. முன்னணி தனியார் நிறுவனம் ஒன்றில் எட்டு வகையான 300 வெற்றிடங்களுக்கு ஆட்கள் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர் என யாழ்ப்பாண மாவட்டச்செயலாளர் நா. வேதநாயகன் அறிவித்துள்ளார்.

மாவட்டப் பொதுமக்கள் தொழில் சேவை மத்திய நிலையம் நடைமுறைப்படுத்திவரும்நடவடிக்கைகளின்தொடர்ச்சியாகவே இந்த தொழில் வாய்ப்புக்களும் பெற்றுக்கொடுக்கப்படவுள்ளன. தொழில் வெற்றிடங்களுக்கான நேர்முகத்தேர்வு எதிர்வரும் 17,18,19ஆம் திகதிகளில் முற்பகல் 9 மணிக்கு யாழ்ப்பானம் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளன. ஜி.சி.ஈசாதாரணதரப்பரீட்சைசித்தியடைந்தவர்கள்மற்றும் உயர்தரம் சித்தியடைந்த 30 வயதுக்குட்பட்ட ஆண் பெண் விண்ணபதாரிகள் நேர்முகத் தேர்வில் பங்குபற்றி தொழில் வாய்ப்பைப்பெற்றுக்கொள்ளலாம். இதுதொடர்பில்மேலதிக தகவல்களைப் பெறுவதற்கு 0212219359 என்ற தொலைபேசி இலக்கத்தின்ஊடாகவும், அல்லதுயாழ்ப்பாணம்மாவட்டச் செயலகத்தின் பொதுமக்கள் தொழில் சேவை மத்திய நிலையத்தில் நேரடியாகவும் தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட செயலாளர் கேட்டுக்கொண்டார். (21.8)



கிளிநொச்சி பன்னங்கண்டியில் நீர்ப்பாசன வாய்க்காலுக்குள் உழவு இயந்திரம் ஒன்று பாய்ந்து புரண்டது. சம்பவம் நேற்று இடம்பெற்றது. சாலையில் பயணித்துக்கொண்டிருந்தபோது இவ்வாறு தடம்புரண்டதாகத் தெரிவிக்கப்பட்டது. பின்னர் கனரக பாரந்தூக்கி மூலமாக வெளியே எடுக்கப்பட்டது என்று மேலும்தெரிவிக்கப்பட்டது. (4,ய)

## நல்லூர்கச்சான்வியாபாரிகளின் பொலித்தீன் பாவனை குறைப்பு

யாழ்ப்பாணம் ஒக.15
யாழ்ப்பாணம் நல்லூர்க் கந்தன் ஆலய வருடாந்தத் திருவிழாவில், கச்சான் வியாபாரத்தில்ஈடுபடுவோர்பொலித்தீன் பாவனையை இயன்றளவு குறைத்துள்ளதை காண்முடிகின்றது.

நாட்டில் பொலித்தீன் பாவனையைத் தடைசெய்ய பல்வேறுதரப்பினரும்நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

ஆலயத்தின் வளாகத்தில் திருவிழாக் காலங்களில் பொலித்தீன் பாவனையை யாழ்ப்பாணம்மாநகரசபை தடைசெய்திருந்தது.

இதற்கு அமைவாக நல்லூர் ஆலயத்தில்கச்சான்வியாபாரத்தில்ஈடுபடுவோர்பொலித்தீன் பைககளில் விற்பனை செய்வதனைக்குறைத்துள்ளனர். அத்துடன் அவர்களின் விற்பனைநிலையங்களின் முன்பு பொலித்தீன் தடைசார்பானதுண்டுப்பிரசுராங்களும் ஒட்டப்பட்டிருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. (ய,ரி)

## விடத்தற்பளைகிராமத்தில் இலவச மருத்துவ முகாம்

தென்மராட்சி, ஒக.15
தென்மராட்சி கிழக்கு விடத்தற்பளை பிரிவு மக்களுக்கானதொற்றாநோய்க்கான இலவச பரிசோதனை முகாம் இன்று செவ்வாய்க்கிழமைகாலை9.00மணி தொடக்கம் மதியம் 12.00 மணி வரை விடத்தற்பளை கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில்நடைபெறும். சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகம் இதனைஏற்பாடுசெய்துள்ளது.

நாட்டில் தொற்றா நோய்களால் பாதிக்கப்பட்டு வருபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுவதைக் கவனத்திற் கொண்டு இந்த மருத்துவமுகாம் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது.

பரிசோதனை முகாமில் குருதிப்பரிசோதனை,குருதி அமுக்க பரிசோதனை, உடற்றிணிவுச் சுட்டி, கண்பார்வை பரிசோதனை மற்றும் சளிப் பரிசோதனை போன்றவை மேற்கொள்ளப்படவுள்ளன.

அதில் பங்குபற்றிப் பயனடையுமாறு பொதுமக்கள் கேட்கப்பட்டுள்ளனர். (ய,9)

### துன்னாலை துப்பாக்கிச் சூடு:

# இதுவரை 78 பேர் கைது 17 பேர் தேடப்படுகின்றனர்

### உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஒக. 15
"துன்னாலையில் அண்மையில் இடம்பெற்ற அசாதாரண சூழ்நிலை யுடன் தொடர்புடைய சந்தேகத்தில் இதுவரை 78 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இன்னும் 17 பேர் தேடப்படுகின்றனர்" என்று காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பிரியந்த தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

துன்னாலையில் திருட்டு மணல் ஏற்றியதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவர் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டார். அதனைத் தொடர்ந்து துன்னாலை யில் அசாதாரண நிலை ஏற்பட்டது. குழப்பம் விளைவித்த குற்றச்சாட்டில் அதேகிராமத்தைச் சேர்ந்த 78பேர் இதுவரை கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில் 40பேர் பொலிஸ்பிணையில் விடுவிக்கப்பட்டனர். மிகுதி 38பேரும்நீதிமன்றில்முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இந்த சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்டவர்களில் பெரும்பாலானோர் 18 தொடக்கம் 25 வயதுக்குட்பட்ட இளைஞர்கள்.

பொலிஸாரின் வாகனத்தைச் சேதமாக்கியமை, பொலிஸ் காவலரணை அடித்து நொறுக்கியமை, வன்முறைகளில் ஈடுபட்டமை, சாலைகளில் ரயர்களைப் போட்டு எரித்து போக்குவரத்துக்கு இடைஞ்சல் விளைவித் தமை மற்றும் சிறப்பு அதிரடிப்படையின ரின் வாகனத்துக்குக் கல்லால் எறிந் தமை போன்ற குற்றச்சாட்டுக்களில் இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடையவர்களாக அடையாளப்படுத்தப்படும் 17பேர் தலைமறைவாகியுள்ளனர். அவர்களைக் கைதுசெய்வதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளோம். பொலிஸாரால் மேற்கொண்ட தேடுதல் வேட்டையில் இதுவரை 16மோட்டார் சைக்கிள்கள், 16 கன்ரர் ரக வாகனங்ககள், 2 பட்டா ரக வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

உரிய வாகன அனுமதிப்பத்திரங்கள் இல்லாமை, வாகனங்களின் உரிமையாளர்களைச் சரியாக அடையாளப்படுத்தாமை உள்ளிட்ட காரணங்களால் அவை கைப்பற்றப்பட்டன.

அவற்றுள் பட்டா ரக வாகனம் ஒன்று உரிமையாளர் உரிய அனுமதிப் பத்திரங்களைச் சமர்ப்பித்ததால் விடுவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ள வாகனங்களின் உரிமையாளர்கள் தமது வாகனங்கள் தொடர்பில் உரிய அனுமதிப்பத்திரங்களைச் சமர்ப்பித்தால் அவை பரிசீலனை செய்யப்பட்டு அவற்றை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

துன்னாலைப் பகுதியில் இருந்த சிறப்பு அதிரடிப்படையினர் சில நாள்களுக்கு முன்னர் முழுமையாக அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர். தற்போது வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, நெல்லியடி பொலிஸ் நிலைய பொலிஸார் இணைந்து அங்கு பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அண்மைய நாள்களாக சட்டவிரோத மணல் கடத்தல் முழுமையாகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது -என்றார். (ய.4.8.26)

## திருட்டுக் குற்றச்சாட்டில் இருவர் நேற்றுக் கைது

யாழ்ப்பாணம், ஒக.15
யாழ்ப்பாணம் பலாலிப் பகுதியில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள்என்றகுற்றச்சாட்டில் இருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டனர் என அச்சுவேலிப்பொலிஸார் தெரிவித்தனர்.

"பலாலிஅன்ரனிபுரம்பகுதியில்உள்ள வீடு ஒன்றில் நேற்றுமுன்தினம் இரவு தங்கச் சங்கிலி உட்பட பொருள்கள் திருடப்பட்டன. இதுதொடர்பாகவீட்டின் உரிமையாளர் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கினர்.

சம்பவம்தொடர்பான விசாரணைகள் இடம்பெற்றன. அந்தத் திருட்டுடன் தொடர்புடையவர்கள்என்றகுற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் இருவரும் அதே இடத்தைச் சேர்ந்தவர்கள். விசாரணைகளின் பின்னர் இருவரும் நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்படுவர்" என்று அச்சுவேலிப்பொலிஸார்மேலும்தெரிவித்தனர். (வ-21,26)



தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தின் ஏற்பாட்டில், தென்மராட்சிவிழா அண்மையில் நடைபெற்றது.
இதில், பிரிட்டிஷ் கவுன்சில் யாழ்ப்பாண கிளையால் நடத்தப்பட்ட ஆங்கில பாடம்கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான பயிற்சி நெறியில் கலந்துகொண்ட 22ஆசிரியர்களுக்கு கிளை முகாமையாளர் திருமதி றொபேக்கா ரௌன்சன் சான்றிதழ்களை வழங்கினார். சாவகச்சேரி பொன்விழா மண்டபத்தில் விழாநடைபெற்றது. (ய,9)

## போதை ஒழிப்பு தேசிய நிகழ்வில் வடக்கு இளைஞர்கள் பங்கேற்பு

யாழ்ப்பாணம் ஒக.15
தேசியரீதியில் நடைபெற்ற தேசிய இளைஞர்கள்சேவைகள்மன்றத்தின் போதைப்பொருளுக்குஎதிரானவிழிப்புணர்வுநிகழ்வில், வடக்குமாகாணத்தில் இருந்து நூற்றுக்கும் அதிகமான இளைஞர்கழக உறுப்பினர்கள்பங்குபற்றியுள்ளனர் என்று யாழ்ப்பாண மாவட்ட இளைஞர்கழகப்பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

இதுபற்றி மேலும் தெரிவித்ததாவது, வருடம்தோறும்தேசிய இளைஞர்கள் சேவைகள்மன்றத்தினால் ஒவ்வொரு தொனிப்பொருளின்கீழ்விழிப்புணர்வு நிகழ்வுகள்நடைபெற்றுவருகின்றன. நடப்பு வருடத்தில் போதைப்பொருள் தொடர்பானவிழிப்புணர்வுகொழும்பு சுதந்திரசதுக்கத்தில்கடந்த12ஆம்திகதி சனிக்கிழமை நடைபெற்றது.

இதில் நாடளாவிய ரீதியில் இளைஞர் கழக உறுப்பினர்கள் மற்றும் 'இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். இந்த நிகழ்வில் வடக்கு மாகாணத்தில் இருந்து அதிமான இளைஞர் கழகப் பிரதி நிதிகள் கலந்துகொண்டனர். வடக்கு மாகாணத்தில் இளைஞர் கழகங்களின் செயற்பாடுகள் தற்பொழுது அதிகளவு இடம்பெறுகின்றன. இவ்வாறானநீண்ட தூரப்பயணங்களின்போதுஎமதுநட்பு வட்டம்விருத்திசெய்யப்படுகிறது எனத் தெரிவிக்கப்பட்டது. (ய,ரி)

## ஹெரோயின் வைத்திருந்த ஒருவர் ஆனைக்கோட்டையில் சிக்கினார்

ஆனைக்கோட்டைப் பகுதியில் ஹெரோயின் போதைப் பொருளை வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் யாழ்ப்பாண பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஆனைக்கோட்டை சந்தியில் குறித்த சந்தேகநபர் சந்தேகத்துக்கிடமாக நடமாடியுள்ளார். இவர்மீது சந்தேகம் கொண்ட யாழ்ப்பாண பொலிஸார் சோதனையிட்டுள்ளனர். அப்போது அவரின் அந்தரங்கப்பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாகக் கூறப்படும் ஹெரோயின் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்ட நபர் 23 வயதுடையவர். இவர் நல்லூர்ப் பகுதியைச் சேர்ந்தவர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். இவரிடமிருந்து 80 மில்லிகிராம் ஹெரோயின் மீட்கப்பட்டதா கவும் தெரிவித்தனர். கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாண நீதிவான் நீதி மன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார். இவரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ய,ரி,1)

### சைக்கிள் காவல் நிலைய கட்டண விவகாரம்:

# அறிவுறுத்தலை மீறுவோரை பிடிக்க ஆணையாளர் களத்தில்

யாழ்ப்பாணம், ஓக. 15

நல்லூர் ஆலய சூழலில் அமைந்துள்ள துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையங்கள் யாழ்ப்பாண மாநகர சபையின் அறிவுறுத்தல்களை மீறினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநகர சபையின் ஆணையாளர் பொ.வாகீசன் எச்சரித்துள்ளார்.

அது தொடர்பில் கடந்த இரண்டு நாள்களில் கள ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டன என்று அவர் தெரிவித்தார்.

நல்லூர் ஆலய திருவிழாவை முன்னிட்டு அமைக்கப்பட்டுள்ள துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையங்களுக்கு மோட்டார் சைக்கிள்களுக்கு 10 ரூபா மட்டுமே அறவிடுவதற்கு அனுமதிக்கப்பட்டது. எனினும் அவர்கள் 20 ரூபா கட்டணத்தை அறவிடுவது தொடர்பில் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அவ்வாறு அறிவுறுத்தலை மீறிச் செயற்படுவொருக்கு எதிராக பாவனையாளர் பாதுகாப்பு அலுவல்கள் அதிகார சபையின் ஊடாக பொலிஸாரின் உதவிய ன் கைது செய்து சட்டத்தின் மு ா நிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிள்களுக்கு 20 ரூபா அறவிடுவதுடன் தலைக் கவசத்துக்கான கட்டணமும் தனித்து அறவிடப்படுவதாக குற்றம் சுமத்தப்பட்டதோடு ஆதாரமாக பல துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையங்களின் சிட்டைகளும் எம் ிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளன.

இது தொடர்பில் கடந்த இரண்டு நாள்களாக பரிசீலனையில் ஈடுபட்டோம். அதன்போது எமக்கு 10 ரூபா சிட்ட டயை காண்பிக்கப்பட்டது. என் னும் ஒரு பாதுகாப்பு நிலையம் மட்டும் 20 ரூபா சிட்டையை எமக்கே வழங்கியிருந்தது. எனவே எமக்கு கிடைத்த ஆதாரங்கள் அனைத்தையும் நடவடிக்கை எடுக்கும் நோக்கில் உடனடியாக பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையிடம் பாரப்படுத்துகின்றோம்.

மேலும் அடியார்கள் சிட்டைக்காக 20 ரூபா செலுத்தவேண்டிய அவசியம் கிடையாது. 10 ரூபா மட்டுமே செலுத்தினால் போதுமானது.

20 ரூபா கோரினால் சிட்டையின் மறுபக்கம் மாநகர சபையின் றப்பர் முத்திரை பொறிக்காத சிட்டைகளாயின் எம்மிடம் அவற்றை ஒப்படைத்தால் குறித்த பாதுகாப்பு நிலையத்துக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இதேவேளை அறவிடும் கட்டணம் தொடர்பில் சகல பாதுகாப்பு நிலையமும் உடனடியாக அறிவித்தலை காட்சிப்படுத்த வேண்டும். காட்சிப்படுத்தாத நிலையங்களுக்கு மாநகர சபையின் சலுகைகள் உடன் நிறுத்துவது தொடர்பில் அல்லது அவர்களுக்கான உரிமையை நீக்குவது தொடர்பில் ஆராயப்படுகின்றது. அவ்வாறு நிறுத்தினாலும் அவர்கள் வழங்கிய முற்பணம் மீளச் செலுத்தப் படமாட்டாது - என்றார்.

(வ-101)

## 30 இலங்கையர்கள் சுமத்ரா தீவு அருகே நடுக்கடலில் மீட்பு

ஜகார்த்தா, ஓக. 15

இந்தோனேசியாவில் சுமத்ரா தீவுக்கும் நியாஸ் தீவுக்கு இடையே படகில் தத்தளித்த இலங்கை அகதிகள் 30 பேர் மீட்கப்பட்டுள்ளனர் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இவர்கள் நியூசிலாந்து மற்றும் ஆஸ்திரேலியாவில் தஞ்சமடைய திட்டமிட்டிருந்தனர் என்று தெரிய வந்துள்ளது. இலங்கையில் தொடர்ந்து வரும் பாதுகாப்பற்ற சூழல் காரணமாக நாட்டை விட்டு வெளியேறியதாக அவர்கள் விசாரணையில் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் இலங்கையிலிருந்து கடந்த ஜூலை மாதம் புறப்பட்டுள்ளனர். அவர்கள் சென்ற படகின் இயந்திரம் பழுதானதால் நியாஸ் தீவுப்பகுதி அருகே தத்தளித்துள்ளனர்.

மீட்கப்பட்ட அனைவரும் குனுங் சிடோலி என்ற துறைமுகத்துக்குக் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

வட சுமத்ராவில் உள்ள சிபோல்கா குடிவரவுத்துறை அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ள இவர்கள் இலங்கைக்கு நாடு கடத்தப்படக்கூடும் எனக் கூறப்படுகின்றது.

(வ)



செஞ்சோலை மாணவிகளின் படுகொலை நினைவு நாள் நேற்று இரவு முல்லைத்தீவு செம்மலையில் கடைப்பிடிக்கப்பட்டது. மாணவிகளுக்கு பொதுச் சுடர்ஏற்றி அஞ்சலிசெலுத்தப்பட்டது. அவர்களுடைய நினைவாக தென்னம் கன்றுகளும் நடப்பட்டன. நிகழ்வில் மாணவிகளின் உறவினர்கள் பங்கேற்றனர். (வ-21)

## சர்ச்சைக் காணொலியால் இணையத்தில் பரபரப்பு

பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர பொலிஸ் தலைமையக ஊழியர்களைத் தாக்குகிறார் என்று கூறி இணையத் தளங்களில்வெளியான காணொலி சமூகவலைத்தளங்களில்நேற்று வைரலாகப் பரவியது. அந்தக் காணொலி தொடர்பில் பலராலும் பரபரப்பாகப் பேசப்பட்டது.




அதனை லங்கா இ நியூஸ் இணையத்தில் கிசு கிசு (கோசிப்) பகுதியில் வெளியிடப்பட்டது.

இந்தக் காணொலியில் லிப்ட் இயக்குபவராகப் பணிபுரியும் சமரக்கோன் பண்டா என்பவரை சில தினங்களுக்கு முன் தாக்கியதாக அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது. எனினும் இந்தக்காணொலியின் உண்மைத் தன்மை குறித்து இதுவரை பொலிஸார் எந்தத் தகவலையும் வெளியிடவில்லை.

இதுதொடர்பில் பொலிஸ் பேச்சாளருடன் தொடர்புகொண்ட போதும் அவரிடமிருந்து பதில் கிடைக்கவில்லை. (வ-21)

## கஞ்சாவுடன் ஒருவர் நல்லூரில் சிக்கினார்

யாழ்ப்பாணம், ஓக. 15

யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் கஞ்சா போதைப்பொருளுடன் இளைஞர் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பைச் சேர்ந்த அவர் நல்லூர் ஆலயத்துக்கு வருகை தந்த அடியவர் ஒருவரின் பணத்தை திருடியுள்ளார். அது தொடர்பான விசாரணையில் கைது செய்யப்பட்ட அவரிடம் சோதனைமேற்கொள்ளப்பட்டது. அதன்போது கஞ்சா போதைப் பொருளை அவர் வைத்திருப்பது தெரியவந்தது என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (வ-21)

## தீப வழிபாடு

யாழ்ப்பாணம்,ஓக. 15

நீர்வேலி தெற்கு மனோன்மணி அம்மன் ஆலய ஆடிச் செவ்வாய் உற்சவம் இன்று நடைபெறும். முற்பகல் 10 மணிக்குசிறப்புபூசைகள் அபிஷேகம் இடம்பெற்று தீப வழிபாடுநடைபெறும்.

(4,17)

# நல்லூரில் இன்று

### இசை அர்ச்சனை

யாழ்ப்பாணம், ஓக.15

யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் கார்த்திகை திருவிழாவின்போது, வழமைபோல இவ்வாண்டும் இசை அர்ச்சனை நடைபெறும் என்று இசைக் கலைஞர் கள் சார்பில் தெரி விக்கப்பட்டுள்ளது.

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த பெருந் திருவிழாவில் இன்று 15ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கார்த்திகை திருவிழா நடைபெறும். திருவிழாவில் மாலைநேர நிகழ்வுக ளின்போது ஆலய உள் வீதியில் அனைத்து இசைக் கலைஞர்களும் இணைந்து ஆலயத்தின் எட்டுத் திசையிலும் வழங்கும் இசை அர்ச்சனை இன்று நடை பெறும். எனவே இசைக் கலைஞர்களை ஒன்றுகூடி இந்த நிகழ்வில் இசையால் இறைவனை அடைய வேண்டும் என்று மேலும் தெரி விக்கப்பட்டுள்ளது.

(ய,ரி)

++++++++++++++++++++++++

### துர்க்கா மணி மண்டபத்தில் பாட்டு

யாழ்ப்பாணம்,ஓக. 15

நல்லூர் திருவிழா காலத்தையொட்டி இலங்கை இளங்கலைஞர் மன்றம் தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தின் அனுசரணையுடன் நடத்தும் தெய்வீக இசையரங்கில் இன்று பாட்டு இடம்பெறும்.

நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் மாலை 6.45 தொடக்கம் மாலை 8 மணி வரை இது நடைபெறவுள்ளது. பாட்டு எஸ்.சாய்லக்ஸ்மி. வயலின் அ.ஜெயராமன். மிருதங்கம் க.கண்ணதாஸன். கெஞ்சிரா ஞா.வசந் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

(4)

++++++++++++++++++++++++

### செல்லப்பா சுவாமிகள் நினைவாலயத்தில் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஓக. 15

நல்லைக் கந்தன் திருவிழாக் காலங்களில் யாழ். கதிர் கலையகத்தின் ஏற்பாட்டில் நல்லூர் கந்தசுவாமிகோயில் முன்பாக அமைந்துள்ள செல்லப்பாசுவாமிகள்நினைவாலயத்தில் இன்று இரவு 7 மணியளவில் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய முதன்மை குரு சிவஸ்ரீ ப.ஜெயகுமாரக்குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் சொற்பொழிவை ஸ்ரீபாததேசியக் கல்வியியற் கல்லூரி சைவப்புலவர் சித்தாந்தபண்டிதர் சி.கா.கமலநாதன் நிகழ்த்தவுள்ளார்.

கந்தபுராண தொடர் சொற்பொழிவை பண்டிதர் சைவப்புலவர் பொ.சுகந்தன் நிகழ்த்தவுள்ளார்.

(4)

++++++++++++++++++++++++

### வாலி மோட்சம்

யாழ்ப்பாணம், ஓக.15

யாழ்ப்பாணம் நல்லூர் கந்த சுவாமி ஆலய திருவிழாவில் நல்லூர் சைவமகா சபையின் ஏற்பாட்டிலான "சங்கீத கதாப்பிரசங்கத்தில், இன்று கம்பராமாயணத்தின் "வாலி மோட்சம்" எனும் பகுதி இடம்பெறும்.

இதனை கான கதா வாரிதி கலாபூஷணம் பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்தசர்மா நிகழ்த்தி வருகின்றார். தினமும் நல்லை ஆதீன குருமூர்த்த ஆலய மண்டபத்தில் மாலை 6.30 மணி தொடக்கம் 8 மணிவரை நடைபெறும்.

(4-ரி)

++++++++++++++++++++++++

### நாடகத்திருவிழா

யாழ்ப்பாணம், ஓக.15

செயற்றிறன் அரங்க இயக்கம் வழங்கும் நல்லூர் நாடகத்திருவிழாவில் இன்று செவ்வாய்க் கிழமை மாலை பேராசிரியர் நந்தியின் சிங்கப்பூர் டொக்டர் நகைச்சுவை நாடகமும், குழந்தை ம.சண்முகலிங்கத்தின் குழந்தைகள் பாவனை செய்யும் சிறுவர் நாடகமும் அரங்கேறுகின்றன.

நல்லூர்ந்தன் திருவிழாவை முன்னிட்டு நடத்தப்படும் இந்த நாடகத்திருவிழா கடந்த 10 ஆம் திகதி முதல் நல்லூர் குறுக்கு வீதியில் பாணன் குளத்துக்கு முன்பாக அமைந்துள்ள செயற்றிறன் அரங்க இயக்கத்தின் பஞ்சபூத அரங்கியல் இடம்பெறு வருகின்றன.

(21)

++++++++++++++++++++++++

### சின்மயா மிஷனின் ஆன்மிக அருளுரை

யாழ்ப்பாணம், ஓக.15

நல்லூர் திருவிழாவை முன்னிட்டு யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் நடத்தும் ஆன்மிக அருளுரைகளில் இன்று செவ்வாய்க்கிழமை "உள் முகப்படுத்தப்பட்ட மனம்" எனும் தலைப்பிலான அருளுரை இடம்பெறவுள்ளது.

நல்லூர் திருவிழாவை முன்னிட்டு கடந்த 6ஆம் திகதி முதல் தினமும் மாலை 7.30 மணி முதல் 8 மணிவரை இலக்கம் 700 பருத்தித்துறை வீதி, நல்லூரில் உள்ள சின்மயா மிஷனில் இந்த நிகழ்வுகள் இடம்பெறுகின்றன. அருளுரைகளை சின்மயா மிஷன் சுவாமிகள் வழங்குகிறார். அத்துடன் இந்துவாக வாழ்வோம் செயற்றிட்டத்தின் கீழ், " எனது மனம், எனது பலம்" எனும் கருப்பொருளில், கண்காட்சியும் இன்று மாலை 4 மணி முதல், இரவு 9 மணிவரை அங்கு இடம்பெறும் என அறிவிக்கப்பட்டது.

(21)

# வடக்குதொண்டர்ஆசிரியர்கள் 676பேருக்குநிரந்தரநியமனம்

## பெயர்கள் அடுத்த வாரம் வெளிவரும்

யாழ்ப்பாணம், ஓக.15
வடக்கு மாகாண தொண்டர் ஆசிரியர்களிடையே நடத்தப்பட்ட நேர்முகத் தேர்வில் தெரிவானவர்களின்பெயர்ப்பட்டியல்எதிர் வரும்25ஆம்திகதிவெளியிடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளதாக மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ. இரவீந்திரன் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும்தெரிவித்ததாவது: வடக்கு மாகாண தொண்டர் ஆசிரியர்களிடையே நியமனத்திற்கானநேர்முகத்தேர்வுகள் கடந்த ஜூன் மாதம் 28, 29, 30ஆம் திகதிகளில்இடம்பெற்றன. வடக்கு மாகாணத்தின் 5 மாவட்டங்களையும் சேர்ந்த 1046 தொண்டராசிரியர்கள் நேர்முகத்தேர்வுக்குதோற்றினர். மூன்று நாள்கள், மூன்று அணிகளாகதேர்வுகள் இடம்பெற்றன.

அந்தவகையில் நேர்முகத்தேர்விற்குத்தோற்றிய தொண்டர்களில் 676பேருக்கு நிரந்தர நியமனம்வழங்குவதற்கான அனுமதியை அமைச்சரவை வழங்கியுள்ளது. இதனடிப்படையில் பட்டியல் தயார் செய்யப்படுகின்றது.

தெரிவாகியிருக்கும்தகுதி வாய்ந்த 676 ஆசிரியர்களினதும்பெயர்ப்பட்டியல் எதிர்வரும் 25ஆம் திகதி அனுப்பிவைக்கப்படும் என கல்வி அமைச்சினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. பெயர்ப் பட்டியல் கிடைத்ததும்உடன்நியமனத்துக்கான ஏற்பாடு செய்யப்படும்.

அதேவேளை, வடக்கில் பணியாற்றும் ஒப்பந்த ஆசிரியர்கள் 176பேரையும் இந்த 676 நியமனத்துக்குள் உள்ளடக்குவதற்கு முயற்சிக்கப்பட்டது. இருப்பினும் மேற்கொண்ட முயற்சியின் பயனாக அவர்களுக்கு தனியானஏற்பாட்டின்கீழ் நியமனம் வழங்க கல்வி அமைச்சுஇணக்கம்தெரிவித்திருந்தது. இந்த ஒப்பந்தஆசிரியர்களுக்கான நியமனம் தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் வரும்22ஆம்திகதிசமர்ப்பிக்கப்படவுள்ளது என்றார். (ய.101)

*மீன்பிடி, பனை, தென்னைவளதுறைகளில்*

# தொழிலின்போது இறப்போரின் குடும்பங்களுக்கு வாழ்வாதாரம்

## கூட்டுறவு ஆணையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 15
வடக்கு மாகாண பனை, தென்னை தொழிலாளர்கள் மற்றும் கடற்தொழிலாளர்கள் தொழிலின்போது உயிரிழக்கும் சந்தர்ப்பங்களில் அவர்களின் குடும்பத்தினருக்கான வாழ்வாதார உதவிகளை வடக்குமாகாணகூட்டுறவுஅபிவிருத்திதிணைக்களம்வழங்கி வருவதாக அதன் ஆணையாளர் கே. சிவகரன் தெரிவித்தார்.

இவ்வாறான இடர்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசு இழப்பீட்டு நிதி வழங்கி வருகிறது. இந்தநிலையில் மாகாணசபை மூலமாகவும் இழப்பீட்டு நிதி வழங்கப்பட்டுவருகிறது என்று தெரிவிக்கப்பட்டது.

அவர்மேலும்தெரிவித்ததாவது: வடக்குமாகணத்தில்ஆரம்பகாலத்தில்எமதுதிணைக்களத்தின் ஊடாக பனை, தென்னை தொழிலாளர்கள் தொழிலின் போதுநிகழும்இறப்புகளுக்காக அவர்களதுகுடும்பத்திற்குவாழ்வாதார நிதியாக ஒரு இலட்சம் ரூபா வழங்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் கூட்டுறவுத் துறையில் கடற்தொழிலாளர்களும்உள்ளடக்கப்பட்டுள்ளமையால் அவர்களும் தமக்கு வாழ்வாதாரநிதியைவழங்கவேண்டும் எனக் கோரிக்கை விடுத்து வந்தனர்.

இதனால்வடக்குமாகாணசபை ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து கடற்றொழிலின்போது இறந்தவர்கள்தொடர்பானவிவரங்களை சேகரித்து, அவர்களது குடும்பத்தினருக்கும் வாழ்வாதாரநிதியைவழங்கவடக்கு மாகாண கூட்டுறவு அமைச்சு நடவடிக்கை எடுத்திருந்தது.

அந்தவகையில் வடக்கு மாகாணகூட்டுறவுஅபிவிருத்தி திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளபனை, தென்னை சங்கங்கள் மற்றும் கடற்தொழிலாளர் சங்கங்களில் உள்ள அங்கத்தவர்கள் தொழிலின் போது இறந்தால் அவர்களுக்கான வாழ்வாதார உதவித் தொகைவழங்கப்பட்டுவருகின்றது.

தொழிலின்போது இறக்கும் தொழிலாளியின் இறப்புச்சான்றிதழை கிராமசேவகரின் உறுதிப்படுத்தலுடன்எமதுதிணைக்களத்தில் உள்ள விண்ணப்பப் படிவத்தை முழுமைப்படுத்தி எமக்குகையளிக்கவேண்டும். பின்னர் நாம் அதனை பரிசீலித்த பின்னர் வாழ்வாதார நிதியை வழங்குவதற்கு நடவடிக்கைஎடுப்போம் என்றார். (ய.8)

# அனுமதிப்பத்திரமின்றி பயணித்த 6 பேருந்துகள் பொலிஸாரிடம் சிக்கின

கிளிநொச்சி, ஓக. 15
சாலை அனுமதிப்பத்திரமின்றி யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு சென்ற ஆறு பேருந்துகள் கண்டறியப்பட்டுள்ளன என கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபரின் சிறப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.

கிளிநொச்சி முல்லைத்தீவ மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் மகேஸ் வெலிக்கன்னவின் ஆலோசனைக்கு அமைய நேற்றுமுன்தினம் ஆனையிறவு பகுதியில் திடீர் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது சாலை அனுமதிப்பத்திரம் இன்றி பயணம் செய்த 5 சொகுசு பேருந்துகளும் ஒரு சாதாரண பேருந்தும் கண்டறியப்பட்டுள்ளன. பயணிகளின் நலன்கருதி பேருந்துகள் தொடர்ந்து பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளன.

இவற்றுக்கு எதிராக கிளிநொச்சி பொலிசார் முறைப்பாடுகளை பதிவு செய்து கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த உள்ளனர்.

இதேவேளை ஆனையிறவு பகுதியில் சோதனை நடவடிக்கை இடம்பெறுவதாக தெரிந்து கொண்ட சில பேருந்து சாரதிகள் சங்குப்பிட்டி பாலம் ஊடாக சென்றுள்ளனர். இது தொடர்பான தகவல் பிரதி பொலிஸ்மா அதிபர் ஊடாக பூநகரி பொலிசாருக்கு அறிவிக்கப்பட்டது.

இதனையடுத்து பூநகரி பிரதேசத்திலும் சில பேருந்துகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவை தொடர்பாகவும் உரிய நடவடிக்கை எடுக்கபபடும் என கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபரின் சிறப்புப் பிரிவினர் தெரிவித்தனர். (ய.6)

# மருந்து எடுப்பதற்கு வந்த 15 வயதுச் சிறுமி கர்ப்பம்

## *மல்லாவி வைத்தியசாலையில் அதிர்ச்சி*

கிளிநொச்சி, ஓக.15
மல்லாவியைசேர்ந்த15வயதுச்சிறுமிஒருவர்வைத்தியசாலையில்சேர்க்கப்பட்டநிலையில் அவர் கர்ப்பமாக இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

இதனையடுத்து அவர் கிளிநொச்சி வைத்தியசாலைக்குமாற்றப்பட்டதோடுபொலிஸாரிடமும்முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மல்லாவியைச்சேர்ந்த குறித்த சிறுமி சுகவீனம்காரணமாக அவதிப்பட்டுள்ளார். இதனை அவதானித்த வீட்டார் அவரை மல்லாவி வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர். அவ்வாறு அனுமதித்த சிறுமியை பரிசோதித்த சமயம் குறித்த சிறுமி கர்ப்பமாக இருந்தமை கண்டறியப்பட்டுள்ளது.

இந்நிலையில் இதுதொடர்பில்மல்லாவிபொலிஸாரிடம்முறையிடப்பட்டுள்ளது.

மேலதிக சிகிச்சையின் பொருட்டு சிறுமி கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இதேநேரம் சிறுமியின் குறித்த நிலைக்கு காரணமானசந்தேகநபரை பொலிஸார் தேடிவருகின்றனர். (ய.101)



# 19ஆம் திருவிழா

## நீ வந்து எம் குறை தீர்ப்பாயோ

உமையவளின் செல்வப்
புதல்வா நெஞ்சினில்
குடிகொண்டிருக்கும்
கந்தவேலா ஆறுபடை வீட்டுக்கு
சொந்தமானவனே!
உன் அன்புக்கு ஈடு இல்லையே
வேல்கொண்டு வினை
தீர்க்கும் வேலவனே!
காற்றோடு உன் கீதம்
நாம் பஜனையாகப் பாட
நீ வந்து எம் குறைதீர்ப்பாயோ
எழில் செழிக்கும் கந்தா
நாம்படும் துயரம் எல்லாம்
கண்டு நீ கானது இருக்காது
துயர்துடைக்க வா முருகா!

*சுபானுஜன், தெல்லிப்பழை.*

## மட்டிலாப்புகழ் கொண்ட வேல்

சக்தி வேல் சிவசக்தி வேல்
முத்திக்கு வித்தான முருகன் கைவேல்
சுற்றி வலம்வரும் பக்தருள்ளம்
துணையாயிருக்கும் நல்லை வேல்

மட்டிலாப் புகழ் கொண்ட வேல்
மாங்கனிக்காய் மனம் நொந்தவேல
எட்டாக்கனியாய் இருப்பதுவும்
நினதருளுக்கு அழகா தமோ சொல்
ஈசனே சக்தி உமை பாலனே
நல்லூருறையும் நாயகனே தாள் சரணம்

*திருமதி சு. பிரபாஜினி, தாவடி கொக்குவில்*

## கருணைக் கடலே கந்தா! காத்தருளிட வருக

நல்லை வீதிகளில்
உலா வருகின்ற
நராயணன் மருகா
நாடு நல்லமாகவா
வீடுகள் விக்கல்களோடு
உற்றுப் பாரப்பா
தேற்றுவாரின்றி மனிதர்கள்
மாமயிலோன் நல்லூரில்
மக்களிடையே வருகின்றார்
என்றே உன் முன்னாலும்
பின்னாலுமாய் பக்தர்கள்
அழுதும் தொழுதுமாய்
ஊர்கள் எங்கணுமிருந்தே
வந்து பாராயோ எங்களை
சிவன் உமை மைந்தா
சீராக்கிடு யாவற்றையும்
ஐங்கரன் தம்பியே
சங்கடங்கள் விலக்கிடு
அப்பா முருகா அலங்காரக்
கந்தா உன் அழகில் லயித்தும்
கண்ணீர் சிந்தியுமாய்
கருணைக் கடலே கந்தா
வந்தவர்கள் யாவருக்கும்
வீடுகளில் இருந்து
பிரார்த்திப்போருக்கும்
வருத்தங்கள் போக்கியே
காத்தருளிட வருக

*மீசாலையூர் கமலா*





## அயடீன் உப்பை பாவிக்கும் போது கவனிக்க வேண்டியவை

- உப்பை நீரில் கழுவக் கூடாது.
- ஒளிபுகாத கடும் நிறமான போத்தல் களிலேயே உப்பை சேமித்து வைத்தல் வேண்டும்.
- சேமித்து வைக்கும் போத்தலை சூரிய வெளிச்சமோ அடுப்பு வெக்கையோ படாத இடத்தில் வைத்தல் வேண்டும்.
- சமைத்ததன் பின்பே உப்பை உணவில் சேர்த்தல் வேண்டும்.

*தகவல்*
*சு.ம.அ.பணிமனை,*
*யாழ்.மாநகர சபை.*



# ரூ. 1,900 மில்லியன் சமுர்த்திப் பணம் வங்கிகளில் தேக்கம்

## மக்கள் கடன் பெற முன்வரவேண்டும் யாழ். மாவட்டப் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக.15
சமுர்த்தி பயனாளர்கள் அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காக வழங்கப்படும் கடன் வசதியை பெற்றுக்கொள்ளாமையால் ஆயிரத்து 900 மில்லியன் ரூபா அரச வங்கிகளில் சேமிப்பு பணமாக வைப்புச் செய்யப்பட்டுள்ளது என்று சமுர்த்தி அபிவிருத்தி த்திணைக்களத்தின் யாழ்ப்பாண மாவட்ட பணிப்பாளர் த.மகேஸ்வரன் தெரிவித்தார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது:

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் மக்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவ தற்காக கடன்கள் வழங்கப்படுகின்றன. மக்களின் சேமிப்புப் பணம் மக்களுக்கு பயன்படும் வகையில் அமையவேண்டும். அவர்களுக்கு நாம் கடன் வசதிகளை ஏற்படுத்தியுள்ளோம். இந்தக் கடன்களை அவர்கள் பெற்று சிறிய தொழில் முயற்சிகளை ஆரம்பிக்கலாம். இந்தக் கடன்கள் குழுமுறையில் வழங்கப்பட்டு வருகின்றன.

ஐந்துபேர் கொண்ட குழுவினை 5 நபர்கள் சேர்ந்து உருவாக்கும் பொருட்டு அவர்களுக்கு கடன்களை வழங்குவதற்கான நம்பிக்கைதன்மை உறுதி செய்யப்படுகின்றது. இதன்மூலம் ஆரம்பத்தொகையாக 25ஆயிரத்தை இவர்கள் பெற முடியும். இந்தக் கடனை உரியமுறையில், உரியதவணையில் அவர்கள் மீளவும் செலுத்தும் பட்சத்தில் அவர்களுக்கான கடன் தொகை அதிகரிக்கப்படும்.

இவ்வாறு மக்களின் வாழ்வாதாரத்துக்காக 25ஆயிரம் முதல் 5 இலட்சம் வரை கடன்களை வழங்குகின்றோம். அதிக தொகையினை கடனாக வழங்குவதற்கு சில ஆவணங்கள் ஆதாரமாகப் பெறப்படும்.

எனினும், 1931 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான, மக்களுடைய சேமிப்புப் பணம் அரச வங்கிகளிலே வைப்பில் இடப்பட்டிருக்கின்றது.

அதாவது மக்களின் சேமிப்புப் பணத்தை அவர்கள் கடனாகப் பெற்றுக்கொள்ளாமையினால் வங்கிகளில் இடப்பட்டுள்ளது.

மக்கள் கடன்களைப் பெற்றால் இவ்வாறு வைப்பிலிட வேண்டிய அவசியம் இல்லை.

மக்கள் தமது தொழில்முயற்சிக்கு இந்தப் பணத்தை முதலீடாக பயன்படுத்த முடியும்.

எனவே சமுர்த்திப் பயனாளிகள் அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திக் கொள்வதற்கு இந்தக் கடன்களைப் பெற முன்வர வேண்டும்- என்றார். (ய,ரி)

## புகைப் பரிசோதனையில் டாஸ் இலக்க வாகனங்களுக்கு விலக்களிக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக.15
வாகனங்களுக்குப் புகைப் பரிசோதனைத் திட்டத்தில் முன்னைய சிறி இலக்கம் நீக்கப்பட்டு டாஸ் இலக்கம் வழங்கப்பட்டுள்ள வாகனங்களுக்கு புகைப் பரிசோதனையிலிருந்து விலக்களிக்குமாறு வாகன உரிமையாளர்கள் கேட்டுள்ளனர்.

தற்போது நாட்டில் புகைப்பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு சிபார்சு செய்யப்பட்ட வாகனங்களுக்கே வருடத்துக்குரிய வாகன அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டு வருகிறது. முன்னைய காலங்களில் சிறி இலக்கம் வழங்கப்பட்டு, பின்னர் சிறி இலக்கம் நீக்கப்பட்டது. இவ்வாறான பார ஊர்திகள், கார்கள் வான்கள், மோட்டார் சைக்கிள்கள் நாட்டில் பாவனையில் இருந்து வருகின்றன.

இந்த வாகனங்களில் பொருத்தப்பட்டுள்ள காபரேற்றர்கள் எரிபொருளைக் கூடுதலாக உட்கொள்வதால் அதிகபுகையை வெளியேற்றுகின்றன.

இதனால் புகைப்பரிசோதனையின் போது சமநிலை பேணப்படாததால் அவற்றுக்கு சிபார்சு செய்யப்படுவதில்லை. வாகன உரிமையாளர்கள் வாகன காபரேற்றர்களை சீராக்கம் செய்தபின்னர் நான்கு அல்லது ஐந்து தடவைகள் புகைப் பரிசோதனைக்கு கொண்டுசென்றாலும் சித்தி பெறவில்லையென சான்றிதழ் வழங்கப்பட்டு சீராக்கம் செய்து வருமாறு திருப்பி அனுப்பப்படுகினர். இதனால் வாகனவரி செலுத்தாததால் பல வாகனங்களைப் பயன்படுத்த முடியாமல் உள்ளதென வாகன உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர். இதேவேளை, நாட்டில் 1975ஆம் ஆண்டுக்கு முன்னர் உற்பத்தி செய்த வாகனங்களுக்கு புகைப் பரிசோதனையிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு சிறி இலக்கரக வாகனங்களுக்கும் விலக்களிக்குமாறு வாகன உரிமையாளர்கள் கேட்டுள்ளனர்.

புகைப் பரிசோதனையிலிருந்து சிறி இலக்கரக வாகனங்களுக்கு விலக்க ளிக்கப்படாவிடின் பல லட்சம் ரூபா பெறுமதியான பெருமளவு வாகனங்கள் வாகனவரி பெறமுடியாத நிலையில் அவற்றைப் பயன்படுத்தாது வைத்திருக்க வேண்டிய நிலை ஏற்படலாம் என அவர்கள் குறிப்பிடுகின்றனர். (ய,9)

## முள்ளந்தண்டுவடம் பாதிக்கப்பட்டோருக்கான சேவைகளை விரிவாக்க நிதியுதவி செய்க

*வடக்குமாகாண சுகாதார அமைச்சு கோரிக்கை*

யாழ்ப்பாணம், ஓக.15
வடக்கு மாகாணத்தில் முள்ளந்தண்டு வடம் மற்றும் வேறு நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நடமாடும் சேவைகளை விஸ்தரிப்பதற்கு அரசு மற்றும் நிதியாளர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக வடக்கு மாகாண சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதுபற்றி மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

வடக்கு மாகாணத்தில் முள்ளந்தண்டு வடம் மற்றும் வேறு நோய்களால் பாதிக்க பட்டு படுக்கையில் உள்ள நோயாளர்களுக்கு உதவ நடமாடும் சேவைகளை விஸ்தரிக்க வேண்டும் என்று சுகாதாரத்துறை சார்ந்த ஆலோசனைச் சபைக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

வடக்கு மாகாணத்தில் முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்ட நோயாளர்களுக்கான சிகிச்சை மையமாக வைகறை விளங்குகின்றது.

போலியோ மற்றும் பாரிசவாத நோயினால் பாதிக்கப்பட்டு படுக்கையில் உள்ள நோயாளர்களுக்குமான சிகிச்சை மற்றும் சிறப்புக் கவனிப்பு என்பன நடைபெற்று வருகின்றது.

முள்ளந்தண்டுவடம் பாதிக்கப்பட்ட நிலையில் வீடுகளில் தங்கவைக்கப்பட்டுள்ள நோயாளர்களுக்கான அடிப்படை பராமரிப்பு வசதிகள் மற்றும் உள ஆற்றுப்படுத்தல் என்பவற்றை வழங்குவதற்கான மாவட்டரீதியான நடமாடும் சேவைகள் தற்போது நடைபெற்று வருகின்றன. மருத்துவ பராமரிப்புக் குழு மூலம் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் இச்சேவைகள் நடைபெற்று வருகின்றன.

இச்சேவை நோயாளர்களுக்கு நன்மை பயப்பதனால் வடக்கு மாகாணத்தில் உள்ள ஏனைய மூன்று மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்க வேண்டும் என்று அந்தக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இதற்கு அமைவாக யாழ்ப்பாண மாவட்டத்தில் இவ்வாறான நோயாளர்களுக்கான சிகிச்சையை 'கேன்' நிறுவனம் முன்னெடுத்துள்ளது.

ஆனால் இந்தச் சேவையை யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள அனைத்து இடங்களுக்கும் வழங்க முடியாத நிலை காணப்படுகின்றது.

நல்லூர், உடுவில், தெல்லிப்பளை ஆகிய பிரதேச செயலக பிரிவுகளை உள்ளடக்கியதாக கேன் நிறுவனத்தின் சேவைகள் நடைபெற்று வருகின்றன. எனவே யாழ்ப்பாண மாவட்டத்தின் ஏனைய பிரதேச செயலக பிரிவுகளுக்கும், வவுனியா, மன்னார்மாவட்டங்களுக்கும்இந்த மருத்துவ சேவையினை விஸ்தரிப்பதற்கு எமக்கு நிதி தேவையாக உள்ளது.

எனவே நிதியைப் பெற்றுக் கொள்ளுவதற்காக நாம் அரசிடமும், நிதியாளர்க ளிடமும் கோரிக்கையை முன்வைத்துள்ளோம்.

நிதி கிடைத்த பின்னர் மருத்துவ சேவைகள் ஆரம்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ய,ரி)

## மணல் ஏற்றியவர்கள் தப்பியோட்டம் இரு உழவியந்திரங்கள் சிக்கின

அரியாலைப்பகுதியில்சட்டவிரோதமானமுறையில்மணல் ஏற்றியவர்கள் கை விட்டுச் சென்ற இரண்டு உழவு இயந்திரங்களை யாழ்ப்பாணம் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

சிலதினங்களுக்கு முன்னர் இப்பகுதியில் சட்டவிரோதமான முறையில் மண் ஏற்றுவதாக பொலிஸாருகு தகவல் கிடைக்கப்பெற்றது.

இரகசியதகவலில் அடிப்படையில் குறித்த இடத்துக்கு பொலிஸார் சென்றனர்.

பொலிஸாரைக் கண்டதும் உழவு இயந்திரத்தில் வந்த நபர்கள் மணலுடன் உழவு இயந்திரங்களைக் கைவிட்டுத் தப்பி சென்றனர். குறித்த நபர்கள் கை விட்டுசென்ற இரு உழவு இயந்திரங்களை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். (ய,ரி,1)

# வடக்கு மாகாண ஆசிரியர்களின் சம்பள நிலுவைகள் விரைவில்

## வடமாகாண தலைமைச் செயலாளர் உறுதி

யாழ்ப்பாணம், ஓக.15
வடக்கு மாகாணத்தில் கடமையில் உள்ள மற்றும் ஓய்வுபெற்ற அதிபர்கள், ஆசிரியர்களுக்கானசம்பளநிலுவைகள் விரைவில் வழங்கப்படும் என வடக்கு மாகாண தலைமைச் செயலாளர் உறுதியளித்துள்ளார் என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

வடக்கு மாகாண அதிபர் மற்றும் ஆசிரியர்களின்சம்பளநிலுவையாகஏறத்தாழ 400 மில்லியன் (நாற்பதுகோடி) ரூபா இருப்பதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வடக்கு மாகாணத்தில் கடமையில் உள்ள மற்றும் ஓய்வுபெற்ற அதிபர்கள், ஆசிரியர்களுக்கானசம்பளநிலுவைகள் நிலுவையை வழங்கவேண்டுமென்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வடக்கு மாகாண சபையிடமும், ஆளுநரிடமும், மாகாணகல்விஅமைச்சிடமும் பல தடவைகள் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு ஏமாற்றமடைந்தது. இறுதியாக வடக்குமாகாண தலைமைச் செயலாளரிடம் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அவர் சாதகமான பதிலை வழங்கியுள்ளார்.

மாகாணத்தில் உள்ள அதிபர்கள், ஆசிரியர்களுக்கானசம்பளநிலுவைகள்எந்தவொரு காலத்திலும் இல்லாத அளவுக்கு மோசமாக உயர்ந்துள்ளது.

ஒவ்வொரு ஆசிரியருக்கும் கல்வி அமைச்சு கடனாளியாகவே உள்ளது. போர்க்காலங்களிலும், அதற்கு முந்திய காலங்களிலும் இத்தகைய நிலை வடக்கு, கிழக்கு மாகாணங்களில்ஏற்படதில்லை.

மாகாணசபைகள் அமைக்கப்பட்டதன் பின்னர் இத்தகைய நிலை உருவாகியிருப்பது வேதனையான விடயம் என்பதற்குஅப்பால்வெட்க கேடானவிடயமாகும்.

ஊதியத்தைச் சீராக வழங்காமல் எவ்வாறு உத்தியோகத்திரிடம் 'வேலையைச் சரியாகச் செய்யுங்கள்' என்று சொல்லமுடியும்? பொறுப்புவாய்ந்த முதலமைச்சரோ அன்றி அரச பிரதிநிதியாக உள்ள வடக்கு மாகாண ஆளுநரோ எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

மாறாக இவர்கள் வேறு கருமங்களைச் செய்கின்றார்களோ என்ற சந்தேகம் எமக்கு எழுந்துள்ளது.

இந்நிலையில் வடக்கு மாகாண தலைமைச் செயலாளரிடம் இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கம் மீள வலியுறுத்தி, ஒவ்வொரு அதிபர், ஆசிரியருக்கும் வழங்கவேண்டிய சம்பள நிலுவைகள் தொடர்பான விடயங்களை வடக்கு மாகாணகல்விஅமைச்சின்செயலாளர் வழங்கியதன் அடிப்படையில் தலைமைச் செயலாளர் கொழும்பு அரசுடன் கதைத்து முன்னுரிமை அடிப்படையில் நிலுவைகள் வழங்குவதற்கான உறுதியை வழங்கியுள்ளார்.

வடக்குமாகாணத்தில்புதிதாகநியமனம் பெறுகின்ற ஆசிரியர்களுக்குரிய சம்பளத்தைவழங்குவதற்கானநிதியைக்கூட கொழும்பு அரசு விடுவிப்பதற்கு பல்வேறு சிக்கல்கள் உருவாகியிருக்கின்றன. எதிர்வரும் காலங்களில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கடமையாற்றும் அரச ஊழியர்களுக்கு மாதாந்த வேதனம்வழங்கப்படுமாஎன்றகேள்வியையும் கேட்கின்றோம்.

வடக்கு, கிழக்குமாகாணங்களில்ஏற்பட்டுள்ள இத்தகைய அசாதாரண சூழ்நிலைக்கு இரண்டு மாகாண அமைச்சுகளும் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லலை எனில் மாகாண அமைச்சுகளின் நிலைகேள்விக்குறியாகும் என்று உள்ளது. (ய)

# ஊழியர் சேமலாப நிதியிலிருந்து 16,000 பேருக்கு வீட்டுக்கடன்

## அதன் ஆணையாளர் தகவல்

கொழும்பு, ஓக. 15
ஊழியர் சேமலாப நிதியத்திலிருந்து இந்த வருடத்தில் 16 ஆயிரம் பேர் வீட்டுக்கடன் பெற்றுள்ளனர் என்று அந்த நிதியத்தின் ஆணையாளர் டி.பி.கே.பி.வீரகோன் தெரிவித்தார்.

"ஊழியர் சேமலாப நிதியத்தின் தொகை தற்போது ஒரு இலட்சத்து 66 ஆயிரத்து 500 கோடி ரூபா வரை அதிகரித்துள்ளது. தொழில் வழங்குநரைப் போன்று ஊழியர்களும் நிதியத்தை வலுப்படுத்திக் கொள்வதற்கு பங்களிப்புச் செய்ய வேண்டும்.

ஊழியர்கள் தமது தரப்பின் பங்களிப்பு உரிய முறையில் நிதியத்துக்கு அனுப்பப்படுகின்றதா? என்பது பற்றி விழிப்புடன் இருக்க வேண்டியது கட்டாயமாகும்.

ஊழியர்கள் தமது நிதியத்திலிருந்து 30 வீதமான தொகையை வீடமைப்புக் கடனாகப் பெற்றுக்கொள்ள முடியும். இந்தத் திட்டத்தின் கீழ் இந்த வருடத்தில் இதுவரை 16 ஆயிரம் பேர் கடன் பெற்றுக்கொண்டுள்ளனர். தொழில் வழங்குநர்கள் உரிய காலத்தில் தமது ஊழியர்களின் நிதியத் தொகையை அனுப்பி வைப்பார்களாயின் அநாவசியமாகத் தண்டம் செலுத்த வேண்டியதில்லை" என்று ஊழியர் சேமலாப நிதியத்தின் ஆணையாளர் மேலும் தெரிவித்தார். (வ)

# வடக்கில் 2,500 குடும்பங்களுக்கு கல் வீடுகள்

## வீடமைப்பு அதிகார சபையும் அமைக்கிறது

கொழும்பு, ஓக. 15
தேசிய வீடமைப்பு அதிகார சபையின் சமத்த செவன என்ற திட்டத்தின் கீழ் வடக்கு மாகாணத்தில் 2 ஆயிரத்து 500 குடும்பங்களுக்கு கல் வீடுகள் அமைத்து வழங்கப்படவுள்ளன.

தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சு தலைமையில் ஏனைய சில அமைச்சுக்கள் இணைந்து வடக்கு மாகாணத்தில் 50 ஆயிரம் வீடுகளை அமைத்து வழங்கவுள்ள நிலையில் தேசிய வீடமைப்பு அதிகார சபையும் 2 ஆயிரத்து 500 வீடுகளை வழங்கவுள்ளது.

தேசிய வீடமைப்பு அதிகார சபையின் திட்டத்தின் கீழ் வவுனியா மாவட்டத்தில் தற்போது 1000 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

"இதற்கு 12.5 மில்லியன் ரூபா செலவிடப்படுகிறது. அதிகாரிகள் சிலர் இதன் கட்டுமானப் பணிகளை பார்வையிட்டுள்ளனர். இந்த வீடுகள் இரண்டு மாத காலப்பகுதிக்குள் அமைத்து முடிக்கப்படும். மேலும் இந்தத் திட்டத்தின் கீழ் வடக்கின்



ஏனைய மாவட்டங்களிலும் வீடுகள் அமைக்கப்படவுள்ளன" என்று வீடமைப்பு அதிகார சபையின் தலைவர் லக்விஜய சாகர பலன்சூரிய தெரிவித்தார். (வ)

# மாணவர்களுக்கான காப்புறுதி ஒக்டோபரில் நடைமுறைக்கு

## கல்வி அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, ஓக. 15
"அரசு புதிதாக அறிமுகப்படுத்தும் பாடசாலை மாணவர்களுக்கான காப்புறுதி நடைமுறை ஒக்டோபர் மாதம் 2ஆம் திகதி முதல் முன்னெடுக்கப்படவுள்ளது. 42 இலட்சம் பாடசாலை மாணவர்களுக்கு இதன் மூலம் நன்மைகள் கிடைக்கும்" என்று கல்வி இராஜாங்கச் செயலாளர் திஸ்ஸ ஹேவ விதாரண தெரிவித்தார்.

"பாடசாலை மாணவர்கள், பிரிவெனாக்களில் உள்ள பிக்குமார், தனியார் போன்று பன்னாட்டு பாடசாலை மாணவர்களும் இந்தக் காப்புறுதிக்குள் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

ஒரு மாணவருக்கு 2 இலட்சம் ரூபா காப்புறுதி வழங்கப்படும். அரச மற்றும் தனியார் துறையில் வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெறுவோருக்கு இதன் கீழ் ஆயிரம் ரூபா வழங்கப்படும்.

இது தொடர்பான தகவல்கள் மாணவர்களுக்கும் பெற்றோருக்கும் வழங்கப்படும்" என்று கல்வி இராஜாங்கச் செயலாளர் திஸ்ஸ ஹேவ விதாரண மேலும் தெரிவித்தார். (வ)

# மாணவர் சீருடைத் துணி வவுச்சர் செப்ரெம்பர் 15 முதல் விநியோகம்

## தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு சப்பாத்துக்கும் வவுச்சர்

கொழும்பு, ஓக.15
பாடசாலை மாணவர்களுக்கான 2018ஆம் ஆண்டுக்கான சீருடைத் துணி உதவித் தொகை வவுச்சர் அடுத்த மாதம் 15ஆம் திகதி பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்படும் என்று கல்வி இராஜாங்கச் செயலாளர் திஸ்ஸ ஹேவ விதாரண தெரிவித்தார்.

மேலும் இம்முறை தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு சப்பாத்துகளை கொள்வனவு செய்வதற்கான வவுச்சர்களும் வழங்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

"பாடசாலை மாணவர்களுக்கான சீருடைத் துணிகள் கல்வி அமைச்சால் வழங்கப்பட்டன. எனினும் 2016ஆம் ஆண்டிலிருந்து மாணவர்கள் சீருடைத் துணியை வாங்குவதற்கான வவுச்சர்கள் வழங்கப்படுகின்றன. அதில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்கு ஏற்ப கடைகளில் சீருடைத் துணியைப் பெற்றுக் கொள்ள முடியும்.

அடுத்த ஆண்டுக்கான சீருடைத் துணி கொள்வனவுக்கான வவுச்சர்கள் மூன்றாம் தவணைக்காக பாடசாலைகள் ஆரம்பமாகும்போது கல்வி அமைச்சால் விநியோகிக்கப்படும். அடுத்த ஆண்டில் 42 இலட்சம் மாணவர்களுக்கு சீருடைக்கான வவுச்சர்கள் தயாரிக்கப்பட்டுள்ளன" என்று என்று கல்வி இராஜாங்கச் செயலாளர் மேலும் தெரிவித்தார். (வ-ரி)

# கிழக்கு ஆசிரியர் ஆள்சேர்ப்பு விண்ணப்பம் கோரலில் திருத்தம்

கொக்கட்டிச்சோலை, ஓக. 15
கிழக்கு மாகாண பாடசாலைகளில் நிலவுகின்ற ஆசிரிய வெற்றிடங்களுக்கு மாவட்ட அடிப்படையில் பட்டதாரிகளை உள்ளீர்ப்பதற்காக நடத்தப்படவுள்ள திறந்த போட்டிப் பரீட்சைக்கான அறிவித்தலில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் அறிவித்தார்.

18 வயது தொடக்கம் 45 வயது வரையான பட்டதாரிகள் இதற்காக விண்ணப்பிக்க முடியும் எனவும், தொழிலற்ற பட்டதாரி அல்லது ஆள்சேர்ப்புக்காக குறைந்த தகைமையாக பட்டமொன்று பெற்றிருத்தல் அவசியமானதொன்றாகக் கொண்ட பதவியிலுள்ள உத்தியோகத்தர் தவிர, வேறு பதவியிலுள்ள பட்டதாரிகள் இந்தப் பதவிக்காக விண்ணப்பிக்கலாம் போன்ற திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இது தொடர்பான மேலதிக விவரங்களை கிழக்கு மாகாண சபையின் இணையளத்தளம் http://www.ep.gov.lk இல் பார்வையிட முடியும் என்றும் கிழக்கு மாகாண மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் கூறினார். (வ)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி மகேஸ்வரி வேலாயுதபிள்ளை
(பொலிஸ்மாமி)



37, செங்குந்தா வீதி, திருநெல்வேலி கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி வேலாயுதபிள்ளை நேற்று (14.08.2017) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை (பொலிஸ் உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பரஞ்சோதி - அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், நடராசா, காலஞ்சென்ற சரவணமுத்து (வெள்ளை) மற்றும் கமலம், வைத்திலிங்கம் ஆகியோரின் அன்பு சகோதரியும், காலஞ்சென்றவர்களான அன்னபூரணம், அப்பையா, பரிமளம், பரமேஸ்வரி, முத்துத்தம்பி மற்றும் மல்லிகா, சோதிமலர் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (15.08.2017) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10 மணியளவில் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**செங்குந்தா வீதி,**
**திருநெல்வேலி கிழக்கு.**

**தகவல்:**
**திருமதி கலாதேவி**
**உதயகுமாரன் (பெறாமகள்)**



## திருமதி இராசதேவி அரியரத்தினம்

இணுவில் கிழக்கு, இணுவிலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசதேவி அரியரத்தினம் 13.08.2017 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பையா - சின்னப்பிள்ளை தம்பதிய ரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான தம்பையா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் அரியரத்தினத்தின் அன்பு மனைவியும் கமலாவதி, குமாரகுலசிங்கம், கோபாலசிங்கம், சுபத்திராவதி, சுமணாவதி, நிமலசிங்கம், கயனாவதி, அஜந்தாவதி ஆகியோரின் அன்புத் தாயாரும் பறுவதநாதன், சசிதேவி, விக்னேஸ்வரி, கதிர்ச்செல்வன், அருந்தா, கலைமகள், சசிதரன், பிரகாஸ் ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.08.2017) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்,**
**பூட்டப்பிள்ளைகள்**

**வேம்போலை,**
**இணுவில் கிழக்கு.**

# ஐ.நா. நிபுணருடன் முரண்பட்டதாலேயே விஜயதாஸவுக்கு எதிராகப் பிரேரணை

## கம்மன்பிலவின் கண்டுபிடிப்பு இது



கொழும்பு, ஓக. 15
ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்பு அறிக்கையாளர் பென் எமர்சனுடன் முரண்பட்டமை மற்றும் ஏனைய மூன்று காரணிகளின் அடிப்படையிலேயே நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்சவுக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சியால் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்படவுள்ளது என்று மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

புதிய ஹெல உறுமய கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்சவுக்கு எதிராக நான்கு காரணிகளின் அடிப்படையிலேயே நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டுவர ஐக்கிய தேசியக் கட்சியினர் முயல்கின்றனர். ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்பு அறிக்கையாளர் பென் எமர்சன் இலங்கைக்கு வருகை தந்த போது அவர் தெரிவித்த கருத்துகள் தவறானவை எனச் சுட்டிக்காட்டியமை, இலங்கையில் ஐ.எஸ். தீவிரவாதிகள் உள்ளனர் என்றும் தற்போது 11 பேர் அங்கத்தவர்களாக உள்ளனர் என்றும் நாடாளுமன்றில் கூறியமை, வடக்கு, கிழக்கில் தமிழ் மற்றும் முஸ்லிம் அடிப்படைவாதிகள் வரலாற்றுச் சிறப்புமிக்க பௌத்த இடங்களை அழிப்பதற்கு எடுத்துவரும் நடவடிக்கைகள் குறித்து பௌத்த மகா சங்கத்தினரிடமும் அரச தலைவரிடமும் சென்று தெளிவுபடுத்தியமை, அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு வழங்குவதன் மூலம் நாட்டுக்கு ஏற்படும் இழப்புக்குறித்து சுட்டிக்காட்டியமை உள்ளிட்ட நான்கு காரணிகளின் அடிப்படையிலேயே நீதி அமைச்சர் விஜயதாஸவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்படவுள்ளது.

நாட்டின் நலனைக் கருத்திற்கொண்டு அவருக்கு எதிராகக் கொண்டுவரப்படும் நம்பிக்கையில்லாப் பிரேரணையை கட்சி.பேதம் கடந்து நான் எதிர்ப்பேன்.

நாட்டின் மீது பற்றுள்ள ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்சக்கு ஆதரவாகக் குரல் எழுப்பவேண்டும் என்றார். (வ-சி)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ
முதலாம் ஆண்டு நினைவஞ்சலி
அமரர்
15.08.2017
செல்லத்துரை இராசா
(பிரபல மோகர்சிங் வித்துவான், கலாபூஷணம்)



மலர்வு
12.12.1949



உதிர்வு
15.08.2016

அன்பின் வடிவாய் ஆற்றலின் முதிர்வாய்
பண்பின் சிகரமாய் பாசத்தின் உறவாய்
வாழ்ந்து சாதனைகள்
பலபுரிந்து சரித்திரம் ஆகிவிட்டீர்கள்
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

காளி கோயிலடி,
மல்லாகம்.
077 474 7348

என்றும் உங்கள் நினைவுகளோடு
குடும்பத்தினர்.

2ஆம் ஆண்டு நினைவலைகள்

பிறப்பு
24.02.1933



இறப்பு
07.08.2015

அன்னலிங்கம் குமாரசாமி
(ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபர்)
திதி:- தேய்பிறை அட்டமி (15.08.2017)

ஈராண்டு ஆயினும் - நம்
ஈரவிழி காயவில்லை
நீர் இன்றி வாழ்வு தனை - ஏன்
வாழ்கின்றோம் புரியவில்லை
உத்துங்கன் பாதங்களை
பற்றியிருப்பீர் நம்புகின்றோம்
ஆதலால் ஆறுதல் அடைகின்றோம்
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உயரப்புலம்,
ஆனைக்கோட்டை.
021 221 3263

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

# ராஜபக்சாக்களுக்கு எதிரான விசாரணைகள் துரிதகதியில்

## சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அவசர பணிப்புரை விடுத்தது அரசு

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில் அவர் உட்பட அவரின் குடும்பத்தினர் மற்றும் ஆட்சியின் பங்குதாரர்களால் மேற்கொள்ளப்பட்ட ஊழல், மோசடி விசாரணைகளை துரிதகதியில் முன்னெடுக்க சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அரசு அவசர பணிப்புரை விடுத்துள்ளது என அறியமுடிகின்றது.

கூட்டு அரசு அமையப்பெற்று இரண்டு வருடங்கள் கடந்துள்ளபோதிலும் இதுவரை முன்னாள் அரசின் காலத்தில் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் ஊழல், மோசடிகள் குறித்த விசாரணைகளில் ஒன்றேனும் முற்றுப்பெறவில்லை.

இந்த நிலையில், ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு கொடுத்த கடும் அழுத்தத்தின்பேரில் விசாரணைகள் அனைத்தையும் துரிதப்படுத்துவதற்கான இந்தப் பணிப்புரை அரசால் விடுக்கப்பட்டுள்ளது எனத் தெரியவருகின்றது.

"அரசிலுள்ள சிலரின் நடவடிக்கைகளால் ராஜபக்ச அரசின் காலத்தில் இழைக்கப்பட்ட அநீதிகள் மற்றும் பொதுச் சொத்து இழப்புகள் குறித்து மக்களுக்குத் தெரியாமல் போகக்கூடும். நல்லாட்சியை ஏற்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட அரசு மீது மக்கள் நம்பிக்கை இழந்தால் அது பாரதூரமான விடயமாக மாறிவிடும்" என்று ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களால் தலைமை அமைச்சருக்கு எடுத்துரைக்கப்பட்டதாலேயே இந்த விசாரணைகள் அனைத்தையும் துரிதப்படுத்த சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அரசால் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது என அறியமுடிகின்றது. (வ-சி)

## மகிந்த அரசின் மோசடிகள்:

# தண்டனை கொடுக்க சிறப்புப் பொறிமுறை

## அரசுக்கு ஹெல உறுமய அழுத்தம்

கொழும்பு, ஓக. 15
அரசமைப்பில் திருத்தங்கள் மேற்கொண்டோ அல்லது சிறப்பு நீதிமன்றமொன்றை அமைத்தோ மகிந்த அரசின் காலத்தில் இடம்பெற்ற ஊழல், மோசடிகள் தொடர்பில் விசாரணைகளைத் துரிதகதியில் முன்னெடுத்து குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்க வேண்டும் என்று ஜாதிக ஹெல உறுமய அரசுக்கு அழுத்தம் கொடுத்துள்ளது.

பத்தரமுல்லையில் அமைந்துள்ள ஜாதிக ஹெல உறுமயவின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றிய மேல் மாகாண அபிவிருத்தி மற்றும் மெகா பொலிஸ் அமைச்சர் சம்பிக்க ரணவக்க மேற்படி விடயத்தைத் தெரிவித்தார்.

"கூட்டு அரசை அதிகாரத்துக்குக் கொண்டு வந்த மக்களின் முக்கிய கோரிக்கைகளாக இருந்தவை ஊழல், மோசடிகளை ஒழித்தல் மற்றும் மகிந்த அரசின் காலத்தில் இடம்பெற்ற ஊழல், மோசடிகளுக்குத் தண்டனை வழங்குதல் என்பனவாகும்.

ஆனால், விசாரணைகள் மந்தகதியில் இடம்பெறுவதாக பொலிஸ்மா அதிபர் மற்றும் சட்டமா அதிபர்களுக்கு எதிராக கருத்துகள் முன்வைக்கப்படுகின்றன. நாங்களும் அந்தக் குற்றச்சாட்டுகளையே முன்வைக்க விரும்புகின்றோம்.

உடனடியாக மகிந்த அரசின் காலத்தில் இடம்பெற்ற ஊழல், மோசடிகளுக்குத் தண்டனை வழங்கச் சிறப்புப் பொறிமுறையொன்றை அமைக்குமாறு அரசுக்கு அழுத்தம் கொடுக்கின்றோம்" என்று அமைச்சர் சம்பிக்க ரணவக்க மேலும் தெரிவித்தார். (வ-சி)

# அரச படிவங்கள் இனி மும்மொழியிலும்

## மொழிபெயர்க்கும் பணி ஆரம்பம்

கொழும்பு, ஓக. 15
தொடர்ச்சியான அறிவுறுத்தல்கள் வழங்கியும் மும்மொழிகளிலும் அனைத்து அரசஅலுவலகபடிவங்கள் அமைவதில்லை. தமிழ் மொழிக்கு உரிய இடம் வழங்கப்படுவது இல்லை. இதை இனி அனுமதிக்க முடியாது. எந்த ஒரு அதிகாரியும் மொழிச்சட்டம் தனக்கு தெரியாது எனக்கூறவும் முடியாது.

இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணி தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும், தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

பொதுமக்கள் பாவனைக்கு அரச படிவங்கள் மும்மொழியில் மொழிபெயர்க்கும் நடவடிக்கையின் ஆரம்ப நிகழ்வு நேற்று நடைபெற்றது. தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சு கூடத்தில் இந்த நிகழ்வு நடைபெற்றது. அதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்தாவது

இலங்கை முழுவதிலும் உள்ள 882 அரச அலு வலகங்களிலிருந்து மூன்று மொழிகளிலும் இல்லாத முறையற்ற படிவங்களை நாம் பெற்று, அவற்றை மூன்று மொழிகளிலும் பெயர்க்கும் பணியை ஆரம்பிக்கிறோம். இதற்குள் 429 பிரதேச செயலக மற்றும் அதனுடன் இணைந்த அரச காரியாலயங்களும், 256 மாகாண மற்றும் பிரதேச சபை அலுவலகங்களும், 197 ஏனைய அலுவல கங்களும் உள்ளன.

மொழிபெயர்த்த பிறகு புதிய மும்மொழிப் படிவங்கள் எனது அமைச்சல் அச்சிடப்பட்டு சம்பந்தப்பட்ட அலுவலகங்களுக்கு அனுப்பப்படும். அந்தப்படிவங்களின் மென்பொருள் பதிவு செய்யப்பட்ட இறுவட்டும் அந்த அலுவலகங்களுக்கு அனுப்பப் படும். அதைப் பயன்படுத்தி மேலதிக மும்மொழி படிவங்களை சம்பந்தப்பட்ட அலுவலகங்கள் அச்சிடலாம். இதன்மூலம் தமிழ் பேசும் மக்கள் இந்த நாட்டில் சிங்கள மொழியுடன், தமிழ் மொழியும் ஒரு ஆட்சி மொழி, ஆங்கில மொழி இணைப்பு என்ற உரிமையை அனுபவிப்பதில் ஒரு படி முன்னேறுவர் .

மத்திய மொழிப்பெயர்ப்பாளர் பிரிவு ஒன்றை நாம் எனது அமைச்சில் அமைத்து ள்ளோம். அவர்கள் இந்தப் பணியை இன்று ஆரம்பிக்கின்றனர்.

மொழிக்கொள்கையை தீர்த்தால், அது தேசிய இனப்பிரச்சினையில் சரிபாதியை தீர்ப்பது ஆகும். மிகுதி பாதியை அதிகார பகிர்வு தீர்க்க வேண்டும். என்றார்.

(ற-10)

# தேர்தலை ஒத்திவைக்க எம்.பிக்கள் சட்டம் உருவாக்குவது துரதிஷ்டம்

## மகிந்த தேசப்பிரிய வருத்தம்

கொழும்பு, ஓக. 15
நாடாளுமன்ற உறுப்பினர்களே தேர்தலை ஒத்திவைக்க சட்டம் உருவாக்குவது துரதிர்ஷ்டம் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய வருத்தம் வெளியிட்டார்.

கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய போதே அவர், இதனைத் தெரிவித்தார்.

"தேர்தல் மூலம் நாடாளுமன்றுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்களே தேர்தல்களை ஒத்தி வைப்பதற்கான சட்டங்களை உருவாக்குவது துரதிர்ஷ்டம்.

தேர்தல்கள் உரிய நேரத்துக்கு நடத்தப்படாமல் தள்ளிப்போடுவது ஜனநாயகத்துக்கு முரணானதாகவே கருத வேண்டியுள்ளது. தேர்தல்களை நடத்தும் பொறுப்பு தேர்தல் ஆணைக்குழுவுக்குரியது அல்ல. சட்டத்தை இயற்றும் நாடாளுமன்றுக்குரியது. தேர்தலை நடத்தக்கூடிய அதிகாரம் ஆணைக்குழுவுக்கு இருக்குமானால் உரிய நேரத்தில் தேர்தல்களை நடத்தியிருக்கும்" என்று அதன் தலைவர் மகிந்த தேசப்பிரிய மேலும் தெரிவித்தார்.

(வ)

## தொழில் செய்யும் வயதுடைய தொகை 1.5 கோடி

கொழும்பு, ஒக. 15

நாட்டில் தொழில் செய்யும் வயதை உடையோரின் தொகை இந்த வருடத்தின் முதல் காலாண்டில் ஒரு கோடியே 57 இலட்சமாகும் என்று குடிமக்கள் தொகை மதிப்பீடு புள்ளிவிவரத் திணைக்களம் தெரிவித்துள்ளது. இது கடந்த வருடத்தின் முதற் காலாண்டுடன் ஒப்பிடுகையில் மூன்று வீத வளர்ச்சியாகும் என திணைக்களம் நடத்திய ஆளணி வள மதிப்பீட்டின் போது தெரியவந்துள்ளது. (வ)


### பெயர்மாற்றம்

இல.28. வன்னேரிக்குளம். கிளிநொச்சியை வசிப்பிடமாகக் கொண்ட **குமாரசாமி புஸ்பவதி** ஆகிய எனது பெயரை இன்று முதல் **குமாரசாமி புஸ்பவல்லி** எனப் பெயர்மாற்றம் செய்வதோடு இனிவரும் எல்லா ஆவணங்களிலும் இப்பெயரைப் பயன்படுத்துவேன் எனவும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

(AKN 286) (14)

**குமாரசாமி புஸ்பவல்லி**

### வேலையாள்கள் தேவை

இல.07, பஸ் நிலையத்திலுள்ள மிக்ஷர் கடைக்கு வேலையாள்கள் தேவை. அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

**077 631 6273**

### உடனடி வேலைவாய்ப்பு

நிறுவன காசு வசூலிப்பாளர் வேலைக்கு வேலையாள்கள் தேவை.
"அனுபவம் உள்ளவர்கள் மட்டும்"

I. G.S. பதிவுச் சான்றிதழ்
II. பிறப்புச் சான்றிதழ்
III. மோட்டார் சைக்கிள்
IV. சாரதி அனுமதிப்பத்திரம்
V. பொறுப்புச் சான்றிதழ் என்பவற்றுடன் சமுகமளிக்கவும்.

**பணிபுரிய வேண்டிய முக்கிய இடம்.**
**கிளிநொச்சி, முல்லைத்தீவு, விசுவமடு, வவுனியா, மன்னார், திருகோணமலை.**

மேலதிக விவரங்களுக்கு :-
**075 366 6230, 077 721 8055**
பெரியகுளம், கனகராயன்குளம்.

## முதலாம் ஆண்டு சேவை நிறைவில்

## றோயல் மெடிக்கல் சென்ரர்

**458, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்**

யாழ். போதனா வைத்தியசாலை பழைய OPD முன்பாக விசேட வைத்திய நிபுணர்களின் ஆலோசனையை பெற அழையுங்கள்.

### றோயல் வைத்திய ஆலோசனைகள் ...

- காது, மூக்கு தொண்டை [ENT] சத்திரசிகிச்சை நிபுணர்
- நீரிழிவு (சலரோகம்) கோமோர்ன்ஸ் வைத்தியநிபுணர்
- சத்திரசிகிச்சை நிபுணர்
- மூட்டுவாத வைத்திய நிபுணர்
- தோல் வைத்திய நிபுணர்
- பொது வைத்திய நிபுணர்
- குழந்தை வைத்திய நிபுணர்
- மகப்பேற்று வைத்திய நிபுணர்
- நரம்பியல் சத்திரசிகிச்சை நிபுணர்
- சிறுநீரக வைத்திய நிபுணர்
- மார்புநோய் வைத்திய நிபுணர்
- இதய வைத்திய நிபுணர்
- பிளாஸ்ரிக் [Plastic] சத்திரசிகிச்சை நிபுணர்
- பேச்சு மற்றும் மொழி சிகிச்சையாளர்



### தொடர்புகளுக்கு...

021 720 1587, 021 320 2300, 021 221 3668, 077 045 7976
royalmedicalcentre458@gmail.com

## மனமுவந்து வாழ்த்துகின்றோம்



### செல்வத்துரை திருமாறன் (பிரபு)

(உரிமையாளர் – இராஜேஸ்வரி மண்டபம்
கோண்டாவில், தெல்லிப்பழை )

2017 ஆகஸ்ட் 3ஆம் திகதி அகில இலங்கை சமாதான நீதிவான் பதவியைப் பெற்றமையை எண்ணி உவகையடைவதுடன்...

புகழ்பல பெற்று உலகெங்கும் செழிக்க
உம் சேவை ஆற்றி உயர்வை அடைவீர்
பார்போற்ற என்றும் பணிகள் பல செய்து
மக்கள் மனதில் என்றும் குடிகொள்வீர்
உம்சேவை தொடர என்றும் தோள் கொடுப்போம்
எப்போதும் உந்தன் தோழராய் நாம் இருப்போம்.

வாழ்க வளமுடன் என வாழ்த்துவோர்:-
இராஜேஸ்வரி மண்டப ஊழியர்கள்
கோண்டாவில், தெல்லிப்பழை.

### வாகனம் விற்பனைக்குண்டு

NPPY XXX
க்சனோன் ராட்டா (TATA) பிக்கப் முழுமையாக அலுமினிய Body பதிவு செய்யப்பட்டுள்ளது.

**077 470 1495**

### விற்பனைக்கு

வயோதிபர் சௌகரிகமான முறையில் பாவிக்கக்கூடிய சகல வசதிகளும் கொண்ட இரும்பிலான நல்ல நிலையில் உள்ள கட்டில் உடன் விற்பனைக்குண்டு

**077 684 7612**

### காணி விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் கிழக்குப் பகுதி, புத்தூர் கோவில்பற்று, அச்செழு இறையில் அமைந்துள்ள நி.பர. 51. குளி 7.79 விஸ்தீரணம் கொண்ட ஆதனம் விற்பனைக்கு உண்டு.

**S.Sansipan - 077 500 5223**
**K.Maniyam - 077 405 0635**

### தேவை

நாற்றுப்போடுவதற்கு இந்தப் போகம் சேகரிக்கப்பட்ட வேப்பம் விதையும் இலுப்பை விதையும் தேவை.
விற்க விரும்புவோர் பின்வரும் தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளவும்.

**077 754 1654**

### Technician தேவை/பயிலுனர் தேவை

கொழும்பில் இயங்கி வரும் டிஸ் ஆண்டெனா/ கேபிள் டிவி உதிரிப்பாக விற்பனை/ பிட்டிங் மற்றும் Repair செய்யும் நிறுவனத்துக்கு கீழ் காணும் வெற்றிடம் உள்ளது.
அனுபவமுள்ளோர் தொடர்பு கொள்ளவும்.

- டிஸ் ஆண்டெனா பிட்டிங் நன்கு செய்ய தெரிந்த Technicians (சம்பளம் 30. 000/= .... கமிஷன்)
- Receiver ரிப்பேர் செய்ய தெரிந்த Technicians சம்பளம் 40. 000/= வரை.
- டிஸ் ஆண்டெனா பிட்டிங் பழக விருப்பமுடைய பயிலுனர் சம்பளம் 20,000/=
- Store Keeper And Bill Clerk Salary 25,000/=
- உணவு. தங்குமிடம் இலவசம். **077 771 0785**

**SATS - TECH ENGINEERS (Pvt)Ltd.**
No.51/102 woulfendhal Street,
Colombo - 13

## 8ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 18 . 07 . 1936



மறைவு 13 . 08 . 2009

### அமரர்சுப்பையா வைத்திலிங்கம்

ஆண்டுகள் எட்டாகியும் – அப்பா ஆறவில்லை எம் துயரம்
ஏங்கி ஏங்க தவிக்கின்றோம் எங்கு சென்றீர் எம்மை விட்டு?
எட்டு ஆண்டுகள் வந்தாலென்ன!
எண்ணூறு ஆண்டுகளானாலும் அழியாது உங்கள் நினைவுகள்

குடும்பத்தினர்.

கோபுரம் அரிசி ஆலை,
நெளுக்குளம், வவுனியா.

கோயில் வாசல்,
இணுவில் மேற்கு

THE HALO TRUST

450 Thirunagar West
Kilinochchi
Sri Lanka

T: +94 (0) 212 285 466
vanni@halosrilanka.org
mail@halosrilanka.org
www.halotrust.org

### சாரதிகளுக்கான பதவி வெற்றிடம்

ஹலோ ரஸ்ட் ஆனது பிரித்தானியாவை தளமாகக் கொண்டு உலகளாவிய ரீதியில் 17நாடுகளில் இயங்கிக் கொண்டிருக்கிறது. இலங்கையில் 2002 ஆம் ஆண்டு தொடக்கம் மிதிவெடிகள் மற்றும் வெடிக்கத்தக்க பொருட்களை அகற்றிக் கொண்டிருக்கின்றது.

ஹலோட்ரஸ்ரின் எதிர்கால வேலைக்காக சாரதிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவர்களின் அத்தியாவசிய சேவைகளாவன. மிதிவெடி அகற்றும் அணிகளை மிதிவெடித் தளத்திற்கு நகர்த்திச் செல்வதும் அங்கு விபத்து நிகழ்ந்தால் அம்புலன்ஸ் சேவை வழங்குவதுமாகும்.

அனைத்து விண்ணப்பதாரிகளும் AD ஓட்டுநர் உரிமம் வைத்திருக்கவேண்டும்.

ஆர்வமுள்ளவர்கள் உங்களுடைய சுயவிபரக் கோவை மற்றும் தொடர்புகொள்ள வேண்டிய விபரங்களை கீழ்உள்ள முகவரிக்கு எதிர்வரும் 19ஆம் திகதி ஆவணி மாதம் 2017 சனிக்கிழமைக்கு முன்னதாகச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**ஹலோட்ரஸ்ட்**
**450,திருநகர் மேற்கு, கிளிநொச்சி.**

# பாவத்திலிருந்து விடுபட என் பக்கம் ஓடிவாருங்கள்

## சு.க. அமைச்சர்களுக்கு மகிந்த அழைப்பு



கொழும்பு, ஓக. 15

"நாட்டில் ஏற்பட்டிருக்கும் பொருளாதாரப் பிரச்சினைக்கு கடன் அல்ல காரணம். மத்திய வங்கி ஊழல் தான் காரணம். அதன் சுமை மக்கள் மீது ஏற்றப்படுகின்றது. இது இந்த நாட்டு மக்களுக்குச் செய்யும் மிகப் பெரிய பாவமாகும். இந்தப் பாவத்தில் இருந்து சுதந்திரக் கட்சி அமைச்சர்கள் விடுபட வேண்டும். இனிமேலும் இந்த அரசில் இருக்காமல் அனைத்துப் பதவிகளையும் துறந்துவிட்டு என் பக்கம் வந்துவிடுங்கள்"

இவ்வாறு பகிரங்க அழைப்பு விடுத்துள்ளார் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச.

தம்புள்ளையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு அழைப்பு விடுத்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த அரசு எப்படிப்பட்ட ஊழலில் ஈடுபட்டுள்ளது என்பதை இந்த நாட்டு மக்கள் விளங்கி வைத்துள்ளனர். திருடர்கள் சிக்கத் தொடங்கியுள்ளனர். முதலில் என்னைத் திருடன் என்றார்கள். இப்போது அவர்களே திருடர்கள் என்று அவர்களே கூறுகின்றனர்.

துறைமுகம், அதி வேகப் பாதை மற்றும் வானூர்தி நிலையம் எனப் பல அபிவிருத்திகளை நான் செய்தேன். இந்த அரசு நான் மேற்கொண்ட அபிவிருத்தியை வெளிநாடுகளுக்கு விற்கத் தொடங்கியுள்ளது. இவ்வாறு விற்றுப் பெற்ற பணத்தை யார்யாரெல்லாம் பகிர்ந்து கொண்டார்கள் என்று அறிவதற்காக ஆணைக்குழு ஒன்று அமைக்கப்படவேண்டும் - என்றார். (வ-3)

## விஜயதாச ராஜபக்சவை செயற்குழுவிலிருந்து தூக்க ஐ.தே.க. திட்டம்

கொழும்பு, ஓக. 15

அமைச்சர் விஜயதாஸ ராஜபக்சவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வருவதற்கு முன் அவரை ஐக்கிய தேசிய கட்சியின் செயற்குழு உறுப்பினர் பதவியில் இருந்து நீக்குவதற்கு அந்தக் கட்சியின் பின்வரிசை உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் மைய செயற்குழுக்கூட்டம் நாளைமறுதினம் வியாழக்கிழமை கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் இடம்பெறும்போது இந்த யோசனையை முன்வைப்பதற்கு அவர்கள் தீர்மானித்துள்ளார்கள் என்று அந்தக் கட்சி வட்டாரம் தெரிவிக்கிறது.

அம்பாந்தோட்டை துறைமுகம் சீனாவுக்கு வழங்கப்பட்டமைக்கு எதிராக விஜயதாஸ களமிறங்கியுள்ளதால் அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைக் கொண்டு வருவதற்கு ஐக்கிய தேசிய கட்சியின் பின்வரிசை உறுப்பினர்கள் தீர்மானமெடுத்து அதனை தலைமை அமைச்சரும் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவிடம் அறிவித்தனர். (வ-3)

## ஆபாசப் படங்கள் [illegible] தவருக்கு [illegible]யல்

அலைபேசி சேமிப்பகத்தில் ஆபாசப் படங்களை வைத்திருந்தமைக்காகவும், வர்த்தகர் ஒருவரைத் தாக்கிக் காயப்படுத்திய குற்றச்சாட்டிலும் இளைஞர் ஒருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

அந்த நபர் மிருசுவில் பகுதியில் உள்ள வணிக நிலையமொன்றில் பீடி கேட்டபோது பீடி விற்பனை செய்வது இல்லையெனக் கூறியதால் நண்பருடன் சேர்ந்து வர்த்தகரை கைகளாலும் தலைக்கவசத்தாலும் தாக்கியுள்ளார். அவர் செலுத்தி வந்த மோட்டார் சைக்கிள் இலக்கத் தகடு மறைக்கப்பட்டு காணப்பட்டது என்று வர்த்தகரால் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

அந்த நபரைக் கைது செய்து விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் அவரது அலைபேசியை சோதனையிட்டனர். அதில் பதிவேற்றம் செய்யப்பட்ட ஆபாசப் படங்கள் இருப்பது கண்டறியப்பட்டது.

இந்த இளைஞருக்கு எதிராக வர்த்தகரைத் தாக்கிக் காயப்படுத்தினார் என ஒரு வழக்கும், அலைபேசியில் ஆபாசப் படங்களை வைத்திருந்தார் என மற்றொரு வழக்கும் தனித்தனியாகப் பதிவு செய்து நேற்று சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் முற்படுத்தினர்.

வழக்குகளை விசாரித்த நீதிவான் இளைஞரை எதிர்வரும் 25ஆம் திகதி விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ந-10-9)

# கூட்டு அரசின் ஆட்டம் செப்ரெம்பரில் 'பினிஷ்'

## மகிந்த அணியின் எதிர்பார்ப்பு இது

கொழும்பு, ஓக. 15

அரசுக்குள் மோசடியும் பிளவும் உச்சத்தை அடைந்துள்ளதால் எதிர்வரும் செப்ரெம்பர் இறுதிக்குள் இந்தக் கூட்டு அரசு கவிழும் என்று மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஊழல், மோசடிகளைக் காரணம் காட்டி அவற்றை ஒழிக்கப் போவதாகக் கூறியே இந்த அரசு ஆட்சிக்கு வந்தது. ஆனால், அப்படிப்பட்ட அரசுதான் இன்று ஊழலில் உச்சத்தில் இருக்கின்றது. இந்த அரசு புரிந்த முதலாவது ஊழல்தான் மத்திய வங்கி பிணை முறி. அந்த ஊழல் இந்த நாட்டின் பொருளாதாரத்தை அதல பாதாளத்துக்குத் தள்ளியுள்ளது.

இந்த மோசடியுடன் தொடர்புபட்ட முதலாவது திருடர் இப்போது சிக்கி அமைச்சுப் பதவியை இழந்துள்ளார். இனி ஏனைய திருடர்களும் வெளிப்படுத்தப்படுவார்கள். அவர்கள் யார் என்பதை நாம் விரைவில் மக்களிடம் சொல்வோம்.

மக்கள் விழிப்படைந்துவிட்டனர். அரசின் பொய் வாக்குறுதிகளை நம்பி அவர்கள் ஏமாந்துவிட்டனர். அவர்கள் இந்த அரசுக்கு முடிவு கட்டுவர். இவர்களை வீட்டுக்கு அனுப்பும்வரை போராடுவோம். உலக நாடுகளின் சதி வலைக்குள் சிக்கிக் கொண்டு தொடர்ந்தும் இந்த நாட்டைச் சீரழிப்பதற்கு நாம் இனியும் அனுமதிக்க மாட்டோம். - என்றார். (வ-3)

# கொலைகள் செய்தாவது ஆட்சியைத் தக்கவைக்கும் நிலைக்குள் கூட்டு அரசு

## ரோஹித அபயகுணவர்தன எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 15

கொலைகள் செய்தாவது ஆட்சியைத் தக்கவைத்துக்கொள்ள வேண்டும் என்கிற நிலைப்பாட்டுக்கு கூட்டு அரசு வந்துள்ளது என்று மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபயகுணவர்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த அரசு இரண்டு வருடங்களை வீணாகக் கழித்துவிட்டது. மீதி வருடங்களையாவது நல்லமுறையில் கழிக்கும் என்று நாம் எதிர்பார்த்தோம். அமைச்சரவை மாற்றம் நல்லதொரு மாற்றத்தைக் கொண்டுவரும். அந்த மாற்றத்தோடு நல்ல நிலமை ஏற்படும் என்று நாம் எதிர்பார்த்தோம்.

ஆனால், அண்மையில் நடைபெற்ற அமைச்சரவை மாற்றத்தில் சில பொறுப்புகள் மாற்றப்பட்டதோடு சரி. எதுவும் நடக்கவில்லை. அந்த அமைச்சரவை மாற்றத்தின் பின்தான் நாட்டின் நிலமை மேலும் மோசமாகியுள்ளது. பல்கலைக்கழக மாணவர்கள் தாக்கப்படுகின்றனர். எவராலும் இதைச் சகிக்கமுடியாது.

பொருளாதாரம் வீழ்ந்துவிட் டது. அரச சொத்துகள் வெளிநாடுகளுக்கு விற்கப்படுகின்றன. நாடு ஓரிடத்தில் முடங்கி நிற்கின்றது. முன்னோக்கி நகரமுடியவில்லை. தேர்தல்களை நடத்துவதற்கும் அரசால் முடிய வில்லை. தோல்விப் பயமே இதற்குக் காரணம்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் ஒத்திப்போடப்பட்டுள்ளது. அடுத்து மாகாண சபைத் தேர்தல்களும் ஒரே தினத்தில் நடத்துவதற்காக ஒத்திவைக்கப்பட்டுள்ளது. சப்ரகமுவ, வட மத்திய மற்றும் கிழக்கு மாகாண சபைகளின் ஆயுள்காலம் அடுத்த மாதம் நிறைவடையவுள்ளது.

நாட்டில் அசாதாரண நிலமையை இந்த அரசு இப்போது உருவாக்குகின்றது. கொலைகள் செய்தாவது ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்ள வேண்டும் என்கிற நிலைப்பாட்டுக்கு இந்த அரசு வந்துள்ளது. இதன் விளைவுகளை நாம் விரைவில் அனுபவிக்க நேரிடும் -என்றார். (வ-சி)

## இறைவரித் திருத்த சட்டவரைவு விரைவில் நாடாளுமன்றுக்கு

கொழும்பு, ஓக. 15

திருத்தி அமைக்கப்பட்ட உள்நாட்டு இறைவரிச் சட்ட வரைவு நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளதாக அமைச்சர் எரான் விக்ரமரட்ன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் கடந்த வருடம் முன்வைக்கப்பட்ட உள்நாட்டு இறைவரிச் சட்ட வரைவில் சில சரத்துக்கள் அரசமைப்புக்கு முரணானது என உயர் நீதிமன்றம் சட்ட விளக்கமளித்திருந்தது. அரசமைப்புக்கு முரணான விடயங்கள் திருத்தி அமைக்கப்பட்டு புதிய உத்தேச சட்ட திருத்த வரைவு நாடாளுமன்றில் முன்வைக்கப்படவுள்ளது என்றும் அவர் கூறினார். (வ)

### இலங்கை அதிரடிப் படைக்கு பயிற்சியளித்ததால்

# பிரி. பொலிஸ் படை மீது தமிழ் பெண் முறைப்பாடு

லண்டன், ஓக. 15

இலங்கை பொலிஸ் சிறப்பு அதிரடிப்படையினருக்கு பயிற்சி வழங்கிய பிரிட்டனின் றோயல் அல்ஸ்டர் கொன்ஸ்டபிளரி படைக்கு எதிராக, பாதிக்கப்பட்ட தமிழ்ப் பெண்ணொருவர் அயர்லாந்தில் முறைப்பாடு செய்துள்ளார். எனினும் அந்தப் பெண் தொடர்பான விவரங்கள் வெளியிடப்படவில்லை.

1986ஆம் ஆண்டு தனது உறவினர்கள் 10 பேர் கொலை செய்யப்பட்டுள்ளதாகவும், அதற்கு இலங்கையின் சிறப்பு அதிரடிப் படையினர் பொறுப்புக் கூற வேண்டும் எனவும் அவர் முறைப்பாட்டில் வலியுறுத்தியுள்ளார்.

பிரிட்டன் றோயல் அல்ஸ்டர் கொன்ஸ்டபிளரி படையினர், இலங்கை சிறப்பு அதிரடிப் படையினருக்கு பயிற்சி வழங்கியமையால்தான் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டதாக அந்த முறைப்பாட்டில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது என்று பிரிட்டன் ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. (வ)

### பிணை முறி மோசடி விவகாரம்:

# ஆதாரங்களை முன்வைக்க நிவாட் கப்ரால் தயாராம்

கொழும்பு, ஓக. 15

மத்திய வங்கி பிணை முறி மோசடி குறித்து விசாரிக்கும் அரச தலைவர் ஆணைக்குழுவில் முன்னிலையாகி, தன்னிடமுள்ள ஆதாரங்களையும் முன்வைக்க விரும்புவதாக மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார்.

மத்திய வங்கியில் இடம்பெற்ற பிணை முறி மோசடியுடன் அஜித் நிவாட் கப்ராலுக்கும் தொடர்புண்டு என கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வில் ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் குற்றஞ்சாட்டியிருந்தார்.

இதனையடுத்து அஜித் நிவாட் கப்ரால், வெளியிட்ட செய்திக் குறிப்பிலேயே மேற்கண்டவாறு அவர் குறிப்பிட்டுள்ளார். "ஆணைக்குழுவில் முன்னிலையாகுவது குறித்து நான் மகிழ்ச்சியடைகின்றேன். ஆணைக்குழுவின் சகல கேள்விகளுக்கும் பதிலளிக்கத் தயாராக உள்ளேன்" என்று அவர் அதில் தெரிவித்துள்ளார். (வ)

# நாடாளுமன்றில் பொய் உரைத்தாராம் ரவி

கொழும்பு, ஓக. [illegible]

அந்நியச் செலா[illegible] மோசடி [illegible] தொடர்பிலான [illegible]ல் இருந்து [illegible]ம் விடுவிக்க[illegible]தாக முன் [illegible] அயலுற[illegible]றை இணை[illegible] ரவி கருணா[illegible] நாடாளு[illegible]மன்றில் கூறி[illegible] [illegible]து என மக்[illegible] நாடாளு[illegible]மன்ற உறுப்பின[illegible]

குணவர்தன தெரிவித்தார். [illegible]

"அந்த வழக்கின் [illegible] குறைபாடுகளைத் திருத்தியமைத்து மீண்டும் வழக்குத் தாக்கல் செய்யும் வாய்ப்பு சட்டமா அதிபருக்கு[illegible] [illegible] குறிப்பிடப்பட்டுள்ளது. [illegible] வழக்கிலிருந்து ரவி [illegible] விடுவிக்[illegible] [illegible] கூறுபவர்கள் குற்றவியல் விசாரணைப் பிரிவில் வாக்குமூலம் வழங்க வேண்டும்" என்று பந்துல குணவர்தன மேலும் தெரிவித்தார். (வ)

# சீனா, இந்தியாவால் இலங்கைக்கு அழிவு

## நீதி அமைச்சர் விஜயதாஸ ஆரூடம்



கொழும்பு, ஒக. 15
"சீனாவும் இந்தியாவும் போட்டி போட்டுக்கொண்டு இலங்கையை ஆக்கிரமித்துக் கொண்டு போவதால் இரு நாடுகளும் இந்த மண்ணில் போர் செய்யும் நிலை ஏற்படும். அப்போது இலங்கை மக்களே உயிரிழப்பர்"

இவ்வாறு நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச தெரிவித்தார்.

அமைச்சர் விஜயதாஸவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வருவது தொடர்பில் ஐக்கிய தேசிய கட்சியினர் தீர்மானித்துள்ளனர். அது தொடர்பில் கருத்து வெளியிட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அம்பாந்தோட்டை துறைமுகம் சீனாவுக்கு வழங்கப்பட்டமை பிழையான செயற்பாடாகும். எமது சந்ததியினருக்கு இனி அதை அனுபவிக்க முடியாமல் போகும்.

நாம் மிகப் பெரிய மக்கள் சொத்தை இழக்கின்றோம். அரசில் ஒரு முக்கிய அமைச்சராக நான் இருக்கின்றேன் என்பதற்காக அரசு கொண்டு வரும் நாட்டுக்கு விரோதமான வேலைத் திட்டங்களை ஆதரிக்கமாட்டேன்.

அந்த அடிப்படையில்தான் நான் அம்பாந்தோட்டை துறைமுகம் சீனாவுக்கு வழங்கப்பட்டமையை எதிர்க்கின்றேன். சீனாவும் இந்தியாவும் போட்டி போட்டுக்கொண்டு இலங்கையை ஆக்கிரமித்துக்கொண்டு போகின்றன. இரு நாடுகளும் இந்த மண்ணில் போர் செய்யும் நிலை ஏற்படும். அப்போது இலங்கை மக்களே உயிரிழப்பர்.


சீனாவும் இந்தியாவும் நிரந்தர எதிரிகள். அந்த நாடுகளின் அதிகாரப் போட்டிக்கு எமது நாட்டைக் காவு கொடுக்கப் பார்க்கின்றனர். எம்மை அழிப்பதற்கு நாமே துணை போகின்றோம். இப்போது நாம் தேவையற்ற சிக்கலில் சிக்கி இருக்கின்றோம். இதில் இருந்து நாம் மீள வேண்டும். ஏதோ ஒரு வகையில் நாம் இந்தத் துறைமுகத்தை சீனாவிடம் இருந்து மீட்டெடுப்போம்.

இது தொடர்பில் எனக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்டால் அதை நான் எதிர்கொள்வேன்.

நாட்டுப் பற்றுமிக்கவர்கள் எனக்கு ஆதரவு தருவார்கள். நான் திருடினேன் என்று குற்றஞ்சாட்டி இந்தப் பிரேரணையை அவர்கள் கொண்டு வரவில்லை. நாட்டுக்கு ஆதரவாகப் பேசியமைக்காகவே கொண்டு வருகின்றனர் - என்றார். (வ-3)

# முஸ்லிம் காங்கிரஸ் கிழக்கை கைப்பற்றும்

## அதன் தலைவர் ஹக்கீம் நம்பிக்கை



மட்டக்களப்பு, ஒக. 15
சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கிழக்கு மாகாண சபையை கைப்பற்றுவதுடன், ஓட்டமாவடி கோறளைப் பற்று மேற்கு பிரதேச சபையை உள்ளூராட்சித் தேர்தலில் தனவசப்படுத்தும் என அந்தக் கட்சியின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

ஓட்டமாவடியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அபிவிருத்தியை நோக்கிய மாபெரும் பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"எங்களுடைய அரசியல் அதிகாரம் கடந்த கால ஆட்சிகளிலே பெரும் போடுதடிகளாக எமது கட்சியை காப்பாற்றுவதற்காக சரணாகதி அரசியல் செய்கின்ற நிலமைக்குத் தள்ளப்பட்டது. எனினும் காலம் மாறி வருகின்றபோது கட்சிப் போராளிகள் தைரியமாக இருக்கின்றார்கள் என்றே எண்ணுகின்றோம். கல்குடா காத்தான்குடியில் தாங்கள் அபிவிருத்தி செய்தோம் என கூறும் அமைச்சர்கள் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸை காட்டிக் கொடுத்துத்தான் அரசியல் செய்தார்கள். எனவே அதில் முஸ்லிம் காங்கிரஸுக்கு பங்கு உள்ளதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்" என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (வ)

### டுபாய் வங்கிக் கணக்கு விவகாரம்:

# ராஜிதவுக்கு எதிராக நீதிமன்றம் செல்ல மகிந்த தீர்மானம்

மகிந்த குடும்பம் அவர்களது டுபாய் வங்கிக் கணக்கில் 236 பில்லியன் அமெரிக்க டொலர் கறுப்புப் பணத்தை வைப்பில் இட்டுள்ளனர் என்று அமைச்சர் ராஜித சேனாரத்ன கூறி வருகின்றமைக்கு எதிராக மகிந்த நீதிமன்றம் செல்லவுள்ளார் என்று அவரது தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவிக்கின்றனர்.

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவும் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவும் கோடிக் கணக்கான ரூபா கறுப்புப் பணத்தை டுபாய் வங்கியில் வைப்பில் இட்டுள்ளனர் என்று அரசு தொடர்ச்சியாக் கூறி வருகின்றது.

மகிந்தவின் கணக்கில் 18 பில்லியன் அமெரிக்க டொலரும் நாமலின் கணக்கில் 218 பில்லியன் அமெரிக்க டொலரும் வைப்பிலிடப்பட்டுள்ளன என்று அரசு கூறுகின்றது. இந்தப் பணத்தை மீளப் பெற்று அரசுடமையாக்குவதற்கான நடவடிக்கை இடம்பெற்று வருவதாகவும் கூறப்படுகிறது.

அமைச்சர் ராஜித சேனாரத்னவே இதில் அதிக அக்கறை எடுக்கின்றார். இந்த விவகாரத்தை அதிகம் அதிகமாக பேசுபவராகவும் இந்தப் பணத்தைக் கைப்பற்றுவதற்கு அரசுக்கு தொடர்ச்சியாக அழுத்தம் கொடுப்பவராகவும் ராஜிதவே இருந்து வருகின்றார்.

இதனால் ராஜித பொய்ப் பரப்புரைகளை மேற்கொண்டு தனது பெயருக்கு களங்கம் ஏற்படுத்தி வருகின்றார் என்று தெரிவித்து ராஜிதவுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்கு மகிந்த முடிவெடுத்துள்ளார் என்று மகிந்த அணியினர் கூறுகின்றனர்.

இதேவேளை, நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவின் டுபாய் வங்கிக் கணக்கு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றது என்றும் அந்தக் கணக்கில் கோடிக்கணக்கில் பணம் இருப்பது தெரியவந்துள்ளது என்றும் அமைச்சர் அஜித் பீ பெரேரா ஓரிரு நாட்களுக்கு முன் தெரிவித்திருந்தார். (வ-3)

# பஸ்களுக்கான முன்னுரிமை தலைநகரில் இன்று ஆரம்பம்

கொழும்பு, ஒக. 15
கொழும்பு நகரில் பேருந்து போக்குவரத்துக்கென முன்னுரிமை ஒழுங்கையை ஒதுக்கும் திட்டம் இன்று தொடக்கம் முன்னெடுக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

'பேருந்துகளுக்கான முன்னுரிமை ஒழுங்கை செயற்திட்டம் காலை 6 மணி தொடக்கம் 9 மணி வரை நடைமுறைப்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. இந்த காலப்பகுதியில் முன்னுரிமை ஒழுங்கையில் பயணிகள் போக்குவரத்து பேருந்துகளும், பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்லும் வாகனங்களும் மாத்திரம் பயணிக்க முடியும். தரிப்பிடம் ஒன்றில் பேருந்து ஒன்று நிறுத்தப்படும் போது, பின்னால் வருகை தரும் பேருந்து முன்னாலிருக்கும் பேருந்து பயணத்தை ஆரம்பிக்கும் வரை காத்திருக்க வேண்டும்.

அதேபோன்று தரிப்பிடத்தில் நிறுத்தும் பேருந்தும் தாமதிக்காமல் பயணத்தை மீண்டும் தொடங்க வேண்டும்.

காலி வீதியில் மொறட்டுவை சிலுவை சந்தியிலிருந்து கட்டுபெத்த வரையும் வெள்ளவத்தை சவோய் திரையரங்கிலிருந்து பம்பலப்பிட்டி சந்தி வரையும் இன்று பேருந்து முன்னுரிமை ஒழுங்கை நடைமுறைப்படுத்தப்படும். அதன் அடுத்த கட்டம் எதிர்வரும் 22ஆம் திகதியும் 29ஆம் திகதியும் அடுத்த மாதம் 5ஆம் திகதியும் 12ஆம் திகதியும் நவம்பர் மாதம் 30ஆம் திகதியும் நடை முறைப்படுத்தவுள்ளன' என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (வ)



பாகிஸ்தானின் 70ஆவது சுதந்திர தின வைபவம் கொழும்பிலுள்ள பாகிஸ்தான் தூதரகத்தில் நேற்று நடைபெற்றது. இலங்கைக்கான பாகிஸ்தான் தூதுவர் கலாநிதி சவ்ராஸ் அகமட்டின் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் இலங்கை அயலுறவுத் துறை அமைச்சின் அதிகாரிகளும் கலந்துகொண்டனர். (வ)

# லொத்தர் சபை மீண்டும் நிதி அமைச்சிடம்

கொழும்பு, ஒக. 15
ரவி கருணாநாயக்க நிதி அமைச்சர் பதவியிலிருந்து, அயலுறவுத் துறை அமைச்சராக நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அயலுறவுத் துறை அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்ட தேசிய லொத்தர் சபை, மீண்டும் நிதி அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட உள்ளதாக அரச தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ரவி கருணாநாயக்க தமது அமைச்சுப் பதவியை துறந்ததைத் தொடர்ந்து, நிதி மற்றும் ஊடக அமைச்சரான மங்கள சமரவீரவின் கீழ் தேசிய லொத்தர் சபை கொண்டுவரப்படவுள்ளது. (வ)

# அரசமைப்புச் சபையில் இருப்பதா? விலகுவதா?

## தீவிர ஆலோசனையில் மகிந்த அணி என்கிறார் தினேஷ்

கொழும்பு, ஒக. 15
அரசமைப்பு நிர்ணய சபையில் தொடர்ந்து நீடிப்பதா? அல்லது வெளியேறுவதா? என்று முடிவெடுப்பதற்காக மகிந்த அணி தீவிரமாக கலந்தாலோசித்து வருகின்றது என்று நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.


இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மகிந்த அணியிலுள்ள விமல் வீரவன்ஸவின் கட்சி அரசமைப்பு நிர்ணய சபையிலிருந்து விலகியதால் மகிந்த அணியும் விலகுமா? என்ற கேள்விகள் மக்களால் எழுப்பப்படுகின்றன. இதுவரையில் நாம் அரசமைப்புச் சபையிலும் அரசமைப்பை உருவாக்கும் வழிநடத்தல் குழுவிலும் அங்கம் வக்க்கின்றோம்.

அரசமைப்புச் சபையில் இருப்பதா? இல்லையா? என்று முடிவெடுப்பதற்காக நாம் கலந்தாலோசித்து வருகின்றோம்.

நாட்டின் ஒற்றையாட்சியைப் பாதுகாப்பதற்காகவும் பௌத்த மதத்தைப் பாதுகாப்பதற்காகவும் நாம் தொடர்ச்சியாக எமது பங்களிப்பை வழங்கி வருகின்றோம்.

புதிய அரசமைப்புக்கு நாட்டுக்கு விரோதமான யோசனைகள் முன்வைக்கப்பட்ட போதெல்லாம் வழிநடத்தல் குழுவில் இருந்து கொண்டு நாம் அவற்றை எதிர்த்திருக்கின்றோம். எமது நிலைப்பாடு என்றுமே நாட்டுக்கு ஆதரவானதாகும். ஒற்றையாட்சியை விட்டுக் கொடுக்காமல் தேசிய பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்படாமல் பார்த்துக்கொள்வதே எமது முக்கிய பணியாகும். அரசமைப்பு நிர்ணய சபையில் இருந்தோ அல்லது வழிநடத்தல் குழுவில் இருந்தோ விலகவேண்டிய தேவை எழுந்தால் அதுபற்றி சாதகமாக முடிவெடுப்போம். அதுபற்றி நாம் இப்போது கலந்தாயோசித்துவருகின்றோம் - என்றார். (வ-சி)



# எகிப்து ரயில் விபத்து சாவு எண்ணிக்கை 44

கெய்ரோ, ஓக. 15

எகிப்து நாட்டின் அலெக்சாந்திரியா நகரில் இரண்டு ரயில்கள் நேற்று முன்தினம் மதியம் நேருக்கு நேர் மோதிக் கொண்ட விபத்தில், உயிரிழப்பு எண்ணிக்கை 44ஆக உயர்ந்துள்ளது.

ஒரு ரயில் தலைநகர் கெய்ரோவில் இருந்து வந்துள்ளது. மற்றொரு ரயில் கோர்சித் பகுதியில் உள்ள போர்ட் செய்ட்டில் இருந்து வந்துள்ளது. இந்தக் கோர விபத்தில் 29 பேர் உயிரிழந்தனர் என்று முதல்கட்டத் தகவல்கள் தெரிவித்தன. நேற்று முன்தினம் மாலை வெளியான இரண்டாம் கட்டத் தகவல் உயிரிழப்பு 40 என்று குறிப்பிட்டது. தற்போது உயிரிழப்பு 44ஆக அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. 150இற்கும் அதிகமானவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் பலரின் நிலமை கவலைக்கிடமாக உள்ளது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

(ம)



போஸ்னியாவில், நீர்வீழ்ச்சியில் குதிக்கும் பன்னாட்டுப் போட்டி நடைபெற்று வருகிறது. அதில் பங்கேற்கும் ஓர் போட்டியாளரின் ஒளிப்படமே இது. (ம)

# வடகொரியா விடயத்தில் ப… அமெரிக்காவுடன் தொடர்ந்து…

## ஜப்பானின் ஆதங்கம் இ…

டோக்கியோ, ஓக. 15

வடகொரியா விடயத்தில் பொறுமை காக்கும்படி அமெரிக்காவை சீனா கேட்டிருந்த நிலையில், இந்த விடயத்தில் பொறுமை இல்லை என்றும், அடுத்த கட்ட நகர்வுகள் குறித்து திட்மிட்டு வருகின்றோம் என்றும் தற்போது தெரிவித்துள்ளது அமெரிக்காவின் நட்பு நாடான ஜப்பான்.

பன்னாட்டு சட்டதிட்டங்களையும், விதிகளையும் மீறி வடகொரியா தொடர்ந்து பல ஏவுகணைச் சோதனைகளை நடத்தி வருகிறது. அண்மையில் அந்த நாடு கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைகளை வெற்றிகரமாகச் சோதித்தது. தமது சோதனைகள் அமெரிக்காவுக்கு எதிரானவை என்று வடகொரியா பகிரங்கமாக அறிவிக்கவும் செய்தது. இதையடுத்து வடகொரியா மீது அமெரிக்கா கூடுதல் பொருளாதாரத் தடைகளை விதித்தது. ஐக்கிய நாடுகள் சபையும் சில தடைகளை விதித்தது. வடகொரியாவின் முக்கிய ஏற்றுமதிகளான நிலக்கரி, இரும்பு, கடலுணவுகள் ஆகியன தற்போது முடக்கப்பட்டுள்ளன. இதனால் கோபமடைந்த வடகொரியா, தமது சோதனைகளை இந்தத் தடைகள் ஒன்றும் செய்யா. பசுபிக் பெருங்கடலில் உள்ள குவாம் தீவை நிச்சயம் தாக்குவோம் என்று எச்சரிக்கை விடுத்தது. அது தொடர்பான செயற்திட்டங்களிலும் அது



இறங்கியது. இதற்குப் பதிலடி கொடுத்த அமெரிக்க அதிபர் ட்ரம்ப், "வடகொரியாவில் தாக்குதல் நடத்தப்படும் இடத்தை நாம் இலக்கு வைத்து விட்டோம். உலகம் இதுவரை சந்திக்காத பேரளிவை வடகொரியா விரைவில் சந்திக்கும்" என்று எச்சரிக்கை விடுத்தார்.

தீபகற்பம் மீண்டும் பரபரப்பாக மாறியிருந்த நிலையில், இந்த விடயத்தில் பொறுமை காக்குமாறு சீன அதிபர் ஜி ஜின் பிங், ட்ரம்பைக் கேட்டிருந்தார். இந்த நிலையில் ஜப்பானின் தரப்பில் இருந்து செய்தித் தொடர்பா…


# பர்கினோவில் தீவிரவாதத் தாக்குதல்

மேற்கு ஆபிரிக்காவில் உள்ள நாடான பர்கினோ பாசோவின் தலைநகர் டோவுகோவில் உள்ள உணவு விடுதியொன்றில் நேற்று நடத்தப்பட்ட தீவிரவாதத் தாக்குதலில் 17 பொதுமக்கள் கொல்லப்பட்டனர் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. 8 பேர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

(ம)

# அரசுக்கு எதிரா… இளைஞர்கள் …

## கென்யாவில் சம்பவ…



நைரோபி, ஓக. 13

கென்யாவில் நடந்த அதிபர் தேர்தலில் உகுரு கென்யட்டா வெற்றி பெற்று மீண்டும் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இந்த முடிவை ஏற்க மறுத்து போராட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்கள் தற்போது கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆபிரிக்க நாடான கென்யாவில் உகுரு கென்யட்டா அதிபராக பதவி வகித்தார். அவரது பதவிக்காலம் முடிவடைந்ததையொட்டி அங்கு கடந்த வியாழக்கிழமை அதிபர் தேர்தல் நடத்தப்பட்டது. கென்யட்டா மீண்டும் போட்டியிட்டார். அவரை

# ஏவுகணைத் திட்டத்துக்கு அதிக நிதி; உத்தரவிட்டது ஈரான் நீதிமன்றம்

## அமெரிக்காவின் பொருளாதாரத் தடைகளை கணக்கெடுக்காமல் அதிரடி முடிவு

தெக்ரான், ஓக. 15

ஈரான் மீது தடை விதித்துள்ள அமெரிக்காவுக்கு எரிச்சலூட்டும் வகையில், ஏவுகணை திட்டத்துக்கு அதிக நிதி ஒதுக்க ஈரான் நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது.

அரேபிய வளைகுடாப் பகுதியில் உள்ள நாடுகளில் ஒன்றான ஈரான் சில தினங்களுக்கு முன்பு ஓர் ஏவுகணைச் சோதனையை நடத்தியது. இந்தச் சோதனை செயற்கைக் கோள்களை சுமந்து செல்லும் வகையிலான ஏவுகணை என்று ஈரான் தெரிவித்தது. எனினும், இது கண்டம் விட்டு கண்டம் பாயும் சோதனை முயற்சி என்று அமெரிக்கா தெரிவித்தது.

இதனால் ஈரான் மீது ஏகப்பட்ட பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது அமெரிக்கா. இதையடுத்து ஈரான் கடல்பரப்பில் அமெரிக்கப் போர்க் கப்பல்கள் அத்துமீறி சுற்றுகின்றன என்று ஈரான் குற்றம் சாட்டுகிறது. இந்தப் பின்னணியிலேயே ஏவுகணைச் சோதனைக்கும், ஆராய்ச்



சிக்கும் அதிகளவிலான தொகையை ஒதுக்கியுள்ளது ஈரான். சுமார் 52 கோடி அமெரிக்க டொலர்கள் ஒதுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்கா, ரஷ்யா, சீனா, பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி ஆகிய வல்லரசு நாடுகளுடன் ஈரான் கடந்த 2015ஆம் ஆண்டு அணுசக்தி ஒப்பந்தம் செய்து கொண்டது. இந்த ஒப்பந்தத்தின்படி, ஈரான் அணு ஆயுதங்கள் எதையும் தயாரிக்கக்கூடாது. அதற்கு பதிலாக அந்த நாட்டின் மீது விதிக்கப்பட்ட பன்னாட்டுப் பொருளாதார தடைகள் விலக்கிக்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த உறுதிமொழியை மையமாக வைத்து ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு சபையின் தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டது. இந்த ஒப்பந்தமும் தற்போது முடிவுக்கு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ம)

# பொறுமையில்லை
# தும் ஆலோசனை
## ிது



ளர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில், "வடகொரியாவின் இந்த நடவடிக்கைகள் அதன் பிராந்திய நாடுகள் மற்றும் உலக நாடுகளின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக உள்ளது. எங்களால் வடகொரியாவின் நடவடிக்கைகளைத் தொடர்ந்து பொறுத்துக் கொள்ள முடியாது. ஜப்பான் சார்பில் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். இது தொடர்பாக அமெரிக்காவுடன் தொடர்ந்து ஆலோசனை நடததி வருகிறோம்'' என்று தெரிவித்துள்ளார். (ம)


# இணைகிறது அ.தி.மு.க.



சென்னை, ஓக. 15

அ.தி.மு. கழகத்தின் இரண்டு அணிகளும் விரைவில் இணையும் சாத்தியமுள்ளது என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. ஜெயலலிதாவின் மறைவின் பின்னர் அ.தி.மு. கழகம் மூன்றாக உடைந்துள்ளது. தினகரன், ஓ.பன்னீர்செல்வம், எடப்பாடி பழனிச்சாமி ஆகியோரின் தலைமையில் அந்த மூன்று குழுக்களும் செயற்படுகின்றன. தினகரனை நீக்கிவிட்டு இணைந்து செயற்படுவது குறித்து ஓ.பன்னீர்செல்வம் தரப்பினரும், எடப்பாடி பழனிச்சாமி தரப்பினரும் பேச்சு நடத்தினர். எனினும் இணைப்பு நடைபெறவில்லை. இந்த நிலையில் இந்த இரு தரப்பின் தலைவர்களான எடப்பாடி நேற்றுமுன்தினமும், பன்னீர்செல்வம் நேற்றும் இந்தியத் தலைமை அமைச்சர் மோடியைச் சந்தித்தனர். இந்தச் சந்திப்பு இணைப்பை அடிப்படையாகக் கொண்ட சந்திப்பே என்றும் குழுக்கள் இரண்டும் தலைமை அமைச்சரின் முன்னால் இணையவுள்ளன என்றும் இந்திய ஊடகங்கள் மேலும் குறிப்பிட்டன. (ம)

# ிராகப் போராடிய
# ள் கைதாகினர்
## பவம்



எதிர்த்து எதிர்க்கட்சி சார்பில் ரெய்லா ஒடிங்கா களம் இறங்கினார். கென்யட்டா 54.3 சதவீத வாக்குகளைப் பெற்று அதிபராகத் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளார். இந்த முடிவை எதிர்க்கட்சி வேட்பாளர் ஒடிங்கா ஏற்கவில்லை. தேர்தலில் முறைகேடு நடந்ததாகக் கூறினார். அதைத் தொடர்ந்து கென்யத் தலைநகர் நைரோபி, கிசுமு, கிபேரா உள்ளிட்ட பல நகரங்களில் கலவரம் மூண்டுள்ளது. அரசுக்கு எதிராக கலவரத்தில் ஈடுபட்ட பல இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (ம)

## பாகிஸ்தானில் சுதந்திரதினக் கொண்டாட்டம் கோலாகலம்

இஸ்லாமபாத், ஓக. 15

பாகிஸ்தானின் 70ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டங்கள் நேற்று அந்த நாட்டில் மிகவும் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. லாகூர் அட்டாரி எல்லைப் பகுதியில் தெற்காசியாவின் மிகப் பெரிய தேசியக் கொடியும் ஏற்றி வைக்கப்பட்டது.

120 அடி நீளமும், 80 அடி அகலமும் உடைய இந்தத் தேசியக் கொடி சுமார் 400 அடி உயரமுடைய கம்பத்தில் ஏற்றிவைக்கப்பட்டது. இஸ்லாமபாத் நகரில் நடைபெற்ற சுதந்திர தின நிகழ்வில் சீனாவின் துணைத் தலைமை அமைச்சர் வாங் யாங் கலந்து கொண்டார். (ம)





உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# ‘குட் பிரைடே’யும் இலங்கையும்

சிறுபான்மை மக்களுக்கு அதிகாரத்தைப் பகிர்ந்தளிப்பதன் மூலமே நாட்டைப் பிளவுபடாமல் பாதுகாக்க முடியும் என்று தமது அனுபவத்தை இலங்கையில் பகிர்ந்துகொண்டிருக்கிறார்கள் பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர்கள். வடக்குகிழக்குப் பகுதிகளுக்கும் பயணம் செய்த அவர்கள் கள நில வரத்தையும் அரசியல் சூழலையும் நேரில் ஆராய்ந்த பின்னர் கொழும்பில் இந்தக் கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள்.

ஐக்கிய இராச்சியத்திற்குள் (பிரிட்டன்) அடங்கியிருந்த வட அயர்லாந்து தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்துப் போராடத் தொடங்கியபோது அங்கும் உள்நாட்டுப் போர் ஆரம்பித்தது.

ஐக்கிய இராச்சியமானது மொத்தமாக நான்கு பாகங்களைக் கொண்டது. இவற்றில் மூன்று முடிக்குரிய நாடுகளான இங்கிலாந்து, வேல்ஸ் மற்றும் ஸ்காட்லாந்து ஆகியவை. இவை மேற்கு ஐரோப்பாவில் உள்ள பிரிட்டன் தீவில் உள்ளன. நான்காவது பாகமான வட அயர்லாந்து பிரிட்டன் தீவுக்கு வெளியே அயர்லாந்து தீவிலுள்ளது.

வரலாற்று ரீதியான பல ஒப்பந்தங்கள் ஊடாகவே (வேல்ஸை உள்ளடக்கிய) இங்கிலாந்து அரசோடு முதலில் ஸ்காட்லாந்தும், பின்னர் அயர்லாந்தும் இணைக்கப்பட்டு இலண்டன் மாநகரைத் தலைநகராகக் கொண்ட ஐக்கிய இராச்சியம் உருவாக்கப்பட்டது.

1922இல் அயர்லாந்தின் பெரும்பாகம் ஐக்கிய இராச்சியத்திலிருந்து விடுபட்டு ஒரு சுதந்திர நாடாக உருவானது. (எனினும் 1949 வரை, ஐக்கிய இராச்சியத்தின் மன்னரே அயர்லாந்தின் மன்னராகவும் திகழ்ந்தார்). பின்னர், அது அயர்லாந்து குடியரசாக உருமாறியது. ஆனால், அந்தத் தீவின் வடகிழக்குப் பகுதியிலுள்ள ஆறு வட்டாரங்கள் வடக்கு அயர்லாந்து என்ற உருவில் ஐக்கிய இராச்சியத்துடனேயே தொடர்ந்தன. 1998இல் உருவாக்கப்பட்ட ‘குட் பிரைடே’ ஒப்பந்தத்தின் மூலமாகவே வடக்கு அயர்லாந்து சுயாட்சியைப் பெற்றுக் கொண்டது.

அயர்லாந்தின் பகுதியாக இருந்தாலும், நீண்ட காலமாக ஐக்கிய இராய்ச்சியத்தின் (பிரிட்டனின்) ஆட்சியின் கீழ் இருந்ததன் காரணமாக வட அயர்லாந்து இரு பகுதிகளினதும் கலாசாரக்கலப்புக்கு உள்ளாகி தனித்துவமான நிலையை அடைந்தது. இதனால் அயர்லாந்துக் குடியரசுடன் மீண்டும் சேர்ந்துவிடுவதிலும் பார்க்க, ஐக்கிய இராச்சியத்தின் கீழ் ஒரு சுயாட்சி அரசாக அது மாற்றமடைந்தது. அதனைச் சாத்தியமாக்குவதற்கு ‘குட் பிறைடே’ ஒப்பந்தம் வழிகோலியது.

பெரிய வெள்ளி ஒப்பந்தம் எனப்படும் இந்த ஒப்பந்தம் ஏற்படுவதற்கு முன்னர் வட அயர்லாந்து மக்கள் அரசியல் வழியிலும் ஆயுத வழியிலும் போராடினார்கள். வன்முறைகள் நிறைந்ததாக அந்தப் போராட்டம் இருந்தது. அதிலிருந்து எப்படித் தாம் மீண்டு வந்து அமைதியையும் இணக்கத்தையும் ஏற்படுத்தினார்கள் என்பதைத்தான் பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எடுத்துரைத்தனர்.

மிகக் கொரடூரமான ஒரு உள்நாட்டுப் போருக்குப் பின்னர் அமைதியையும் இணக்கத்தையும் எதிர்பார்த்திருக்கும் இலங்கைக்குத் தமது அனுபவம் ஒரு பாடமாக இருக்கக் கூடும் என்பது அவர்களின் எதிர்பார்ப்பாக இருந்திருக்கக் கூடும்.

ஆனால், அதையெல்லாம் காதில் வாங்கிச் செயற்படும் நிலையிலா தற்போதைய கூட்டு அரசில் உள்ள அரசியல்வாதிகள் இருக்கிறார்கள்? வட அயர்லாந்துப் பிரச்சினையை எப்படித் தீர்த்துக்கொள்ளலாம் என்று உளமார எண்ணியதன் விளைவாக பிரிட்டனில் ஓர் அமைதி ஒப்பந்தத்தை ஏற்படுத்த முடிந்தது.

இலங்கையிலோ தீர்வு, அமைதி, நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் என்பவை எல்லாம் உலக நாடுகளை ஏமாற்றும் தந்திரோபாய உத்திகளே தவிர உண்மையான அக்கறைக்குரியவை அல்ல. அதனாலேயே பெரிய வெள்ளி ஒப்பந்தத்தைப்போன்றதொன்று இங்கு உருவாகாமலேயே போய்விடுகிறது. தங்கள் நலனை மட்டுமே சிந்திப்பவர்களாக சிங்கள மக்கள் இருக்கும் வரைக்கும் இந்த நிலையே தொடரவும் செய்யும்.

# எதிர்ப்புக்களை எதிர்கொள்கிறார் வடக்கு முதலமைச்சர்

சேரலாதன்

முன்னாள் போராளிகள் தொடர்பாக வடக்கு முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்த கருத்துக்குப் பல்வேறு தரப்புக்களிடமிருந்தும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது.

கூட்டமைப்பின் ஒரு பங்காளிக் கட்சியான ரெலோ அமைப்பின் சார்பில் இதற்கு உடனடியாகவே கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அமைப்பின் செயலாளரான ந.சிறிகாந்தா இது தொடர்பாக ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்திக்குறிப்பில், தமிழ் மக்களின் பேராதரவுடன் பதவிக்கு வந்த சி.வி.விக்னேஸ்வரன், போராளிகளுக்கு எதிராக இவ்வாறான கருத்துக்களைத் தெரிவித்துள்ளமை ஏற்றுக்கொள்ள முடியாதது எனத் தெரிவித்துள்ளார். போர்ப்பயிற்சி பெற்றவர்கள் வடக்கில் குற்றச் செயல்களில் ஈடுபடுவதற்கான வாய்ப்புள்ளது என வடக்கு முதலமைச்சர் கூறியிருந்மை இங்கு குறிப்பிடத்தக்கது.

### முன்னாள் போராளிகள் குறித்து முதலமைச்சரது பொறுப்பற்ற கருத்து

வடக்கு முதலமைச்சரின் இந்தப் பொறுப்பற்ற, தான்தோன்றித்தனமான கருத்துக்களை எவருமே ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். போர் இடம்பெற்றபோது கொழும்பில் பாதுகாப்புடன் சொகுசு வாழ்க்கை வாழ்ந்தவர் சி.வி. விக்னேஸ்வரன். போரின் கொடுமையையும், மக்கள் அனுபவித்த அவலங்களையும் அறிந்திராத அவர் போன்றவர்கள், எதுவித சிரமமும் இல்லாது பதவிச் சுகத்தை அனுபவித்துக் கொண்டு, வாய்க்கு வந்ததை எல்லாம் கூறுவது நியாயமும் அல்ல; தர்மமும் அல்ல. முன்னாள் போராளிகள் தமது இனத்துக்காகவே போராடியவர்கள். தமது குடும்பம், சுகதுக்கங்கள் சகலதையும் துறந்து களமாடியவர்கள். இவர்களில் பல ஆயிரக் கணக்கானவர்கள் தமது இன்னுயிர்களைத் தியாகம் செய்திருக்கின்றனர். ஏராளமானவர்கள் அங்கங்களை இழந்துள்ளனர். பலர் தமது ஒட்டுமொத்தக் குடும்பங்களையும் இழந்துள்ளனர். இறுதிப் போரின் பின்னர், புனர்வாழ்வு நடவடிக்கைக்குள் உள்வாங்கப்பட்ட இவர்களில் ஒரு தரப்பினர் தமது குடும்பங்களுடன் இணைந்து வாழ்கின்றனர். பொருளாதார ரீதியில் பெரும் பின்னடைவைச் சந்தித்து வரும் இவர்கள், அதைச் சீர் செய்வதற்காகப் போராடி வருகின்றனர். இந்த நிலையில் வடக்கு முதலமைச்சர் இவர்கள் தொடர்பாகத் தெரிவித்த கருத்து இவர்களை மனதளவில் பெரிதும் பாதித்து விட்டது.


இளைஞர்களின் ஆயுதப் போராட்டம் காரணமாகவே, 1987 ஆம் ஆண்டு இந்திய-இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இதன் மூலமாகவே அரசமைப்பில் 13 ஆவது திருத்தம் மேற்கொள்ளப்பட்டது. இதன் பயனாக உருவாகியது தான் மாகாண சபைகள். ஆரம்பத்தில் வடக்கும், கிழக்கும் இணைந்த வகையில் மாகாணசபை ஒன்று உருவாக்கப்பட்டது. ஆனால் இதைக்கூட இனவாதிகள் ஏற்றுக்கொள்ளவில்லை. இதனால் வடக்கும் கிழக்கும் துண்டாடப்பட்டன. கிழக்கில் மாகாணசபைக்கான தேர்தல் தனியாக இடம் பெற்றது. ஆனால் வடக்கில் இடம்பெறவில்லை. பல்வேறு தரப்பினரின் அழுத்தங்களைத் தொடர்ந்து 2013 ஆம் ஆண்டு செப்ரம்பர் மாதம் வடக்கு மாகாணசபைக்கான தேர்தல் இடம்பெற்றது. தேர்தல் இடம்பெறும்வரை கொழும்புவாசியாக வாழ்ந்த சி.வி.விக்னேஸ்வரன் வடக்கை எட்டிப்பார்த்தார். தேர்தல் பரப்புரைக் கூட்டங்களில் கலந்து கொண்டார். மாகாணசபையில் தமக்கு மூன்றில் இரண்டு பங்கு ஆதரவு கிடைத்தால் வடக்கு ஆளுநரை உடனடியாகவே அகற்றி விடுவதாகச் சூளுரைத்தார். மக்களும் அவரது பேச்சில் மயங்கினார்கள். இவர்தான் முதலமைச்சர் பதவிக்கு மிகப் பொருத்தமானவர் எனத் தீர்மானித்து அமோக ஆதரவையும் வழங்கினர். ஆனால் இவர் முதலமைச்சரின் கதிரையில் அமர்ந்ததைத் தவிர, வழங்கிய வாக்குறுதிகளில் எதையுமே நிறைவேற்றவில்லை. பின்னர் மாகாண சபையிலும், அதற்கு அப்பாலும் இடம்பெற்ற விடயங்கள் அனைவரும் அறிந்ததுதான்.

### தமிழ் மக்களது ஆதரவு தற்போதும் தமக்குண்டு என்ற முதலமைச்சரது தப்புக்கணக்கு

நான் எவருக்குமே அஞ்சமாட்டேன், மக்களின் பலம் எனக்குத்தான் உள்ளது. என்றெல்லாம் கர்ச்சித்தவர்தான் இவர். கூட்டமைப்பின் தலைமையைக்கூட ஒரு பொருட்டாக இவர் கருதவில்லை. மாற்றுத் தலைமை என்ற கனவில் இவர் மூழ்கியிருந்தார் ஆனால் தற்போது அந்தக் கனவும் கலைந்துவிட்டது. கூட்டமைப்புக்கு நான் விரோதியல்ல; கூட்டமைப்பிலேயே நான் உள்ளேன், என்றெல்லாம் சுருதி கலைந்து இவரது குரல் ஒலிக்கத் தொடங்கிவிட்டது. மக்கள் இவரது உண்மைத் தன்மையை மெல்ல மெல்ல உணர்ந்து கொண்டுள்ளனர். கூட்டமைப்புக்கு விரோதமானவர்களிடம் இவர் கொண்டுள்ள உறவையும் புரிந்து கொண்டுள்ளனர். இவரது பிரித்தாளும் தந்திரமும் தற்போது அம்பலத்துக்கு வந்துள்ளது.

### மக்களுக்குப் பதில் கூறவேண்டிய கடப்பாடு முதலமைச்சருக்கு உண்டு

மாகாண அமைச்சுக்கள் மீது விசாரணை இடம்



பெறுமானால், அதில் முதலமைச்சரின் வசமுள்ள அமைச்சுக்களும் உள்ளடக்கப்படுதல் வேண்டும். ஆனால் முதலமைச்சர் இதற்கு இணங்கத் தயாரில்லை. இதற்கான காரணம் என்ன? மக்களால் முதலமைச்சரின் கதிரையில் அமர்த்தி வைக்கப்பட்ட சி.வி. விக்னேஸ்வரன் தமது எண்ணம் போன்று எதையுமே செய்துவிட முடியாது. மக்களுக்குப் பதில் சொல்லித்தான் ஆக வேண்டும். ஆனால் முதலமைச்சரோ மாகாண சபையில் தாமே எல்லாமும் என்பது போன்று அதிகாரத் திமிருடன் நடந்து கொள்கிறார். இதை எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ளமுடியாது.

தற்போது போராளிகள் தொடர்பாக அவர் தெரிவித்துள்ள கருத்துக்கள் மிகவும் பாரதூரமானவை. தமிழ் மக்களின் உணர்வுகளுக்கு எதிரானவை. குறிப்பாக முன்னாள் போராளிகளின் எதிர்காலத்தைப் பாதிக்கக் கூடியவை. ரெலோ அமைப்பின் செயலாளர் சிறிகாந்தா கூறியது போன்று, சாமானியர் ஒருவர் இத்தகைய கருத்தைக் கூறியிருந்தால், பொறுத்துக் கொள்ள முடியும். ஆனால், பொறுப்புள்ள பதவியில் அமர்ந்துள்ள சி.வி.விக்னேஸ் வரன் கூறியதை ஏற்றுக் கொள்ளவே முடியாது. இது குளத்தைக் கலக்கி மீன்களைக் பலி கொடுக்கும் செயலுக்கு ஒப்பானது. முன்னாள் போராளிகளின் வாழ்க்கையுடன் விளையாடுவதற்கு எவருக்குமே அருகதை கிடையாது. ஏனென்றால் அனுபவிக்க வேண்டிய துன்பங்களையெல்லாம் அனுபவித்தவர்கள் அவர்கள்.

மேலும் பொலிஸ்மா அதிபரின் கூற்றுக்கு வலுச் சேர்க்கும் வகையில் வடக்கு முதலமைச்சர் கருத்து வெளியிட்டதை எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாது .

சி.வி.விக்னேஸ்வரன் இனியாவது பொறுப்புடன் செயற்படுவதற்கு முன்வர வேண்டும். கடந்த காலத் தவறுகளை அவர் மீண்டும் விடுவா ராயின், தமிழ் மக்கள் அவரை மன்னிக்கவே மாட்டார்கள்.

# குழப்பங்களின் களமாகிறது வடமாகாண சபை



இந்துமதி

வடக்கு மாகாண சபையில் மீண்டும் குழப்பங்கள் ஏற்படுவதற்கான வாய்ப்பு அதிகரித்துள்ளது. அமைச்சரவை தொடர்பான விடயங்கள் யாவும் வடக்கு முதலமைச்சரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதால் அவரால் பிரச்சினைகள் எழக்கூடும் என்ற எதிர்பார்ப்பும் அதிகரித்துக் காணப்படுகின்றது.

சில தினங்களுக்கு முன்னர் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்ற கட்சிகளின் தலைவர்களுடனான கூட்டமொன்றைக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் கூட்டியிருந்தார். அந்தக் கூட்டத்தில் வடக்கு முதலமைச்சரும் கலந்து கொண்டார். அந்தக் கூட்டத்தில் வடக்கு மாகாண சபையின் நடவடிக்கைகள் தொடர்பாகவே முக்கியமாக ஆராயப்பட்டது. பின்னர் அமைச்சரவை நியமனம், மாற்றங்கள் தொடர்பான அதிகாரங்கள் தம்வசமே இருக்க வேண்டுமென்பதில் சி.வி.விக்னேஸ்வரன் விடாப்பிடியாக நின்றார். இந்த விடயத்தில் அவர் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையுடன் நடந்து கொள்ளவில்லை. இறுதியில் சம்பந்தனின் வற்புறுத்தலின் பேரில் விக்னேஸ்வரனின் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டது.

### முதலமைச்சருக்கு ஆதரவான, எதிரான அணிகள் இரண்டு

வடக்கு மாகாணசபை கூட்டமைப்பின் வசம் உள்ளதாகக் கூறப்படுகின்றபோதிலும், முதலமைச்சருக்கு எதிரான அணி, ஆதரவான அணியென இரண்டாகப் பிளவுபட்டுக் காணப்படுகின்றது. தகுதி உண்டோ, இல்லையோ இனிமேல் முதலமைச்சருக்கு ஆதரவானவர்களுக்கு மட்டுமே அமைச்சர்பதவி கிடைக்குமென்பது உறுதியாகிவிட்டது. ஏனையவர்கள் அமைச்சர் பதவியை நினைத்துக்கூடப் பார்க்க முடியாது. இந்த நிலையில், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி வடக்கு மாகாண அமைச்சுப் பதவிகளைத் தூக்கி எறிந்துவிட்டதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன.

முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தமிழ் அரசுக் கட்சியைப் பழி வாங்கும் வகையில் செயற்படுவதால், புதிய அமைச்சர்களை முதலமைச்சர் நியமிக்கும்போது அதில் எதனையும் ஏற்றுக்கொள்வதில்லை எனவும், தற்போது அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் தமிழ் அரசுக் கட்சியைச் சேர்ந்த ப.சத்தியலிங்கம் தமது பதவியிலிருந்து விலகுவதெனவும், தமிழ் அரசுக் கட்சியைச் சேர்ந்த மாகாணசபை உறுப்பினர்களின் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது. சரியான தருணத்தில் எடுக்கப்பட்டதொரு புத்தி சாலித்தனமான முடிவாகவே இதனைக் கருத வேண்டியுள்ளது.

### மக்கள் தம்முடனேயே உள்ளனர் என்று நம்பினார் முதலமைச்சர்

ஏற்கனவே அமைச்சர்கள் விடயத்தில் வடக்கு முதலமைச்சர் இமாலயத் தவறுகளை விட்டுள்ளார். இதன் காரணமாகவே மாகாண சபையில் குழப்பங்கள் ஏற்பட்டுள்ளன. முதலமைச்சர் விட்ட தவறுகளே அவருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு வழி வகுத்தன. ஆனால் தமது தவறுகளை மறைத்து மற்றவர்களின் அனுதாபத்தைச் சம்பாதிக்கவே முதலமைச்சர் முயன்றுள்ளார். பொதுவாகக் கூட்டமைப்பின் மீதும், குறிப்பாகத் தமிழ் அரசுக் கட்சியின் மீதும் பகையுணர்வுடன் உள்ளவர்கள் கிடைத்த சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்திக் கொண்டனர். முதலமைச்சருக்கு ஆதரவு தெரிவிப்பது என்ற போர்வையின் கீழ் தமது பழி தீர்க்கும் முயற்சியைச் செவ்வனே செய்து முடித்தனர். தமக்குக் கிடைத்த ஆதரவைக் கண்டு சி.வி.விக்னேஸ்வரன் மனம் நெகிழ்ந்து போனார். மக்கள் என்னுடன் இருக்கும் போது நான் எவருக்குமே அஞ்ச மாட்டேன் என அவர் சூளுரைத்தார். ஆனால் அவர் தமக்கு ஆதரவு தெரிவித்தவர்களின் கபட நோக்கத்தைப் புரிந்து கொள்வதற்குத் தவறிவிட்டார். ஒரு நீதியரசராகப் பதவி வகித்தவர், நீதி நியாயங்களைக் கடைப்பிடிப்பதற்குத் தவறிவிட்டார். தாம் சொல்வதும் செய்வதுமே சரியென எண்ணத் துணிந்து விட்டார்.

கூட்டமைப்பின் தலைவரைப் பொறுத்தவரையில் முதலமைச்சரை அவரது கதிரையில் இருந்து தூக்கி எறிவதொன்றும் பெரியதொரு விடயமல்ல. அதற்கான சகல அதிகாரங்களும் அவரிடம் உள்ளன. கூட்டமைப்பு விரும்பாத ஒருவர் முதலமைச்சர் பதவியில் நீடிக்க முடியாது. ஆனால் தம்மால் முதலமைச்சர் பதவியில் அமர்த்தப்பட்ட விக்னேஸ்வரனை அந்தப் பதவியிலிருந்து இடைநடுவில் தூக்கி எறிவதற்குச் சம்பந்தன் விரும்பவில்லை போலத் தோன்றுகிறது. அவரது பதவிக் காலம் முடியும்வரை பொறுத்திருந்து பார்க்கவே சம்பந்தன் விரும்புகிறார் என்று தெரிகின்றது. **அதுவரையில் மாகாண சபையில் முதலமைச்சரால் குழப்பங்கள் ஏற்படவே செய்யும்.**

**வடக்கு மாகாணசபை கூட்டமைப்பின் வசம் உள்ளதாகக் கூறப்படுகின்றபோதிலும், முதலமைச்சருக்கு எதிரான அணி, ஆதரவான அணியென இரண்டாகப் பிளவுபட்டுக் காணப்படுகின்றது.**

### தமது பொறுப்பை உணராது சுயநலப் போக்கில் செயற்படும் மாகாண சபை உறுப்பினர்கள்

போரினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட வடக்கு மக்களின் வாக்குகளால் உருவான வடக்கு மாகாண சபை அந்த மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டிய பொறுப்பிலுள்ளது. இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியமர்வு, காணாமற் போனவர்களின் விடயம், படையினரால் அபகரித்து வைக்கப்பட்டுள்ள காணிகளை மீளப்பெறல், சட்டவிரோதமாக இடம்பெறுகின்ற குடியேற்றங்கள், பிற மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர்களின் தொல்லைகள், இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள், வடக்கில் நிலவுகின்ற கடுமையாக வறட்சி குடிதண்ணீர்ப் பிரச்சினை எனத் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகள் ஏராளமாக உள்ளன. ஆனால் வடக்கு மாகாணஅரசு இவற்றைக் கண்டு கொள்வதாகத் தெரியவில்லை. பதவிகளுக்கான போராட்டம், தீர்வையற்ற வாகனங்களுக்கான அனுமதிப்பத்திரங்களை விற்றுப் பணம் சம்பாதித்தல், மாகாண சபை உறுப்பினர்களுக்கு ஒதுக்கித் தருகின்ற நிதியைப் பாரபட்சமான முறையில் செலவழித்தல் ஆகியவற்றில்தான் மாகாணசபை உறுப்பினர்கள் அதிக கவனம் செலுத்தி வருகின்றனர் எனத் தெரிகின்றது. மக்களின் சேவகர்களாக இருந்து உழைக்க வேண்டிய இவர்கள் தமது நலன்களில்மட்டுமே கவனம் செலுத்தி வருகின்றமை மக்களுக்குச் செய்கின்ற மிகப் பெரிய துரோகமாகும். இனிமேல் அமைச்சர்களின் நியமனத்தின்போது கூட, மாகாண சபையில் குழப்ப நிலை தோன்றப் போவதை எதிர்பார்க்க முடியும். இதில் முதலமைச்சர் ஒரு புறத்தில் நின்றுகொண்டு, குழப்பத்தை ஏற்படுத்தி வைக்க மறுபுறத்தில் மாகாண சபை உறுப்பினர்கள் முட்டி மோதப் போகின்றனர்.

வடக்கு மாகாண சபையின் தற்போதய நிலைமையைப் பார்க்கும் போது, அது அமைக்கப்படாமலே இருந்திருக்கலாமென மக்கள் நினைக்கும் அளவுக்கு நிலைமை மோசமான கட்டத்தை எட்டிவிட்டது. நீதியரசராக இருந்த சி.வி.விக்னேஸ்வரன் நல்லாட்சியை வழங்குவார், எமது பிரச்சினைகளுக்கெல்லாம் தீர்வைப் பெற்றுத் தருவார் என மக்கள் நம்[illegible] ஆனால் அவர் தமது செய்கைகளின் மூலமாகத் தமக்கு வாக்களித்த மக்களை ஏமாற்றி விட்டார். இனிமேல் மாகாண சபையில் இடம்பெறப்போகும் குழப்பங்களை மக்கள் இது எமது தலை விதியோ என நொந்தவாறு அவதானிக்கப்போகின்றனர். **தமிழர்களின் தலைவிதி இதுவென்றால் எவரால்தான் [illegible] செய்ய முடியும்?**

## ஆசிரியருக்கான கடிதம்

### பாரபட்சமற்ற வகையில் அரச உதவிகள் வழங்கப்படவேண்டும்

சமுர்த்தித் திட்டத்தின் கீழ் தொடர்ச்சியாக உதவிகளைப் பெற்றுக் கொண்டிருக்கின்ற மற்றும் குறித்த உதவிகளைப் பெறத் தகுதியிருந்தும் அவை வழங்கப்படாதவர்களது விவரங்களை மீள் பரிசீலனைக்கு உட்படுத்துதல் தொடர்பாக கணிப்பீட்டுப் படிவங்கள் கடந்த 2015ஆம் ஆண்டில் சமுர்த்திப் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு அவர்களது குடும்ப நிலை தொடர்பான தகவல்கள் திரட்டப் பட்டன. 2016ஆம் ஆண்டிலும் தொடர்ந்த அந்தக் கணிப்பீட்டுச் செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டு அண்மையில் மீளாய்வு விவரங்கள் வெளியிடப் பட்டன.

அதன்படி இதுவரை காலமும் சமுர்த்தி உதவிகள் பெற்று வந்த பல குடும்பங்களது பெயர்கள் நீக்கப்பட்டும், புதிய பயனாளிகளது பெயர்கள் சேர்க்கப்பட்டும் பொது மக்களது தகவலுக்காக பட்டியல் காட்சிப்படுத்தப் பட்டது.

இதனால் ஏற்கனவே குறித்த உதவிகளைப் பெற்று வந்தவர்களில் பலரது பெயர்கள் நீக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அத்தகையோர் வேண்டுமென்றே தாம் பழிவாங்கப் பட்டோம் என்றும் அரசின் இத்தகைய செயற்பாடு அநீதியானது எனவும் பல்வேறு எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டனர். உண்மையில் இது வரை தாம் பெற்ற சலுகை தடைப்படுவதால் குறிப்பிட்ட அந்த மக்கள் தரப்பினர் அதிருப்தி அடைவது நியாயம் தானே!


அதிலும் குறிப்பாக போர் இடம்பெற்ற வடக்கு கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த மக்களது வாழ்க்கைத் தரத்தில் எதுவித உயர்வும் எட்டப்படாத நிலையில் தாம் குறித்த உதவியை இழப்பதால் பாதிக்கப்படுவதாக அந்தத் தரப்பினர்கள் எதிர்ப்பு வெளியிடுவது நியாயமே.

இவற்றைக் கருத்தில் எடுத்து இது வரை சமுர்த்தி உதவிகளைப் பெற்று வந்தோருக்கான குறித்த உதவி எது விதத்திலும் நிறுத்தப்படமாட்டாது என அரச தலைவர் உறுதியளித்திருப்பது மனதுக்கு ஆறுதலளிக்கும் ஒன்றே. அரசின் குறித்த உதவியைப் பெறத் தகுதியிருந்தும் அதனைப் பெற இயலாதிருந்த தரப்பினர்கள் குறித்து மறு பரிசீலனை செய்யப்பட்டு நியாயமான விதத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென நிர்வாகத் தரப்பினர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளமை பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும். மொத்தத்தில் அரச உதவி பெறத் தகுதியானோர் பாரபட்[illegible] நடத்தப் படுவர் என நம்புவோம்.

ப.[illegible]ந்திரன்.
[illegible]

# கைத்தொழில் உற்பத்தி சுட்டெண்கள் அதிகரிப்பு

## ஜூன் மாத உற்பத்தியில் 0.3 வீதமாகப் பதிவு




2016 ஆம் ஆண்டின் மாதாந்த உற்பத்திகளுடன் ஒப்பிடுகையில் 2017 ஜூன மாத உற்பத்தியில் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் அளவீடானது 0.3 வீதத்தால் அதிகரித்துள்ள தகவலை தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரப் பணிப்பாளர் நாயகம் அமர சதரசிங்க வெளிப்படுத்தியுள்ளார்.

தவிர, உற்பத்திக் கைத்தொழில்களில், 2016 ஆம் ஆண்டு ஏப்ரல் மாத உற்பத்திகளுடன் ஒப்பிடுகையில் நடப்பாண்டின் ஜூன் மாத உற்பத்திகளில் 'அடிப்படை மருந்தாக்கல் உற்பத்தி' 19.5 வீதமாகவும், 'அடிப்படை உலோக உற்பத்தி பொருள்கள்' 14.0 வீதமாகவும் மற்றும் வடிவமைக்கப்பட்ட உலோக உற்பத்திப் பொருள்கள் 12.7 வீதமாகவும் பதிவாகியுள்ளதுடன் உற்பத்தியில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைக் காட்டுகின்றன. 2016 ஆம் ஆண்டு ஜூன் மாத உற்பத்தியுடன் ஒப்பிடுகையில் நடப்பாண்டின் ஜூன் மாத உணவு உற்பத்தியானது 2.3 வீத அதிகரிப்பை காட்டுகின்றது.

**கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் (2015=100)**

| மாதம்/ காலாண்டு | சுட்டெண் பெறுமதி |
|---|---|
| ஜூன் - 2016 | 105.2 |
| ஜூன் - 2017 | 105.5 |
| வருடத்தின் வருட மாற்றம் (%) | 0.3 |
| 2ஆம் காலாண்டு | 103.0 |

கைத்தொழில் உற்பத்தியில் 'கோக் மற்றும் சுத்திகரிக்கப் பட்ட பெற்றோலிய உற்பத்திகள்', 'இரசாயனம் மற்றும் இரசாயனப் பொருள் உற்பத்தி' மற்றும் 'பானவகைகள் உற்பத்தி' ஆகியன முறையே 29.6 வீதம், 12.1 வீதம் மற்றும் 9.2 வீத வீழ்ச்சியைக் காட்டுகின்றன. உற்பத்திக் கைத்தொழில்களில் 2016 ஆம் ஆண்டு இரண்டாம் காலாண்டு உற்பத்திகளுடன் ஒப்பிடுகையில் நடப்பாண்டின் இரண்டாம் காலாண்டு உற்பத்தி 1.4 வீத அதிகரிப்பை வெளிக்காட்டியுள்ளது.

கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணானது மிகப் பிரதானமான பொருளாதாரக் குறிகாட்டியாக உள்ளதுடன் அவை குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியில் கைத்தொழில் உற்பத்தியின் அளவில் ஏற்படும் குறுகிய கால மாற்றங்களையும் வெளிப்படுத்துகின்றமை குறித்து நோக்கத்தக்கது. (ஓ)



# கிராமியப் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யத் தீர்மானம்

## பன்னாட்டு முதலீடுகளை ஊக்குவிக்க நடவடிக்கை

"கிராமியப் பொருளாதாரத்தை அபிவிருத்திப் பாதையில் சிறந்த நடைமுறைகளினூடு மேம்படுத்துவதற்கான செயற்திட்டமொன்றினை அரசு ஆரம்பித்துள்ளது. அதன் வழியே நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தி மாறுதலற்ற பேண்தகு தன்மையை ஏற்படுத்தவுள்ளோம்'' என்று தெரிவித்துள்ளார் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க.

இதன்படி அரச தலைவரின் ஆலோசனையோடு நாட்டை அபிவிருத்திப் பாதையில் பயணிக்கச் செய்வதற்கு அரசு புதிய உத்வேகத்தோடு செயற்படவுள்ளது என்ற எதகவலும் அவரால் முன்வைக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து மேலும் கருத்துரைத்துள்ள அவர்.

"தேசிய மற்றும் வெளி நாட்டு முதலீடுகளை அதிகரித்து அதனூடாக பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு அரசு அடிப்படையான அடித்தளங்களை இட்டுள்ளது. தேசிய கொள்கையின் அடிப்படையில் நாட்டை முன்னெடுத்துச் செல்வதற்கான அனைத்து வேலைத் திட்டங்களும் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன" - என்றார். (ஓ)

> "பொருளாதார அபிவிருத்தியை நோக்காகக்கொண்டு சீனா, இந்தியா மற்றும் சிங்கப்பூர் சந்தைகள் இலங்கையில் ஆரம்பிக்கப்படவுள்ளன. அத்துடன் திருகோணமலை துறைமுகத்தை இந்தியா மற்றும் ஜப்பானுடன் இணைந்து அவற்றின் அதிக நிதிப்பங்களிப்புடன் அபிவிருத்தி செய்யவும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது."

# சுற்றுலாத்துறைக்கு அதிக வருமானம்

## நடப்பாண்டின் முதல் ஐந்து மாத காலப்பகுதியில் 4.8 வீதம் அதிகரிப்பு

நடப்பாண்டின் முதல் ஐந்து மாத காலப்பகுதிக்கான சுற்றுலாத் துறையின் வருமானம் 4.8 வீதமாக பதிவாகியுள்ளதுடன் அது ஆயிரத்து 521.9 மில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளது.


கடந்த ஆண்டில் இதே காலப்பகுதியில் ஆயிரத்து 451.8 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி ஈட்டமாக கிடைக்கப்பெற்றுள்ளது

இதன்படி நடப்பாண்டின் ஜனவரி மாதம் தொடக்கம் மே மாத காலப் பகுதி வரை சுற்றுலாப் பயணிகளின் வருகை 4.8 வீதமாக அதிகரித்துள்ளதுடன் அந்த எண்ணிக்கை 8 இலட்சத்து 87 ஆயிரத்து 93 ஆகக் காணப்படுகிறது.

இந்தக் காலப்பகுதியில் இந்தியா, சீனா, பிரிட்டன், ஜேர்மனி மற்றும் பிரான்ஸ் நாடுகளில் இருந்து மொத்த சுற்றுலா பயணிகளின் வருகை 51.4 சதவிகிதமாக காணப்பட்டுள்ளது.




அதேவேளை நடப்பாண்டின் மே மாத காலப்பகுதிக்கான சுற்றுலா பயணிகளின் வருகை 2.5 சதவிகிதம் சரிவடைந்துள்ளது. ஒரு இலட்சத்து 21 ஆயிரத்து 891 சுற்றுலா பயணிகள் நாட்டிற்குள் வருகை தந்துள்ளனர். 209.1 மில்லியன் அமெரிக்க டொலர்கள் தொகை மதிப்பீடுடைய வருமானம் கிடைக்கப் பெற்றுள்ளது. (ஓ)



# கடலுணவுகளின் ஏற்றுமதி அதிகரிப்பு

## 30 ஆயிரத்து 124 மில்லியன் ரூபா வருமானம் கிடைக்கப்பெற்றுள்ளது

கடந்த ஆண்டில் ஐரோப்பிய நாடுகளுக்கான கடலுணவு பொருள்களின் ஏற்றுமதி ஆயிரத்து ஏழு மெற்றிக் தொன்களாக அதிகரித்துள்ளது என கடற்றொழில் அமைச்சு தெரியப்படுத்தியுள்ளது.


குறிப்பாக கடந்த 2016 ஆம் ஆண்டின் ஜூலை மாதம் தொடக்கம் நடப்பாண்டின் மே மாதம் வரையான 11 மாத காலப்பகுதியில் 19 ஆயிரத்து 931 மெற்றிக் தொன் அளவுடைய கடலுணவுகள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

இதனூடாக 30 ஆயிரத்து 124 [illegible] பெற்றுள்ள [illegible] அமைச் [illegible] அதி [illegible] (ஓ)

| COLOMBO STOCK EXCHANGE (CSE) | கொழும்பு பங்குப்பரிவர்த்தனை - 147-2/3, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் - 212221455 | | |
|---|---|---|---|
| | 14/8/2017 | | |
| | www.cse.lk | | |
| [illegible] | | இன்று | நேற்று |
| ASPI | -6.93 | 6,485.76 | 6,492.69 |
| S&P SL20 | 10.72 | 3,734.93 | 3,724.21 |
| வியாபாரப்புரள்வு | | 411,521,024 | 395,979,552 |
| உள்நாடு:- கொள்வனவு | | 233,645,072 | 195,194,112 |
| விற்பனை | | 271,761,600 | 200,148,864 |
| வெளிநாடு:- கொள்வனவு | | 177,875,936 | 200,785,440 |
| விற்பனை | | 139,759,424 | 195,830,688 |

| கம்பனி-அதிகூடிய பங்குப்பரிமாற்றம் | குறியீடு | இறுதிவிலை | பங்குகள் | புரள்வு (Rs) |
|---|---|---|---|---|
| சம்பத் வங்கி | SAMP.N | 285.00 | 531,857 | 151,703,498 |
| ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் | JKH.N | 164.50 | 879,178 | 144,420,747 |
| இலங்கை கொமர்ஷல் வங்கி | COMB.N | 138.00 | 84,772 | 11,698,767 |
| ஹற்றன் நஷனல் வங்கி | HNB.N | 230.00 | 50,211 | 11,598,542 |
| சிலோன் டுபாக்கோ | CTC.N | 955.00 | 11,497 | 10,979,679 |
| றிச்சட் பீரிஸ் அண் கம்பனி | RICH.N | 12.10 | 451,891 | 5,422,837 |
| பலாங்கொட பிளான்டேசன் | BALA.N | 22.60 | 203,751 | 4,523,853 |
| சிலோன் கிரேன் எலிவேற்றர் | GRAN.N | 70.00 | 64,317 | 4,457,437 |
| மஸ்கலியா பிளான்டேசன் | MASK.N | 15.10 | 280,722 | 4,194,570 |
| சேவ்ரோன் லூப்பிரிக்கன் | LLUB.N | 134.50 | 30,711 | 4,131,794 |

சந்தைத் தகவல்கள்




சம்பத் வங்கி Right issue 1 for 6 @ Rs.245

பங்குலாபம்
சிலோன் டுபாக்கோ - ரூபா 16.00
சேவ்ரோன் லூப்பிரிக்கன் - ரூபா 2.00

| சந்தைக் குறிகாட்டிகள். | |
|---|---|
| கம்பனிகள் | 295 |
| பரிமாற்றத்தில் | 248 |
| விலை உழைப்பு | 10.05 |
| புத்தகப்பெறுமதி | 1.4 |
| பங்குலாப விளைவு | 3.1 |

# மஞ்சள் கடவைகளுக்கு மதிப்பளிக்காத சாரதிகள்

■ எஸ்.மல்லிகா

சாவு எனும் தூது வந்தது, அது வாகனத்தின் வடிவில் வந்தது என்று சொல்லத்தக்க அளவுக்கு நாளாந்தம் வாகன விபத்துக்களால் சாவுகள் இடம்பெற்று வருகின்றன. இதிலும், மஞ்சள் கோட்டுக்குள் இடம்பெறும் உயிரிழப்புக்கள் நெஞ்சத்தைப் பதறச் செய்கின்றன. சாரதிகளின் அவசரத்தனமும், மதுவுக்கு அடிமையாகித் தடுமாறும் நிலையுமே இந்த விபத்துக்களை உற்பவிக்கும் காரணிகளாக உள்ளன.

**வீதிக் குறியீடுகளும் விதிமீறும் சாரதிகளும்**

வீதி ஓரங்களில் வீதிக் குறியீடுகள் அமைக்கப்பட்டிருப்பது வழமையான ஒரு விடயமாகும். விபத்துக்களைத் தவிர்ப்பதற்கும் வீதி ஒழுங்கைப் பேணுவதற்கும் இவை பெருந்துணை புரிகின்றன. ஆனால், யாழ்ப்பாணத்திலுள்ள முதன்மை வீதிகளினூடாகப் பயணிக்கும் பல சாரதிகள் இதில் அதிக கவனம் செலுத்தாமையை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. மஞ்சள் கடவைகளுக்குக் கூட இந்தச் சாரதிகள் மதிப்பளிக்கத் தவறுகின்றனர். சாரதிகள் மிக வேகமாக வந்து, கண்ணுக்கு முன்னே உயிர்களைப் பந்தாடிச் செல்கின்றனர். இலங்கையில் நூற்றுக்கணக்கான விபத்துக்கள் மஞ்சள் கடவைகளுள் இடம்பெற்றுள்ளமை பதிவாகியுள்ளது. இதில் அதிகமான உயிர்கள் காவுகொள்ளப்பட்டுள்ளன. இதனால், மஞ்சள் கடவைகளுக்குள் இறங்கி வீதியால் பயணிப்பதற்கே பொதுமக்கள் அஞ்சுகின்றனர்.


மஞ்சள் கடவை மட்டுமன்றி ஏனைய குறியீடுகளைக் கூட சாரதிகள் கவனித்துப் பயணிப்பதில்லை. எந்த இடத்தில் முந்திச் செல்ல வேண்டும், எந்த இடத்தில் திரும்ப வேண்டும் என்ற அடிப்படை அறிவற்றவர்களாக இவர்கள் காணப்படுகின்றனர். இவர்களின் முரட்டுத்தனமான சாரத்தியத்தால், விதிமுறைகளை மதித்து நடக்கும் சாரதிகள் மற்றும் பொதுமக்கள் பாதிக்கப்படுகின்றனர்.

வீதியில் இடப்பட்டிருக்கும் ஒவ்வொரு குறியீடுகளும் சமிக்ஞைகளும் சாரதிகளுக்குத் தெரிந்திருக்க வேண்டும். ஆனால், அநேகமான சாரதிகளுக்கு அவை தெரிவதில்லை. சிலர் இந்தக் குறியீடுகள் தெரிந்திருந்தும் தெரியாதது போல் நடக்கின்றனர். அவசரத்தனத்துடன் நடந்துகொள்கின்றனர். இன்னும் பலர் போதையில் வாகனம் செலுத்துகின்றனர். இவர்கள்தான் விபத்துக்கள் சம்பவிப்பதற்குப் பெரும் பங்களிப்புச் செய்கின்றனர்.

**பொலிஸாரும் ஒரு காரணம்...**

பணம் பாதாளம் வரை பாயும் என்ற முதுமொழிக்கிணங்க, சாரதி அனுமதிப் பத்திரங்களும் பணம் கொடுத்துப் பெறப்படுவதாகச் சமூக அக்கறைதாரர்கள் கூறுகின்றனர். இன்று பலரும் பணத்தைக் கொடுத்து வாகன அனுமதிப்பத்திரம் எடுத்துவிட்டு, வீதிக் குறியீடுகள் தெரியாது பயணிக்கின்றனர். இவர்களைச் சொல்லிக் குற்றமில்லை. சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும்.

சாரத்தியப் பயிற்சி நிறுவனங்கள், இலாபத்தை மட்டுமே இலக்காகக் கொண்டு இயங்குகின்றன. இந்த விடயத்தில், இலாபத்தை மாத்திரம் கணக்கிலெடுக்காது நேர்மையுடன் பணியாற்ற வேண்டும். ஆனால், அவர்கள் அதனைச் செய்வதில்லை. ஆயிரக்கணக்கான உயிர்கள் நாளுக்கு நாள் செத்து மடிவதற்கு இந்த நிறுவனங்களும் ஒருவகையில் காரணமாகின்றன. இப்படிப்பட்ட நிறுவனங்களை பொலிஸாரும் போக்குவரத்துத் திணைக்களமும் சரிவரக் கண்காணித்தல் வேண்டும்.




> மஞ்சள் கடவை மட்டுமன்றி ஏனைய குறியீடுகளைக் கூட சாரதிகள் கவனித்துப் பயணிப்பதில்லை. எந்த இடத்தில் முந்திச் செல்ல வேண்டும், எந்த இடத்தில் திரும்ப வேண்டும் என்ற அடிப்படை அறிவற்றவர்களாக இவர்கள் காணப்படுகின்றனர். இவர்களின் முரட்டுத்தனமான சாரத்தியத்தால், விதி முறைகளை மதித்து நடக்கும் சாரதிகள் மற்றும் பொதுமக்கள் பாதிக்கப்படுகின்றனர்.

மேலும், சாரதி அனுமதிப்பத்திரம் சரியாகச் சோதிக்கப்பட்டு வழங்கப்படுகிறதா என்பது பொலிஸாரால் கண்காணிக்கப்படல் வேண்டும். (மோட்டார் வாகனத்தை மட்டும் ஓட்டத் தெரிந்தவர் சகல வாகனத்துக்குமான அனுமதிப்பத்திரத்தை வைத்துள்ள குழறுபடியும் உண்டு). வீதிகளில் பொலிஸார் சாரதி அனுமதிப்பத்திரத்தைப் பரிசோதிப்பதுடன், வீதி ஒழுங்கு விதிமுகைள் பற்றிய வினாக்களைக் கேட்டுத் தண்டனைகளையும் வழங்க வேண்டும். பணத்தால் தப்பலாம் என்ற எண்ணம் மக்கள் மனங்களில் இருந்து நீங்கக்கூடிய முறையில் பொலிசார் கடமையாற்ற வேண்டும்.

ஆனால், பெரும்பாலான பொலிஸார் கையூட்டுப்பெற்றுவிட்டுக் குற்றவாளிகளைத் தப்ப விடுகின்றனர். அவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்தித் தண்டிக்கத் தவறுகின்றனர். இதனால், நாளாந்தம் இத்தகைய வீதி விதி மீறல்தாரர்கள் பெருகி வருகின்றனர். விபத்துக்களை ஏற்படுத்துகின்றனர். இதில் பொலிஸாருக்கும் பங்குண்டு. வேலிகள் வேலிகளாக இருந்தால், எந்த வெள்ளமும் நெருங்காது என்பதற்கிணங்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கடமை உணர்வுடன் செயற்பட்டால், இத்தகைய தவறுகள் இடம்பெறா.

**சாரதிக்கு மட்டுமல்ல இழப்பு**

விபத்து என்பது, கண்மூடி விழிப்பதற்குள் நடந்துவிடும் ஒன்று. இந்த விபத்து நடைபெறும் போது, சாரதிக்கு மட்டும் இழப்பு ஏற்படுவதில்லை. இதில் ஒன்றுக்கும் மேற்பட்ட தரப்பினர் பாதிக்கப்படுகின்றனர். தனியார் உடைமைகளும், பொது உடைமைகளும் சேதமடைகின்றன. இதனால், பொருளாதாரப் பாதிப்பு ஏற்படுகின்றது. அதேநேரம், விபத்தில் அங்கவீனம் அடைவதால் வீட்டுக்கும் நாட்டுக்குமான உழைப்பாளர்கள் இழக்கப்படுகின்றனர். அவர்களுக்கான பராமரிப்புச் செலவினமும் பராமரிப்பு மனிதவளமும் வீண் விரயம் ஆகின்றன.

வீதி விதிமுறைகளை மீறி வாகனங்களைச் செலுத்துவதால் ஏற்படும் விபத்துகளை விபத்து என்று குறிப்பிடுவதற்குப் பதில், இதுவும் ஒருவகைக் 'கொலை' என்றுதான் கூறவேண்டும். இதில் பெரும்பாலும் 20 வயதுக்கும் 40 வயதுக்கும் இடைப்பட்டவர்களாலேயே இப்படியான விபத்துக்கள் ஏற்படுகின்றன. சிந்தனையற்ற செயற்பாடுகளும் விவேகமற்ற வேகமும் வெளிநாட்டு உறவினரிடமிருந்து நோகாமல் பெற்ற பணமும் இந்த விபத்துக்கள் ஏற்பட வழிவகுப்பதாக தெரிவிக்கப்படுகிறது. இதிலும் மாலை 4 மணியிலிருந்து இரவு 9மணிக்கும் இடைப்பட்ட நேரத்திலேயே அதிகளவான விபத்துக்கள் ஏற்படுவதாகப்பதிவாகிஉள்ளது. இதற்கு மதுப்பாவனையும் முக்கிய செல்வாக்குச் செலுத்துகிறது.

**விபத்துக்களை தவிர்க்கும் வழிகள்**

ஒவ்வொரு சாரதியுமே சாரத்தியம் செய்யும் போது, தன்னிலை இழக்காத வகையில் இருத்தல் வேண்டும். தன்னால் ஒரு உயிர் அநியாயமாக இறக்கக்கூடாது என்பதைச் சிந்தித்துச் செயற்பட வேண்டும். வாகனத்தை முழுக் கவனத்துடன் செலுத்த வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக, வீதிக் குறியீடுகளுக்கு மதிப்பளிக்க வேண்டும். இவ்வாறு ஒவ்வொரு சாரதியும் உணர்ந்து செயற்பட்டாலே அநியாய உயிரிழப்புக்கள் தவிர்க்கப்பட்டு விடும்.

அதேபோன்று, போக்குவரத்து விதிமுறைகளைப் பற்றியும் மாணவர்களுக்குக் கற்பிக்க வேண்டும். விபத்தால் ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் பற்றித் தெளிவுபடுத்துதல் வேண்டும்.

---

# நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தின் 51ஆவது பீடாரோஹண விழா

■ இராசையா ஸ்ரீதரன்

சைவத்தையும் தமிழையும் தழைத்தோங்கச் செய்வதற்காக உருவானது தான் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம். 1966 ஆம் ஆண்டில் மணி ஐயர் என்று எல்லோராலும் அன்பாக அழைக்கப்பட்ட ஸ்ரீலஸ்ரீ சுவாமி நாத தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகளால் ஆரம்பிக்கப்பெற்ற இந்த ஆதீனம் தற்போது அழகான முறையில் கட்டப்பட்டு இன்று 51ஆவது பீடாரோஹண விழா காண்பது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

கதாப்பிரசங்கம் மூலம் பிரபல்யமடைந்த முதலாவது குருமஹா சந்நிதானத்தின் இடைவிடாத பெருமுயற்சியால் இன்று கம்பீரமாகக் காட்சி தரும் இந்த நல்லை ஆதீனத்தில் புராணபடனம் பண்ணிசை சங்கீத வகுப்புக்கள் பாலர் வகுப்புகள், பண்டித வகுப்புகள் என்ற இன்னோரன்ன பல வகுப்புகளும் நடைபெறுவதோடு வீதிப் பஜனை அன்னதானம் குருபூசைத் தினங்கள் என்று பலவும் இப்போது செயல்முறையிலிருக்கின்றன.

தம்முடைய தொண்டினாலேயே தொண்டாற்றி வந்த இவர் இலங்கையில் மட்டுமன்றி இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், லண்டன் முதலிய நாடுகளிலும் கதாப்பிரசங்கம் செய்து தமிழ் வளர சந்நிதானம் அரும்பாடுபட்டார். இவருடைய கதாப்பிரசங்கம் கேட்டுக் கொண்டே இருக்கலாம். அலுப்புத் தட்டாமல் உள்ளத்தில் அமைதியையும் மகிழ்ச்சியையும் தரக்கூடிய வகையில் கதை சொல்லுவதில் இவருக்கு நிகர் இவரே. நல்லூர் உற்சவகாலங்களில் ஆலய முன்றிலில் இவரது கதாப்பிரசங்கம் 25 நாள்களும் தொடர்ச்சியாக இடம்பெறும். அடியார்கள் பலர் இதைக் கேட்பதற்காக இரவு 11 மணி வரைக்கும் நல்லூரிலேயே இருப்பார்கள். முக்கியமாகக் கந்தபுராணம், திருவிளை யாடற்புராணம், பெரியபுராணம், இராமாயணம், மகாபாரதம், என்று பல்வேறு கதைகளையும் எளிய தமிழில் எல்லோருக்கும் விளங்கக்கூடிய வகையில் எடுத்துச் சொல்லும் வல்லமை இவருக்கு மட்டுமே உண்டு.



இன்று நல்லை ஆதீனத்தில் குருமுதல்வராக இருக்கும் இரண்டாவது குரு மஹாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகளும் தம்முடைய குருநாதர் விட்டுச் சென்ற பணியைத் தொடர்ந்து கும்பாபிசேகங்கள் சமய விழாக்கள், உற்சவங்கள் முதலானவற்றில் அருளாசியுரை வழங்குவதன் மூலம் செவ்வனே ஆற்றி வருகின்றார்.

மேலும் இன்றைய பீடாரோஹண விழாவில் குரு மூர்த்த ஆலயத்தில் விசேட அபிசேக ஆராதனைகளும் கொலு பூசை பட்டணப் பிரவேசம் அன்னதானம் என்பனவும் மிகச் சிறப்பாக இடம்பெறும். ஆகவே அடியார்கள் இன்று நல்லை ஆதீனத்தில் நடைபெறும் நிகழ்வுகளில் கலந்து சிறப்பிப்பதோடு ஆதீன வளர்ச்சிக்குத் தங்களாலியன்ற பங்களிப்பையும் ஒத்துழைப்பையும் வழங்கி உதவுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

# ஒகஸ்ட் மாத பலன்

## தனுசு

மனசாட்சிக்குக் கட்டுப்பட்டுச் செயற்படும் தனுசு ராசியினரே! இந்தக் காலகட்டத்தில் எடுத்த முயற்சிகள் கைகூடும். வரவுக்கேற்ற செலவு ஏற்படும். எதையும் சாதிக்கும் திறமையும், சாமர்த்தியமும் உண்டாகும். மனோதைரியம் கூடும். ராசிக்கு 7இல் செவ்வாயும், புதனும் சூரியனுடன் சஞ்சாரம் செய்வதால் மற்றவர்களால் குற்றஞ்சாட்டப்படலாம். எனவே கவனம் தேவை. கண்நோய், பித்தம், வாதம் சம்பந்தப்பட்ட நோய் ஏற்பட்டு நீங்கும். வார்த்தைக்கு மதிப்பு இருக்கும். திடீர் கோபம் உண்டாகும். கணவன், மனைவிக்கிடையே திடீர் வாக்குவாதம் ஏற்படும். கவனமாகப் பேசுவது நெருக்கத்தை அதிகரிக்கும். விருந்தினர் வருகை குடும்பத்தினரின் ஆரோக்கியக் குறைவு ஆகியவற்றால் செலவு அதிகரிக்கும்.

அக்கம் பக்கத்தினருடன் சில்லறைச் சண்டைகள் உண்டாகலாம். கவனமாக இருப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் செலவுகள் அதிகரிக்கும். உங்களுக்குக் கீழ் வேலை செய்பவர்களின் செயல்களால் உங்களுக்குக் கோபம் உண்டாகலாம். உங்கள் பாணியில் அவர்கள் தங்களுடைய பணிகளைச் செய்வதில்லை என்பதில் உங்களுக்கு நியாயமான வருத்தம் இருக்கலாம். ஆனால், அவர்களிடம் பக்குவமாகப் பேசி, அவர்களை உங்கள் வழிக்குக் கொண்டு வாருங்கள். பழைய கடன்களை வாங்குவதில் வேகம் காட்டுவீர்கள். உத்தியோகம் தேடுபவர்களுக்கு அவர்கள் தகுதிக்கேற்ப வேலை கிடைக்கும். அலுவலகத்தில் உள்ள சக ஊழியர்கள், மேலதிகாரிகளிடம் வீண் பேச்சுகளைத் தவிர்ப்பது நல்லது. உங்கள் வேலையில் மட்டும் கவனம் செலுத்தினால் வீண் பிரச்சினைகளைத் தவிர்க்கலாம்.

**அரசியல்வாதிகள்:** வீண் வாக்குவாதங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். சில விடயங்களை அமைதியாக இருப்பதன் மூலம் சாதித்துக் கொள்வீர்கள்.

**கலைத்துறையினர்:** உடல் நலத்தில் அக்கறை செலுத்த வேண்டியது அவசியம். அலைச்சலைக் குறைத்துக் கொள்ள முயற்சி செய்யுங்கள்.

**பெண்களுக்கு:** வலியச்சென்று பிறருக்கு உதவுவதால் வீண்பழி ஏற்படலாம். கவனம் தேவை. கோபத்தைத் தவிர்ப்பது நல்லது. மாணவர்கள் எந்த வேலையையும் கவனமாகச் செய்வது நல்லது. பாடம் தொடர்பான சந்தேகங்களை உடனுக்குடன் கேட்டு படிப்பது நல்லது.

**பரிகாரம்:**
வியாழக்கிழமையில் முல்லை மலர் சாத்தி தட்சிணாமூர்த்தியை வழிபடுவது கடன் பிரச்சினையைத் தீர்க்கும். செல்வம் சேரும்.

**அதிர்ஷ்ட கிழமைகள்:**
திங்கள், செவ்வாய், வியாழன்.

# வரலாற்றில் இன்றைய தினம் 15.08.2017

1945-இரண்டாம் உலகப் போரில் ஜப்பான் சரணடைந்ததை அடுத்து ஜப்பானிய பேரரசிடமிருந்து கொரியா சுதந்திரம் பெற்றது.

1947-இந்தியா சுதந்திரம் பெற்றது.

1960-பிரான்ஸிடமிருந்து கொங்கோ சுதந்திரம் பெற்றது.

1973-வியட்னாம்போரில் கம்போடிய எல்லைகளில் ஐக்கிய அமெரிக்கா தாக்குதலை மேற்கொண்டது.

1975-இராணுவச் சதிப்புரட்சியின் போது, பங்களாதேஷ் அரச தலைவர் ஷேக் முஜிபுர் ரஹ்மான் குடும்ப உறுப்பினர் பலருடன் படுகொலை செய்யப்பட்டார்.

1995-அம்பாறைப் பகுதியில் தமிழரின் வீடுகள் தீக்கிரை: முஸ்லிம் ஊர்காவலர் அட்டகாசம்.



*2007 - தென்னமெரிக்க நாடான பெருவில் 8 ரிச்டர் அளவிலான நிலநடுக்கத்தில் 514 பேர் உயிரிழந்ததுடன், சுமார் ஆயிரத்து 100 பேர் காயமடைந்தனர்.*

2006-உதயன் நிறுவனத்தின் சாரதி புத்தூரில் சுட்டுக் கொலை.

2006-யாழ்ப்பாணப் பல்கலைச் சுற்றாடலில் மாணவர்கள் இருவர் சுட்டுக் கொலை.

2016-ஆதாரங்களைத் திரட்டிச் சேர்க்கவே காணாமற் போனோரின் அலுவலகம் எனக் கொந்தளிக்கிறது கூட்டு எதிரணி.

2016-ஆஸ்திரேலியாவுக்குச் செல்ல முயன்ற 17 பேர் மட்டக்களப்பில கைது.

2016-போரின் முக்கால் பகுதி எனது ஆட்சிக்காலத்தில் முடிந்தது. இவ்வாறு முன்னாள் அரச தலைவர் சந்திரிகா தெரிவிப்பு.

2016-உலகப் பொருளாதாரத்தை ஆசியா கட்டுப்படுத்தும் என தலைமை அமைச்சர் ரணில் தெரிவிப்பு.

## நாளை

**16.08.2017**

புதன்கிழமை

ஆடி - 31

திதி: நவமி பி.ப. 01.50 வரை
நட்சத்திரம்: ரோகிணி பி.இ.12.13
சுபநேரம்: 04.35–06.05 வரை
ராகுகாலம்: 12.05–01.35 வரை

# பத்தி எழுத்து

## வடக்கு மக்களின் உணர்வுகளை முதலமைச்சர் புரிந்துகொள்வாரா?

வடக்கின் அபிவிருத்தித் திட்டங்களை முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனே குழப்பி வருகின்றார். இவ்வாறு பகிரங்கமாகக் குற்றம் சாட்டியுள்ளார் அமைச்சர் பா.டெனீஸ்வரன். இதேவேளை தானும் குழம்பி மக்களையும் குழப்புகிறார் சுரேஷ்பிரேமச்சந்திரன் என மாவை .சேனாதிராசா சாட்டையடி ஒன்றைக் கொடுத்திருக்கிறார். இவையெல்லாம் வடக்கில் நிலவுகின்ற குழப்பங்களை எடுத்துக் காட்டுகின்றன.

வடக்கு மாகாணசபை ஆரம்பித்த நாளில் இருந்தே அது குழப்பங்களின் களமாக மாறிக் காணப்படுகின்றது. கூட்டமைப்பு வெறும் பெயருக்கு மாத்திரமே கூட்டமைப்பாகத் தோன்றுகின்றதே தவிர அதில் அங்கம் வகிக்கின்ற கட்சிகளிடம் ஒற்றுமையைக் காண முடியவில்லை. முதலமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டபோதே கூட்டமைப்பின் உண்மை முகம் பல்லிளிக்கத் தொடங்கி விட்டது. மாகாணசபையில் அங்கம் வகிக்கின்ற ஆளும் கட்சி உறுப்பினர்கள் கன்னை பிரிந்து கச்சையை இறுகக் கட்டிக் கொண்டு கோதாவில் இறங்கிச் சண்டைபிடித்த காட்சிகளைத் திரைப்படங்களில்கூட காணமுடியாது. சமாதானத்தை ஏற்படுத்தவேண்டிய முதலமைச்சர் இவற்றையெல்லாம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்.

கூட்டமைப்பில் நான்கு கட்சிகள் அங்கம் வகிப்பதாகக் கூறப்படுகின்றது. ஆனால் ஈ.பி.ஆர்.எல்.எவ் கூட்டமைப்புத் தத்துவத்தைக் கடைப்பிடிப்பதாகத் தெரியவில்லை. அந்தக் கட்சியின் தலைவரான சுரேஷ் பிரேமச்சந்திரனும் அதே கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனும் எப்போதும் கூட்டமைப்பின் தலைவருக்கும் தமிழ் அரசுக் கட்சிக்கும் எதிரான கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர். தமக்கு விருப்பம் இல்லாது விட்டால் கூட்டமைப்பிலிருந்து இவர்கள் விலகிவிடுவதே நாகரிகமானது. ஆனால் அதைச் செய்யாது விட்டு விட்டு கூட்டமைப்புக்குள் இருந்துகொண்டு அதற்கு எதிரான கருத்துக்களைத் தெரிவிப்பது கேவலமான செயலாகும்.

இதேவேளை வடக்கில் எழுந்துள்ள அசாதாரண சூழ்நிலைக்குக் காரணமான வடக்கு முதலமைச்சர், தன்மீது தெரிவிக்கப்படுகின்ற விமர்சனங்களை ஏற்றுக் கொள்வது போன்று நடந்து கொள்கின்றார். அவர் மௌனமாக இருந்து காரியங்களைச் சாதிப்பதால் அவற்றைச் சரியென ஏற்றுக்கொள்ள முடியாது. அவர் அறிதோ அறியாமலோ ஏராளமான தவறுகளைப் புரிந்திருக்கிறார். இதனால் பாதிப்புக்களும் ஏற்பட்டுள்ளன. அவர் இனிமேலாவது தன்னைத் திருத்திக்கொள்வதே நல்லது. திருத்துவதும் திருந்தாது விடுவதும் அவரது சொந்த விருப்பம் என்றாலும் மக்கள் சேவையில் உள்ள அவர் பொது நலத்துக்கே முக்கியத்துவம் வழங்க வேண்டும். அதுவே வடக்கு மக்களின் விருப்பமுமாகும்.

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** பேச்சில் உறுதித் தன்மை நிறைந்திருக்கும். மற்றவர் விமர்சனத்தை பொருட்படுத்த வேண்டாம். தொழில், வியாபாரத்தில் தாராள வருமானம் கிடைக்கும்.

**இடபம்:** மனதில் இனம்புரியாத கவலை உருவாகலாம். தொழில், வியாபாரத்தில் முயற்சிக்கேற்ப முன்னேற்றம் உண்டாகும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர்.

**மிதுனம்:** நண்பருக்கு இயன்ற அளவில் உதவி செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உண்டாகும். பணியாளர்கள் பணிச்சுமையை சந்தித்தாலும் வருமானம் உயரும்.

**கடகம்:** நேர்மையுடன் செயற்பட்டு நன்மை காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். பணியாளர்கள் பணியிலக்கை விரைந்து நிறைவேற்றுவர்.

**சிங்கம்:** முக்கியப் பணிகளை, பிறரிடம் ஒப்படைக்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில் இலாபம் சராசரி அளவில் இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமையைச் சந்திப்பர்.

**கன்னி:** உங்களிடம் உதவி பெற்றவர் நன்றி மறந்து பேசுவர். குடும்பத்தினரின் அன்பும், ஆதரவும் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் இலாபம் சீராக இருக்கும்.

**துலாம்:** சிந்தனையில் புதுமை நிறைந்திருக்கும். நண்பர்களால் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரம் சார்ந்த இடையூறு விலகும். பணியாளர்கள் இடமாற்றம் கிடைக்கப் பெறுவர்.

**விருச்சிகம்:** முக்கிய பணிகளை விரைந்து நிறைவேற்றுவீர்கள். பெற்றோரின் அன்பும், ஆசியும் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் கூடுதல் மூலதனம் தேவைப்படும்.

**தனுசு:** எவருக்கும் தகுதி மீறி வாக்குறுதியளிக்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில் மந்த நிலை உருவாகலாம். பெண்களுக்கு, உறவினர் வருகையால் செலவு அதிகரிக்கும்.

**மகரம்:** நேர்மையுடன் செயற்பட்டு நற்பெயர் காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர்.

**கும்பம்:** முன்னேற்றத்திற்கான புதிய வாய்ப்பு கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் பன்மடங்கு உயரும். பணியாளர்கள் பணியிடத்தில் செல்வாக்குடன் இருப்பர்.

**மீனம்:** குடும்பப் பிரச்சினையை பிறரிடம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் அளவான பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் பணிச்சுமையைத் திறம்படச் சமாளிப்பர்.

**வெற்றியை அடைய என்னதான் நேர் வழியில் சென்றாலும்...**



**அதைத் தக்க வைத்துக்கொள்ள பலருக்கும் குறுக்குவழிதான் தேவைப்படுகிறது...**

**இரும்புச் சத்து குறைவா இருக்கென்டா கால்கிலோ ஆணிய திங்க சொல்லணும். அத விட்டுட்டு கீரை சாப்பிடுங்கிறாங்க...**



**என்னத்த டாக்டருக்கு படிசாங்களோ தெரியல...**



கணவன் மனைவியைப் பார்த்து, "சாப்பாட்டுக்கு ஆம்லட் எதற்கு, முட்டையை அவித்து வைக்க வேண்டியதுதானே" என்றார்!
மனைவி மறுநாள் சாப்பாட்டுக்கு முட்டையை அவித்து வைத்திருந்தார்!
மறுநாள் கணவன் சாப்பிடும்போது "முட்டையை எதுக்கு அவித்து வைத்திருக்கிறாய், ஆம்லட் செய்திருக்க வேண்டியதுதானே" என்று கடிந்து கொண்டார்!
மனைவி மூன்றாம் நாள் ஒரு முட்டையை அவித்தும், ஒரு முட்டையை ஆம்லட் செய்தும் வைத்துவிட்டு இன்று கணவனிடம் தப்பித்து விடலாம் என்று மகிழ்ந்தார்!
கணவன் சாப்பிடும்போது, "ஏன் இப்படி செய்து வைத்தாய், ஆம்லட் செய்யவேண்டிய முட்டையை அவித்தும், அவிக்க வேண்ட்டிய முட்டையை ஆம்லட் செய்தும் இருக்கிறாயே" என்று கடிந்து கொண்டார்!
மறு நாள் கணவன் சாப்பிட போகும் சமயம்
மனைவி "இந்தாங்க உங்க கிட்ட ஒரு விஷயம் சொல்லனும் என்னை அடிச்சிடாதீங்க" என்று தெரிவித்தார்.
அதற்குக் கணவன் "கழுத சாகப்போற விசயமா இருந்தாலும் நான் சாப்பிட்ட பிறகு சொல்லுடி" என்றார்.
சாப்பிட்ட பிறகு கணவன் "ம்ம் இப்ப சொல்லுடி" என்றார்.
"மனைவி நீங்க கொடுக்குற தொல்லை தாங்க முடியாம சோத்தில விசத்த வச்சிட்டேன் என்னை மன்னிச்சிடுங்க"
கணவன் ????

**விருமாண்டி வேடம் போடச் சொன்னா**



**பூச்சாண்டி வேடம் போட்டு விட்டுருக்கானுக....**



## 'ஆளப்போறான் தமிழன்' பாடல் தெறிக்கிறது

தமிழ் திரையுலக முன்னணி நடிகர்களில் ஒருவரான விஜய் நடிப்பில் வெளியாகவுள்ள படமான மெர்சல். படத்தின் பாடலொன்று அண்மையில் வெளியிடப்பட்டது. 'ஆளப்போறான் தமிழன்' என்று ஆரம்பமாகும் அந்தப் பாடல் சமூக வலைத்தளங்களில் தற்போது மிகவும் வைரலாகியுள்ளது.

முகப்புத்தகம், கீச்சகம் உள்ளிட்ட சமூக வலைத்தளங்களில் எங்கு பார்த்தாலும் குறித்த பாடல் பற்றிய பேச்சுக்களும், வாக்குவாதங்களும், கருத்துப் பகிர்வுகளும் அதிகமாக இடம்பெற்று வருகின்றன. 'இந்தப் பாடல் தமிழ் மக்களுக்கான பாடல்' என்றவாறு விஜய் ரசிகர்கள் தமது கருத்தை வெளியிட்டுள்ளனர். சில எதிர்மறைக் கருத்துக்களும் இருக்கத்தான் செய்கின்றன. திரைப்படங்களை எடுக்கும் இயக்குநர்கள் தத்தமது படம் தொடர்பிலான முன்னோட்டக் காட்சிகள், காணொலிகள் போன்றவற்றை மிகக் குறுகிய அவகாச முன்னறிவிப்பில் வெளியிடுவது தற்போது அனைவராலும் பின்பற்றப்பட்டு வருகிறது. இது சிறந்த வர்த்தகத் தந்திரோபாயமாகவும் உள்ளது. அந்த வகையில் திடீர் அறிவிப்பின்படி வெளியான 'ஆளப்போறான் தமிழன்' பாடலும் படக்குழு எதிர்பார்த்ததை நிறைவேற்றியுள்ளது. (ம)

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 9 | | 1 | | 4 | 7 | 2 | 5 |
| | | | | 5 | | 6 | | |
| | | 4 | | 9 | 7 | | | |
| 9 | 3 | | 5 | 7 | 1 | | | 6 |
| 7 | 2 | | | | 6 | 9 | | |
| | 4 | | | 2 | | | | 7 |
| 3 | | | | 1 | | | 7 | |
| | | 9 | | | | | | |
| | | 7 | 8 | | 2 | | 1 | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 5 | 3 | 2 | 1 | 6 | 7 | 8 | 9 |
| 9 | 2 | 6 | 4 | 7 | 8 | 5 | 3 | 1 |
| 7 | 1 | 8 | 9 | 5 | 3 | 2 | 6 | 4 |
| 2 | 9 | 7 | 8 | 4 | 5 | 3 | 1 | 6 |
| 3 | 6 | 1 | 7 | 9 | 2 | 8 | 4 | 5 |
| 8 | 4 | 5 | 6 | 3 | 1 | 9 | 7 | 2 |
| 1 | 7 | 2 | 3 | 6 | 9 | 4 | 5 | 8 |
| 5 | 3 | 9 | 1 | 8 | 4 | 6 | 2 | 7 |
| 6 | 8 | 4 | 5 | 2 | 7 | 1 | 9 | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண் களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண் கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ் வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமா கப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# நேர்மையின் வழியில்



பள்ளிக்கூடம் முடிவடைந்து பேருந்தில் செல்லும் மாணவர்கள் பேருந்து நிலையம் நோக்கிச் சென்றனர். குமரனும் பேருந்துக்காக அங்கு நின்றிருந்தான். ஒரு பேருந்து வந்தது. உடனே மாணவர்கள் கூட்டம் அடித்துப் பிடித்து ஏறியது. குமரன் அவசரப்படாமல் விலகி அடுத்த பேருந்துக்காக காத்திருந்தான். அப்போது "ஐயா நான் கண்ணில்லாதவன். ஒரு பத்து ரூபா தருமம் செய்யுங்க" என்று பேருந்து நிலையத்தில் ஒரு பிச்சைக்காரன் குரல் கொடுத்துக் கொண்டிருந்தான். அவன் முன்னே அழுக்கான துணி ஒன்று விரிக்கப்பட்டிருந்தது. அதில் சில காசுகள் இருந்தன. பிச்சைக்காரனைப் பார்த்ததும் அன்று வகுப்பறையில் தமிழாசிரியர் கூறிய சொற்கள் குமரனுக்கு நினைவுக்கு வந்தன. மாணவர்களே! "வறியவர்களுக்கு உதவுங்கள்" என்பது ஏதோ பெரியவர்களுக்கான அறிவுரை என நினைத்துக் கொள்ளாதீர்கள். இது வள்ளுவர் சொன்ன வாக்கு. நீங்களும் உதவி செய்யலாம். அப்படி உதவிசெய்ய பெரிய தொகைதான் வேண்டுமென்பதில்லை. உங்கள் செலவுக்காக வைத்திருப்பதில் இருந்து ஒரு பத்து ரூபா கொடுப்பதும் தருமம் தான்" என்று கூறியிருந்தார் ஆசிரியர். உடேன அந்தப் பிச்சைக் காரனுக்கு உதவி செய்ய விரும்பிய குமரன், ஐம்புது ரூபாவை அவனின் முன்னால் இருந்த துணியிலிருந்த சில்லறைகளுடன் போட்டு விட்டு பிச்சைக்காரனிடம் "ஐயா இங்கே துணியில் ஐம்பது ரூபாவை நான் போட்டு விட்டு, எனக்குபேருந்துச் செலவுக்காக 20 ரூபாவை எடுத்துக் கொள்கிறேன்" என்றான். பிச்சைக்காரன் சரி தம்பி" என்றதும் அவன் துணியில் இருந்து 10 ரூபாவை எடுத்து, மீண்டும் ஒரு 10 ரூபாவை குனிகையில் ஒரு முரட்டுக்கரம் அவன் முதுகில் 'பளார்' என ஒரு அறை வைத்தது. "அடே திருட்டுப்பயலே பிச்சைக்காரனிடமே திருடுகிறாயா? திருட்டு ராஸ்கல்" என்று பற்களை நெருமிக் கொண்டு மீண்டும் மீண்டும் குமரனை அடித்தான் வந்தவன். "ஐயா நீங்கள் தப்பாய் புரிஞ்சு கொண்டீர்கள் நான் ஐம்பது ரூபாய் காசைத் துணியிலே போட்டு விட்டு என் பேருந்துச் செலவுக்காக 20 ரூபாவை எடுத்தேன்" என்று அவன் பல தடவை கூறியும் வந்தவன் விடவில்லை. "நான் இங்கே நின்று கொண்டு தான் இருந்தேன். காசு போடவில்லை. எடுப்பதையே கண்டேன்" என்று கூறினான். அப்போது பிச்சைக்காரனைச் சுற்றி சனம் கூடியது. குமரன் எல்லோராலும் திருட்டுப்பட்டம் சூட்டப்பட்டுக் கொண்டிருந்தான்.

"ஐயா நாக்கை அடக்கிப் பேசுங்க. இங்கே துணியில் பாருங்கள்! நான் போட்ட ஐம்பது ரூபா தாள்" என்றான். "என்ன நீ யோக்கியமாகப் பேசுகிறாய். ஐம்பது ரூபாவை நீ தான் போட்டாய் என்பதற்கு என்ன ஆதாரம்? என்றான் வந்தவன் "இதோ பாருங்கள் இவரிடம் சொல்லி விட்டுத்தான் போட்டேன்" என்றான். "பிச்சைக்காரனுக்கு கண் தெரியாது. அவன் எங்கே நீ காசு போட்டத்தைப் பாத்திருப்பான்" என்று வந்தவன் கூற அங்கே கூடிய சிலரும் "இவனைப் பொலிஸில் ஒப்படைப்பதே சரி" என்று கூறி, குமரனின் கையைப் பிடித்து இழுத்தனர். "குமரன் நான் திருடனில்லை திருடனில்லை; உதவிதான் செய்தேன்" என்று கூறி பெரும் குரல் எடுத்து அழுதான்.

இப்போது சற்றும் எதிர்பாராத வகையில் ஐயாமாரே! இந்தப் பையனை விட்டிருங்க அவன் என்னிடம் கூறி விட்டுத்தான் பணம் போட்டான் அதை நான் பார்த்தேன். இந்த ஐம்பது ரூபாவை உண்மையாக இவன் போட்டதுதான். எனக்கு கண் குருடு இல்லை. நான் பிச்சை எடுப்பதற்கு குருடனாக நடித்தேன். இந்த இரக்க குணமுடைய தம்பிக்கு நீங்கள் திருட்டுப் பட்டம் கட்டுவதை என்னால் பொறுக்க முடியவில்லை. அதனால்தான் உண்மையைக் கூறுகிறேன்" என்றான் பிச்சைக்காரன்.

அவன் சொன்னவற்றைக் கேட்டு சூழ இருந்த அனைவரும் அதிர்ச்சியுடன் ஆச்சியமும் அடைந்தனர்.

"தம்பி உதவி செய்தால் உபத்திரமும் திருட்டுப் பட்டமும், அடி உதையும் கிடைக்கும் என எண்ணி உன் நல்ல மனதை மாற்றி விடாதே" என்றார் பிச்சைக்காரன். "இல்லை ஐயா மாற்ற மாட்டேன். தருமம் செய்பவனைக் காப்பாற்ற தன் பிழைப்புக்கான திருட்டு நடிப்பைக் கூட ஒருவன் விட்டுக் கொடுத்து உண்மை பேசுவான் என்பதைத் தெரிந்து கொண்டேன்" என்று கூறி பிச்சைக்காரன் துணியில் தனது பேருந்துக் கட்டணத்துக்கான மீதி இருபத்தைந்தை எடுத்துக் கொண்டு பேருந்தில் ஏறினான் குமரன்.

**தருமம் தலை காக்கும்.**
**உண்மையே வெல்லும்**




## வர்ணம் தீட்டுவோம்



## எதையும் தாங்கும் இதயம்

சேர் ஐசக் நியூட்டன் என்கிற விஞ்ஞானி, ஒரு தடவை தான் செய்த முக்கியமான சோதனைகள் பற்றிய குறிப்புக்களை நிறைய எழுதி மேசையின் மீது வைத்திருந்தார். மிருகங்களை வளர்ப்பதில் அவருக்கு பிரியம் அதிகம். மிகப் பிரியமாக ஒரு நாயை அவர் வளர்த்து வந்தார். அவர் குறிப்புக்களை எழுதி வைத்திருந்த அறையில் அந்த நாய் படுத்திருந்தது. குறிப்புகளுக்கு அண்மையாக ஒரு மெழுகுவர்த்தி எரிந்து கொண்டிருந்தது. நியூட்டன் வெளியில் சென்றிருந்த சமயம் நாய் மேசையின் மீது ஏறி, மெழுகுவர்த்தியைத் தள்ளிவிட குறிப்புகளை எழுதி வைத்திருந்த காகிதங்கள் தீப்பிடித்து எரியத் தொடங்கின. நியூட்டன் திரும்பி வந்த போது, பல ஆண்டுகள் உழைத்து அவர் செய்த சோதனைகள் பற்றி எழுதி வைத்திருந்த குறிப்புகள் அனைத்தும் சாம்பல் குவியலாக இருப்பதைக் கண்டார். தனக்குப் பிரியமான நாயின் செயல் எவ்வளவு பெரிய விபரீதத்தில் முடிந்து விட்டது என்பதைப் பார்த்து அதிர்ச்சியடைந்தார். ஒரு கணம்தான் இந்த அதிர்ச்சி. பின்னர் நாயை அன்புடன் பார்த்து "நீ என்ன செய்து இருக்கிறாய் என்பதை நீ அறிய மாட்டாய்" எனக் கூறி விட்டு மறுபடியும் தன்னுடைய சோதனைகளில் ஈடுபடலானார்.

நியூட்டனுக்கு ஏற்பட்ட இழப்பு மிகப் பெரியது. ஆயினும் தன்னுடைய கவனக்குறைவால்தான் அது நிகழ்ந்து விட்டது என்பதைப் புரிந்து கொண்ட நியூட்டன் கொஞ்சமும் தயக்கமின்றி அமைதியாக தன்னுடைய சோதனைகளில் தொடர்ந்து ஈடுபட ஆரம்பித்தார்.





## வாய் விட்டுச் சிரிப்போம் நோய் விட்டுப் போகும்

### யார் சோம்பேறி?

அமெரிக்கச் சுற்றுலாப் பயணி இந்தியாவுக்கு வந்து டெல்லி ஆக்ரா ஆகிய நகரங்களைச் சுற்றிப் பார்க்க ஒரு வழிகாட்டியை அமர்த்திக் கொண்டார். முதலில் செங்கோட்டையைப் பார்த்த அமெரிக்கர் பிரமாதம் இதனைக் கட்ட எத்தனை ஆண்டுகள் ஆயின?" என்று கேட்டார். "இருபது ஆண்டுகள்" என்றார் வழிகாட்டி. "எங்கள் நாட்டில் இதனைக் கட்டுவதென்றால் பத்து ஆண்டுகள் போதும்" என்றார். அடுத்து தாஜ்மகாலைப் பார்த்த அமெரிக்கர் "இது மிகப் பிரமாதம் இதைக் கட்ட எத்தனை ஆண்டுகள் ஆயின?" என்று கேட்டார். வழிகாட்டி, ஆண்டுகளைக் குறைத்து " பத்து ஆண்டுகள்தான்" என்றார். அமெரிக்கர் சீறினார்."இந்தியர்கள் ஆகிய நீங்கள் மிகவும் சோம்பேறிகளாக இருக்கிறீர்களே! எங்கள் நாட்டில் இதனைக் கட்ட ஐந்து ஆண்டுகளே அதிகம்" என்றார். பின்னர் இருவரும் குதுாப் மினாரைப் பார்த்தனர். அமெரிக்கர் "இது என்ன கட்டடம்? என்றார். வழிகாட்டி மிகவும் பணிவாக" எனக்குத் தெரியவில்லை ஐயா , நேற்று இந்த வழியே நான் போன போது இந்தக் கட்டடம் இருக்கவில்லை" என்றார்.

### எனக்கும்தான்

ஒரு நோயாளி அறுவைச் சிகிச்சைக்காக அதற்குரிய மேசையில் படுத்திருந்தார். மருத்துவர் வந்து அறுவைச் சிகிச்சைக்கு ஆயத்தம் செய்து கொண்டிருக்கையில் நோயாளி "ஐயா எனக்கு மிகவும் பயமாகவும் பதட்டமாகவும் இருக்கிறது. ஏனென்றால் இதுதான் எனக்கு நடக்க இருக்கும் முதல் அறுவைச் சிகிச்சை" என்றார். மருத்துவர் நிதானமாக "ஏன் பயப்படுகிறீர்கள்?என்னைப்பாருங்கள்; நான் பயப்படுகிறேனா என்ன? எனக்கும் இது தானே முதல் அறுவைச் சிகிச்சை" என்றார்.



# தூக்கணாங்குருவி



ஆனந்தவாணி

## படைப்பியல்பின மொழியில்லா அசைவியக்க அர்த்தங்கள்

தூக்கணாங்குருவிகள் ஆசியப் பகுதி முழுமையுமாக குறிப்பாக, தென் பகுதி முழுவதும் காணப்படும் பறவை இனம். கூட்டம் கூட்டமாய் வாழும். பெரும்பாலும் வயல் வெளி சார்ந்த பகுதிகளில் தங்கள் இருப்பிடத்தை அமைத்துக் கொள்கின்றன. அடர்த்தியான புதர்கள், நீரோடை சார்ந்த வனம் மற்றும் ஆற்றங்கரை, குளக்கரையோரங்களில் அமைந்த மரங்களின் வளைந்த கிளைகளில் கூடுகளை அமைக்கும். பெரும்பாலும் முள் மரம் அல்லது மிக உயரமான, பிற உயிரினங்களின் தொந்தரவு இல்லாத நிலையில் மட்டுமே கூடுகளைப் பின்னத் தொடங்கும். கூடுகளை நார், இலைகள் கொண்டு பின்னும். நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் விரவி, பரவிக் காணப்படும். இவை பிராந்தியம் சார்ந்து தங்கள் குணநலன்களை மாற்றிக் கொள்பவை. பிரதானமாக மழை மற்றும் உணவை மையப்படுத்தித் தங்கள் வாழ்வியல் முறையை மேற்கொள்கின்றன.

### உடல் அமைவும் உணவும்

நாம் தவிட்டுக் குருவிகள் என அழைக்கும் சிட்டுக்குருவிகள் போல் காணப்படும் இவை ஏறத்தாழ அதே வண்ணத்தில், உருவ அமைப்பில் காணப்படுவதால் வித்தியாசம் காண்பது என்பது எளிதான விடயமல்ல. 15 செ.மீ. அளவே உருவம் கொண்ட இவற்றில் பால் வேறுபாடு காண்பது மிகவும் கடினம். கூர்மையான வலிமையான அலகும், குட்டையான வாலும் மட்டுமே இவற்றைச் சிட்டுக்குருவிகளிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுகின்றன. கண்கள் மிகக் கூர்மையான பார்வைச் சக்தி கொண்டவை. கண்களைச் சுற்றி கருவளையம் காணப்படும். வயது வந்த ஆண்கள் பளபளப்பான மஞ்சள் நிறம் பூசிய, பழுப்பு நிறம் மேலோங்கிய தலைமுடியைக் கொண்டிருக்கும். உணவின் இருப்பிடத்தை ஒரு குருவி அறிந்து விட்டால் தன் கூட்டத்தை மொத்தமாக அழைத்து வரும். இருப்பிடத்தை அடைந்த குருவிகள் பல்வேறு திசைகளிலும் பரவி உணவை உட்கொள்ளும். முக்கியமாக நெல், கம்பு, கேப்பை போன்றவற்றை உண்ணும். வயல் நிலங்கள், திராட்சைத் தோட்டம் அமைந்த பிரதேசங்களைத் தேர்ந்தெடுக்கும். உணவு மிகக் குறைவாக இருந்தால் பயிர்களின் குருத்தை உண்ணும்.

### இனப்பெருக்கம்

கர்ப்ப காலங்களில் தவளை, மண்புழு, வெட்டுக்கிளி போன்ற சிறு உயிரிகளை உண்ணும். குஞ்சுகளுக்கும் அதையே ஊட்டும். பருவ நிலை மாற்றங்கள் இதன் வாழ்வின் முக்கிய காரணிகளாகின்றன. இவை பற்றியவாழ்க்கையை முழு விவரங்க ளோடு திரட்டுவது இன்று வரை கடினமான பணியாகவே உள்ளது. மிக வேகமாகப் பறக்கும் இவை 'சிட்.....சிரிக்....' எனக் குரல் எழுப்புகின்றன. பரபரப்பான சூழலில் 'சிரீக்...சிரீக்...' என நீண்ட அலறலை வெளிப்படுத்தி தன் சகாக்களை எச்சரிக்கை செய்கின்றன. இதைத் தவிர, காமமுற்ற வேளைகளிலும், கர்ப்பம் தரித்த காலத்திலும், முட்டையிடும் போதும் இவ்வாறான நீண்ட அலறலை வெளிப்படுத்துகின்றன. உறவு கொள்ளும்போது, பரவசத்தின் உச்சத்தில் ஆணும், பெண்ணும் இவ்வாறான நீண்ட குரலெழுப்புகின்றன.

மழைக் காலங்களையே இவை உறவுக் காலமாகத் தேர்ந்தெடுக்கின்றன. குறைந்தது ஒருமாத காலம் தொடர்ந்து உறவில் ஈடுபடுகின்றன. சூழலுக்கு ஏற்ப பகலிலும், இரவிலும் கூட இந்தச் செயல் நிலைகள் தொடரும். வெப்ப காலங்களை மிக அரிதாகவே தேர்ந்தெடுக்கின்றன. பருவகாலங்களில் மட்டும் ஆணுக்கு இனப்பெருக்க உறுப்பு ஒரு நீட்சி போல உருவாகிறது. விந்துச்சுரப்பிகளும் அப்போது தான் உருவாகும். நீட்சியைப் பெண்ணின் புழைக்குள் உட்செலுத்துவதன் மூலம் விந்து நீரை பாய்ச்சுகிறது. பெண் கீழ் அமர்ந்து படுத்த நிலையில் வாலை செங்குத்தாகத் தூக்க ஆண் மேல் அமர்ந்து செயற்படுகிறது.

### கூட்டின் அமைவு

குடும்ப உறுப்பினர்களில் பருவம் கொண்ட தம்பதியினர் ஒன்று சேர்ந்து பல கூடுகளை உருவாக்குகின்றன. ஒரே இடத்தில் கொத்துக் கொத்தாகப் பல கூடுகளை நாம் காண இயலும். இவற்றின் எண்ணிக்கை 5 தொடக்கம் 30 வரை காணப்படும். கூடு அமையப் பெறும் இடத்தில் உணவு, நீர் மற்றும் கூடு அமைப்பதற்கான புல், இலை, நார் போன்ற உப பொருள்களும் இருத்தல் வேண்டும். ஆண் குருவிகளே கூடுகளைப் பின்னும். பெண் குருவிகள் அவ்வப்போது உதவும். பெண்ணே கூடு கட்டுவதற்கான இடத்தை தேர்ந்தெடுக்கும். கீழ் நோக்கித் தொங்கும் குழாய் போன்ற அமைப்பு கொண்ட கூட்டைக்கண்டு பிரமித்த 'லியனார்டோ டாவின்சி' இதை 'உலகின் பேரதிசயம்' என புகழ்கிறார். இலங்கையில் கண்டெடுக்கப்பட்ட ஒரு கூடே உலகின் மிகப் பெரிய பறவைக் கூடு என கருதப்படுகிறது. இதன் நீளம் அண்ணளவாக 2 அடிகள் என ஆய்வாளர்கள் குறிப்பிடு கின்றனர்.

நீண்ட குழல் போன்ற அமைப்பு கொண்ட இதன் கூடுகள் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு அண்ணளவாக ஒன்றரை அடி நீளம் கொண்டதாக அமைந்திருக்கும். முதல் அறை நுழைவு அறையாகவும் ஆணின் ஓய்வு அறையாகவும் காணப்படும், இரண்டாவதாகப் பெண் மற்றும் குஞ்சுகளுக்கான பிரத்தியேக அறையாக அமைந்திருக்கும், மூன்றாவது வெளியில் செல்ல ஏதுவாகப் பின்வாசல் அமைப்போடு பின்னப்பட்ட அறையாகக்காணப்படும். கடினமான புற்களையும், வைக்கோல், மர நார்களைக் கொண்டு கூடு பின்னப்பட்டிருக்கும். ஏறத்தாழ 500 தொடக்கம் ஆயிரம் புற்கள் தேவைப்படும். மிக நேர்த்தியாக அடர்த்தியாக கூடுகள் அமையப் பெற்றிருக்கும்.

ஒவ்வொரு புல்லும் 30 சென்ரி மீற்றர் நீளம் கொண்டதாக இருக்கும். எப்போதும் கூடுகளை அமைக்கும் போது மரத்தின் தென் பகுதியையே இவை தேர்ந்தெடுக்கும். கிழக்கிலிருந்து வீசும் காற்றும், மழையும் குஞ்சுகளைத் தாக்காதவாறு இவற்றின் கால, இடத் தேர்வுகள் அமையும். இந்தச் செயற்பாடுகளைக் கருத்தில் கொண்டு விவசாயிகள் வட கிழக்குப் பருவ மழை தொடங்கும் காலத்தை கண்டுகொண்டனர். அதற்கேற்ப குருவிகளும், பருவமும் அப்போது ஏமாற்றங்களைத் தரவில்லை. கருங்குருவிகள் கைவிடப்பட்ட கூடுகளைக் கையகப்படுத்தி தமது இருப்பிடமாக்கிக் கொள்ளும். இளம் குருவிகள் முதிர் குருவிகளின் கூடுகளுக்கு அருகில் கூடு கட்டிப் பழகும்.

### நிறப்பூச்சு

பர்மாவில் காணப்படும் குருவிகள் வீடுகளின் மாடியில் ஒரு மூலையில் கூடமைக்கும் குணம் கொண்டவை. இது அந்தநாட்டுக் குருவிகளுக்கு மட்டுமே உரித்தான குணம். அதற்கேற்ப அம்மக்களும் தங்கள் இல்லங்களின் மூலையில் இதற்கான தனி அமைப்பை உருவாக்கி வைக்கின்றனர். ஆண் குருவி ஒரு கூட்டைப் பின்னி முடிக்க 18 தொடக்கம் 20 நாள்கள் எடுத்துக் கொள்கிறது. பெண்

(24ஆம் பக்கம் பார்க்க)





ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1389
சீட்டிழுப்பு திகதி 2017.08.14
வெற்றி இலக்கங்கள் 10 11 50 58 L
06 38 61 67
ரூ. 16,875,316/-

SUPER BALL
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 689
சீட்டிழுப்பு திகதி 14.08.2017 திங்கட்கிழமை
V 08 35 43 64
சுப்பர் ஜக்பொட்
ரூ. 55, 950, 792/=
வெல்லப்படவில்லை
22 52 54 67
பச்சை நிற டிக்கட்டுகள் 2017.08.17 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றிபெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ.பே. : 011 4062002 / 011 4062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம் 2916 திகதி 14.08.2017
வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து: 10 36 51 65 T
போனஸ் இல.: 01
புதன் கிழமை ஜக்பொட்: 36, 612, 215/-
இரண்டாவது சீட்டிழுப்பு வெற்றி இலக்கங்கள்: 06 07 15 25
ஊதா நிற டிக்கட்டுக்கள் 2017.08.16 ஆம் திகதி புதன்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றிபெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ.பே : 011 4824824
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
www.dlb.lk

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்



**மண்ணில்** 10.03.1943 **விண்ணில்** 07.08.2015

## தம்பு குமாரசாமி

(கட்டட ஒப்பந்தகாரர்)

*திதி - அட்டமி (15.08.2017)*


அப்பா! அப்பா! எம்மை எல்லாம் விட்டுச்சென்று
இரண்டு ஆண்டுகள் சென்றதுவோ!
எம் தந்தையோ நாம் பிறந்த அடுத்த நொடியிலிருந்து
அவருக்கான வாழ்க்கையை விட்டு விட்டு
எமக்கு என்று வாழத் தொடங்கினார்
எமக்கெல்லாம் வழிகாட்டியாக இருந்தார்
அப்பா உயிரோடு இருந்தவரை இழப்பு ஏதுவும் இல்லை
இறப்புக்கு பின் இழப்பதற்கு எதுவுமில்லை!
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**சிவகௌரி இல்லம், அம்மன் வீதி, உடுவில், சுன்னாகம்.**

என்றும் நினைவலைகளுடன்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### இராசேந்திரம் இன்பராஜ் (தாஸ்)



புலோப்பளை, பளையைப் பிறப்பிடமாகவும் நவாலி தெற்கு, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட இராசேந்திரம் இன்பராஜ் (தாஸ்) நேற்று (14.08.2017) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் மேனஜாவின் அன்புக் கணவரும் வர்சித்தின் அன்புத் தந்தையும் இராசேந்திரம் - சந்திரமலர் தம்பதியரின் அன்பு மகனும் விநாயகமூர்த்தி - இராசலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும் ஜெயராசாவின் அன்புப் பெறாமகனும். லிதுனா, அகிலன், விமல், அனிதன், வினோத் ஆகியோரின் அன்புச் சகோதரனும். கோபினாத், சங்கீதா ஆகியோரின் மைத்துனரும். சந்திரவிமலா, சந்திரகுமாரி (பளை), விஜயகுமாரி (வசாவிளான்), இலங்கேஸ்வரி ஆகியோரின் பெறாமகனும் சுசிலகுமார், சுதாகரன் (தேவன்), சந்திரசிறி ஆகியோரின் மருமகனும். காலஞ்சென்ற இராமச்சந்திரன் மற்றும் சிவக்கொழுந்து தம்பதியரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.08.2017) செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் நவாலி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்துக்கட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நவாலி தெற்கு,
மானிப்பாய்.**

**தகவல்:
குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### சின்னத்துரை ஐயர் விக்னராசா ஐயர்



யாழ்ப்பாணம், நல்லூர், செட்டித்தெருவைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரி, கிராம்புவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை ஐயர் விக்னராசா ஐயர் கடந்த (13.08.2017) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை ஐயர் ஞானம்மா தம்பதியரின் மூத்த மகனும் காலஞ்சென்றவர்களான தம்பையா குருக்கள் சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும் அன்னலட்சுமியின் அன்புக் கணவரும் சிவஞானசூரியர், மகேந்திரராஜா, தெய்வசேனா, ரவீந்திரன், இந்திரசேனா, மகேஸ்வரதாஸ் ஆகியோரின் அன்புச் சகோதரரும் வீரபத்திரக்குருக்களின் மைத்துனரும் பிரேம்குமார், உதயகுமார், மதிவதனா, ஜெயவதனா, பாலகுமாரக் குருக்கள் ஆகியோரின் பாசமிகு தந்தையும் புஷ்பராணி, சுதா, சுப்பிரமணியம், சாந்தரூபன், வானதி ஆகியோரின் அன்பு மாமனும் ஹரிராம், திவ்யலக்ஷ்மி, ராகவி, யாதவா, சிவானுஜன், தரணிகா, தக்ஷயன், நர்மதன், தர்மதா, மாதுஎன், பவதாரணன், லவதாரணன், தபோதாரணன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.08.2017) செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி, கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கிராம்புவில், சாவகச்சேரி.**

**தகவல்:
குடும்பத்தினர்.**

# தூக்கணாங்குருவி...

**(23ஆம் பக்கத் தொடர்ச்சி)**

முதல் கட்ட பணிகளை ஆராய்ந்து தனது கற்பனைக்கேற்ப கூட்டில் சில மாற்றங்களைச் செய்யச் சொன்னால் ஆணும் உடனடியாக அதனைச் செய்துவிடுகிறது. சில நேரங்களில் 75 சதவீதமான பணிகள் முடிந்த பின்னும் பெண் குருவி கூட்டை நிராகரித்தால் ஆண் சளைக்காமல் புதிய கூட்டைப் பின்னத் தொடங்குவதாக ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். கூட்டைப் பலப்படுத்தவும், தட்ப வெப்ப நிலையை சீராக வைக்கவும் பெண் களிமண் உருண்டைகளைக் கொண்டுவந்து கூட்டின் உட்பகுதியில் பூசும். ஆணும் இப்பூச்சு வேலையில் பங்குகொள்ளும். அப்போது காதல் சம்பாசனைகளும் இடம்பெறும். ஆண்மைக்கான நிரூபணமாக அழகாக களிமண் பூசும் ஆண் பறவை பெண் பறவையால் விரும்பப்படுகிறது.

**கர்ப்பகாலமும் பராமரிப்பும்**

காரல் அண்டர்சன் நடத்திய ஆய்வின் மூலம் இந்தத் தகவல்கள் தெரிய வந்துள்ளது. ஆணும், பெண்ணும் ஒரே சமயத்தில் பலருடன் உறவில் ஈடுபடும். ஆண், தனது மனைவியருக்காகப் பல கூடுகளைத் தயார் செய்து கொடுக்கும். சில சமயங்களில் தான் கட்டிய கூட்டிற்குப் பல பெண்களை அழைத்து வரும். இது பெண்களுக்கிடையேயான கைகலப்பில் முடியும். அபூர்வமாக ஒரே கூட்டில் இரு பெண்கள் முட்டையிடும். 3 தொடக்கம் 4 முட்டைகளை இவை இடுகின்றன. 14 தொடக்கம் 20 நாள்கள் அடைகாத்தலுக்குப் பின் குஞ்சு வெளிவரும். பெண்ணே குஞ்சைப் பராமரிக்கும். அவ்வப்போது ஆணும் உதவிசெய்யும். 6 மாத காலப் பராமரிப்புக்கு பின் குஞ்சுகள் தன் பெற்றோரைப் பிரிந்து தனி வாழ்க்கை மேற்கொள்ளும்.

**புதிய வாழ்வு**

ஒரு வருட வளர்ச்சிக்குப் பின் பருவம் எய்திய ஆணும் பெண்ணும் உறவுக்குத் தயாராகும். குறைந்தது 4 வருடங்கள் வாழும். உடலில் ஏற்படும் வர்ண மாற்றத்தின் மூலம் தாங்கள் பருவமெய்தியதை வெளிப்படுத்தும். காதலின் முதல் நிகழ்வாக ஆணும், பெண்ணும் இறக்கைகளை அடித்து மெல்லிய நடன அசைவுகளைப் பறந்த படியே தரும்.

Galaxy Star

வெற்றி வாரம் 185 / திகதி 2017.08.13

நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்

07 16 29 58 01

07 20 25 43

அடுத்த புதன்கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 3, 105, 428/-

2017.08.16 ஆம் திகதி புதன்கிழமை
நீல நிற டிக்கட்டுகளாகும்.
வெற்றிபெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு
செல்லுபடியாகும்.

## வெளிவந்துவிட்டது

### சங்கீதம் - தரம் - 08

(புதிய பாடத்திட்டம் - 2017)

அறிமுறை, செய்முறை வினாவிடை
**சங்கீதவித்துவான்**
**திரு. பொன் ஸ்ரீவாமதேவனின்**
குரலில் இறுவெட்டுடன் வெளிவந்து விற்பனையாகிறது.
**தொகுப்பு - கார்த்திகேசு பரமேஸ்வரன்**
**சங்கீதவித்துவான், ஆசிரிய ஆலோசகர் ஓய்வு நிலை)**

**ஏக விநியோகமும், விற்பனையும்**
**பூபாலசிங்கம் புத்தகசாலை**

யாழ்ப்பாணம்.
021 222 6693
021 222 1637

கொழும்பு.
011 2422 321 Sea street,
011 4515 775 Wellawatta

## கண்ணீர் அஞ்சலி



### இராசேந்திரம் இன்பராஜ்

(Medical delegate - British biological)

எமது நண்பனின் திடீர் மரண செய்தியால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**சகமருத்துவ பிரதிநிதி நண்பர்கள்,
மருத்துவ விற்பனை பிரதிநிதி நண்பர்கள்,
Jaffna Medical Delegates Association**

## மரண அறிவித்தல்

### கந்தையா அருள்நாயகி



187, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா அருள்நாயகி நேற்று (14.08.2017) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிராசா - யோகம்மா தம்பதியரின் சிரேஸ்ட புத்திரியும் காலஞ்சென்ற விஜய காந்தன் மற்றும் ஜெயரெட்ணம், ஜெயசீலன், ரஞ்சினி தேவி, ஜெயந்தி, லதக்குமார், தேவ குமார், மேகனலதா காலஞ்சென்ற கலீஸ்வரன் மற்றும் மதீஸ்வரி, சுதாஈஸ்வரன் காலஞ்சென்ற துஷா ஈஸ்வரன் ஆகியோரின் அன்புச்சகோதரியும் அகிலன், தேவகுமாரன் (கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி, ஆசிரியர்), ஜீவிதா, துவர்ணிகன், தாட்சாயினி, ஆசகன், ஆதவன் ஆகியோரின் பெரியதாயும் கஜந்தினி, ஜெனனி, யாழினி, ஜீவநிதா, ஜீவநீதன், செல்வநீதன், லாவண்ணியா ஆகியோரின் மாமியும் இராஜதுரை (ராசா மாஸ்டர்) இன் மருமகளும் காலஞ்சென்றவர்களான ஜீவகாருண்ணியம், அர்யுன் மற்றும் மனோகரன், நந்தினி, ரஜனி, ரஜிதா ஆகியோரின் மைத்துனியும் துவனிகா, துஷாரகன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.08.2017) செவ்வாய்க்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**187, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.**

**தகவல்: குடும்பத்தினர்.
021 222 6899**

### காணி விற்பனைக்கு

கிணறு, மலசலகூட வசதி, சுற்றுமதில்களை கொண்ட காணி யாழ். இரண்டாம் குறுக்கு வீதியில் விற்பனைக்குண்டு. - 077 103 6830

### தவறவிடப்பட்டது

இராசவல்லவன் சிவனேசன் என்பவருடைய IC, Driving Licence, 8000 ரூபா பணம் என்பன தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு - 077 791 7611**

### வீடு வாடகைக்குத் தேவை

மூன்று, இரண்டு அறைகள் கொண்ட சிறிய குடும்பம் ஒன்றுக்கு உரும்பிராயை அண்டிய பிரதேசத்தில் வீடு வாடகைக்குத் தேவை.

**076 342 3154, 077 800 3958**

### வேலையாள் தேவை

ஐஸ்கிறீம் வானில் ஐஸ்கிறீம் விற்பனையாளர் தேவை.

**தொடர்பு -
077 117 8553, 077 369 6714**

### காணி விற்பனைக்கு

அரசடி ஒழுங்கை, திருநெல்வேலியில் அமைந்துள்ள 1 1/2 பரப்பு காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு.

**தொடர்புக்கு - 077 600 3084**

### வேலையாள் தேவை

பிரபலமான உணவகம் ஒன்றுக்கு இந்தியன் பரோட்டா, மசாலா தோசை, பிறைட் றைஸ், கொத்து போடத் தெரிந்தவர்கள் (Cook) தொடர்பு கொள்ளவும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**தொடர்புக்கு - 075 073 4022**

### உடனடியாக வீடு விற்பனைக்கு

ஏ9 வீதிக்கு மிக அருகிலும் தபால் கட்டை சந்திக்கு அருகிலும் உள்ள 6 அறைகளை கொண்ட வீடு உடனடியாக விற்க உள்ளது. உடன் தொடர்பு கொள்ளவும்.

**தொடர்புக்கு -
077 085 0858, 075 031 6971**

## நானாக...

வந்த முன்னாள் போராளிகளும், உயிரைக் கொடுத்த மாவீரர்களின் குடும்பங்களும் தீர்மானிக்க வேண்டும்.

இவ்வாறு வடக்கு மாகாண போக்குவரத்து மீன்பிடித்துறை அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்தார்.

மன்னாரில் உள்ள அமைச்சரின் உப அலுவலகத்தில் நேற்று நடத்தப்பட்ட ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

நீங்கள் சரியாக நேர்மையாக சிந்திக்கக்கூடியவர்கள். அவ்வாறு சிந்திக்கக்கூடிய இடத்தில் இருந்து வளர்க்கப்பட்டவர்கள். நான் அமைச்சர் வாரியத்தில் தொடர்ந்தும் இருப்பதா அல்லது பதவி விலகுவதாக என்ற கேள்விக்கான விடையை உங்களின் கைகளில் விடுகின்றேன்.

**சுயவிருப்புடன் விலகேன்**

வடக்கு மாகாண மீன் பிடி போக்குவரத்து அமைச்சுப் பொறுப்பில் இருந்து நான் ஒருபோதும் சுய விருப்பத்துடன் பதவி விலகப் போவதில்லை. கட்சியோ அல்லது முதலமைச்சரோ எனக்குப் பெரியவர்கள் இல்லை. நீதியின்பால் நின்றிருந்தால் அவர்கள் பெரியவர்களாக இருந்திருக்க முடியும்.

தமிழீழ விடுதலை இயக்கத்தின் உயர்மட்டக் கூட்டம் கடந்த 12 ஆம் திகதி சனிக்கிழமை வவுனியா அலுவலகத்தில் இடம் பெற்றது. அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ள எனக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. கூட்டத்துக்குச் சென்று அவர்கள் கேட்ட விளக்கங்களுக்கு எனது நிலைப்பாட்டைத் தெளிவாகத் தெரிவித்தேன். ஒரு சில தினங்களில் அமைச்சுப் பொறுப்பை விட்டுத்தருவது தொடர்பில் முடிவெடுத்துத் தெரிவிக்க வேண்டும் என்று கூறினார்கள்.

எனது நிலைப்பாட்டை இன்று தெரிவிக்கின்றேன். அன்று எதைத் தெரிவித்தேனோ அதனையே மீண்டும் தெரிவிக்கின்றேன். இன்று கூறுவதைத்தான் நான் என்றும் செய்வதற்கு தயாராக இருக்கின்றேன். எனது பக்கத்தில் இருக்கின்ற நியாயங்களை நிரூபிக்க நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**முதலமைச்சரின்
நடவடிக்கை சரியில்லை**

முதலமைச்சரின் சில நடவடிக்கைகள் சட்டத்துக்குப் புறம்பாகவும், நேர்மையற்ற தன்மையாகவும் இருக்கின்றது. இதற்காக எந்த மட்டத்துக்கும் இறங்கி போராடுவதற்கு நான் தயாராக இருக்கின்றேன். நானாக எனது சுய விருப்பதின் பேரில் பதவி விலகல் கடிதத்தை கொடுப்பேன் என்றால் எதிர்காலத்தில் சில நடவடிக்கைகளை எடுப்பதற்கும், பலரது போலி முகத்திரையைக் கிழிப்பதற்கும் முடியாமல் போய்விடும்.

எனது கட்சியும், முதலமைச்சரும் நீங்களாகவே என்னை அமைச்சு பதவியில் இருந்து நீக்குங்கள். அதன் பின்னர் எனது நடவடிக்கை தொடரும்.

**முன்னாள் போராளிகளிடம்
சில வேண்டுகோள்கள்**

முன்னாள் போராளிகளுக்கு எனது அன்பான வேண்டுகோளை விடுவிக்கின்றேன். உங்களிடம் இருந்து நான் சில விடயங்களை எதிர்பார்க்கின்றேன். அமைச்சர் வாரியத்தில் சில மாதங்களாக விருப்பம் இல்லாமலும், அதே நேரம் எனது பக்கம் உள்ள சில நியாயங்களை நிலை நாட்ட வேண்டும் என்பதற்காகவும் போராடிக்கொண்டிருக்கின்றேன்.

இது மிகவும் வேதனைக்குரிய விடயம்.

எமது இனம் சார்ந்த இன விடுதலை என்பதற்காகவும் அதே நேரம் மக்களின் எதிர்காலம் குறித்தும் தற்போதுள்ள சில தலைவர்கள் சரியாக செயற்படுகின்றார்களா என்பது கேள்விக்குறியாக இருக்கின்றது.

கடந்த காலங்களில் எமது இனத்துக்காக எத்தனையோ உயிர்களை விதைத்திருக்கின்றோம். உங்களது உயிர்களை துச்சமாக மதித்து எமது இனத்தின் விடிவுக்காகப் போராடியுள்ளீர்கள். 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் எங்களுடைய போராளிகளும், மாவீரர் குடும்பங்களும் குறிப்பாக கணவனை இழந்த பெண்களும் படுகின்ற துன்பங்கள் அளவுக்கு அதிகமானவை.

எத்தனையோ தசாப்த காலமாக இருந்த எமது பெரியவர்கள் , அரசியல் ரீதியாக இருந்த தலைவர்கள் உங்கள் மட்டில் எவ்விதமான ஆக்கபூர்வமான ஒரு எதிர்காலத்தை அல்லது நடவடிக்கைகளை மேற்கொண்டார்களா?. 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னராவது சில நடவடிக்கைகளை எடுத்திருக்க வேண்டும். வாய்ப்பேச்சு மட்டும் இருந்ததே தவிர எவரும் அதற்கான ஆக்க பூர்வமான நடவடிக்கைகளில் இறங்கவில்லை.

**செயலில் இறங்கினேன்**

மகிந்த ராஜபக்ச ஆட்சிக்காலத்தில் பல உயிர் அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் எங்களுடைய போராளிகள் மற்றும் மாவீரர் குடும்பங்களுக்கான வேலைத் திட்டத்தை ஆரம்பித்திருந்தேன். தற்போதும் அந்த வேலைத்திட்டங்கள் நடக்கின்றன. இன்னும் 16 ஆயிரம் குடும்பங்கள் எனது வாழ்வாதாரத் திட்டத்தை எதிர் பார்த்துக்கொண்டுள்ளனர். என்னைப் பொறுத்த வரையில் எனது கட்சியோ அல்லது முதலமைச்சரோ நீதியாகவும் நியாயமாகவும் நடந்திருந்தால் அவர்களின் காலடியில் நின்றிருப்பேன். அவர்கள் கூறுவதை ஏற்று முன்னோக்கி நகர்த்தியிருப்பேன்.

பதவி ஆசைகள் தான் மேலோங்கி நிற்கின்றன. ஆனால் மக்களின் எதிர்காலம் மற்றும் கடந்தகாலத்தில் இழக்கப்பட்ட உயிர் இழப்புகளுக்கு அர்த்தம் தேடுகின்றவர்களாக பலரை பார்க்க முடியாதிருக்கின்றது.

நான் அமைச்சர் வாரியத்தில் தொடர்ந்தும் இருப்பதா அல்லது பதவி விலகுவதாக என்ற கேள்விக்கான விடையை உங்களின் கைகளில் விடுகின்றேன்-என்றார். (ந-10-56)

## நிதிப்...

ருக்கு தேநீர், சிற்றுண்டிகள் வழங்கப்படவில்லை. யாழ்ப்பாண பிரதேச செயலத்திலேயே இவ்வாறு நடந்துள்ளது.

யாழ்ப்பாண பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றது. இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பின் மாவை. சேனாதிராசா ஆகியோரின் இணைத் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட பொதுமக்கள் பிரதிநிதி ஒருவர் "அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் தொடர்பாக வழங்கப்பட்ட அறிக்கைகளின் எழுத்துக்கள் மிகச் சிறியதாகவும், நெருக்கமானதாகவும் இருக்கின்றன. வாசிக்க முடியவில்லை." என்று சுட்டிக்காட்டினார்.

அதற்கு பதிலளித்த யாழ். பிரதேச செயலர் பி.தயாபரன், "எமது பிரதேச செயலகத்தின் நிர்வாகச் செலவினங்களுக்கான நிதி மிகக் குறைந்தளவிலேயே ஒதுக்கப்பட்டுள்ளது. அதனால் நாம் நெருக்கடிகளை எதிர்கொள்கின்றோம். அதனாலேயே அறிக்கை நெருக்கமாக பிரதியிடப்பட்டுள்ளது. நிதி நெருக்கடியால் கூட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்கான தேநீர், சிற்றுண்டிகளைக் கூட வழங்க முடியாத நிலமை ஏற்பட்டுள்ளது." என்று குறிப்பிட்டார்.

நிர்வாகச் செலவின நிதியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று இணைத் தலைவர்களில் ஒருவரான இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் குறிப்பிட்டார்.

இணைத்தலைவர்களுக்கும், மாகாண சபை உறுப்பினர்களுக்கும் தண்ணீர்ப் போத்தல்கள் வழங்கப்பட்டன. அதிகாரிகள், ஏனையோருக்கு அதுவும் வழங்கப்படவில்லை. (ந-8)

## முதன்...

கொழும்பு, ஓக. 15

அமெரிக்க அரச தலை வர் டொனால்ட் ட்ரம்ப்பும் இலங்கையின் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும் அடுத்த மாதம் நேரில் சந்தித்துப் பேசவுள்ளனர்.

ஐக்கிய நாடுகள் சபையின் 72ஆவது பொதுச் சபைக் கூட்டம் அமெரிக்கத் தலைநகர் நியூயோர்க்கில் செப்டெம்பர் 12ஆம் திகதி ஆரம்பமாகிறது. இதில் கலந்துகொள்வதற்காக மைத்திரிபால சிறிசேன அங்கு செல்லும்போது ட்ரம்பை நேரில் சந்தித்துப் பேசு வார் என்று தெரிகிறது.

அரச தலைவரின் பயணத்தின்போது அயலுறவுத்துறையைச் சேர்ந்த உயர்மட்டக் குழு ஒன்றும் பயணிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 2015ஆம் ஆண்டு ஆட்சிமாற்றம் ஏற்பட்டு மைத்திரிபால சிறிசேன அரச தலைவராகத் தெரிவுசெய்யப்பட்ட பின்னர் அவர் கலந்துகொள்ளும் மூன்றாவது ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தொடர் இது. இதன் பக்க நிகழ்வுகளாக உலக நாடுகளின் தலைவர்கள் பலரையும் அரச தலைவர் சந் திப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

அமெரிக்க அரச தலைவராக டொனால்ட் டிரம்ப் தெரிவுசெய்யப்பட்ட பின்னர் அவரை மைத்திரிபால சிறிசேன நேரில் சந்திப்பது இதுவே முதற் றடவையாக இருக்கும்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பான தீர்மானங்களை இது வரையில் முன்னின்று நகர்த்தியதில் அமெரிக்கா பெரும் பங்கை ஆற்றி வந்தது. எனினும் மனித உரிமைகள் சபையில் செயற்படுவது வீண் வேலை என்கிற எண்ணத்தைக் கொண்டவர் ட்ரம்ப். அதனால் எதிர்வரும் ஆண்டுகளில் இலங்கை தொடர்பான விடயத்தில் அமெரிக் காவின் ஈடுபாடு குறையும் என்று மனித உரிமை ஆர்வலர்கள் எதிர்பார்க்கின்றனர். இத்தகைய நிலையில் மைத்திரி மற்றும் ட்ரம்ப் இடையிலான சந்திப்பு மிக முக்கியத்துமானதாகவும் இலங்கையின் அரசியல் எதிர்காலத்தைத் தீர்மானிப்பதாகவும் இருக்கும் என்று எதிர்வுகூறப்படுகிறது. (உ-சி)

## காணாமற்...

இந்த அலுவலகத்தை நிறுவுவதற்கான சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு ஒரு வருடம் கடந்துவிட்டது. எனினும் அதனை நிறைவேற்றுவதில் அரச தலைவர் அக்கறையற்றுச் செயற்படுவது ஏற்றுக்கொள்ள முடியாதது என்ற மனித உரிமைகள் ஆர்வலர்கள் உதயன் பத்திரிகையிடம் தெரிவித்தனர்.

சட்டம் இயற்றப்பட்டு நீண்ட நாள்களின் பின்னரே அதனை ஓர் அமைச்சுக்குப் பாரப்படுத்தி அறிவித்தார் அரச தலைவர். அதன் பின்னர் சுமார் ஒரு மாத காலம் ஓடிவிட்டபோதும் இன்னும் அலுவலகத்தை உருவாக்குவதற்கான அறிவிப்பு விடுக்கப்படவில்லை என்றும் அவர்கள் விசனம் தெரிவித்தனர்.

காணாமற்போனவர்களின் உறவினர்கள் 160 நாள்களுக்கும் மேலாக வீதியோரத்தில் அமர்ந்திருந்து தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் நிலையிலும் அரசும் அரச தலைவரும் இப்படிப் பாரா முகமாகச் செயற்படுவது கண்டனத்துக்குரியது என்றும் அவர்கள் தெரிவித்தனர். (உ-5)

## விஜயதாசவை...

ளான விஜயதாஸ ராஜபக்ஷவுக்கோ அல்லது பைசர் முஸ்தபாவுக்கோ எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எவர் கொண்டுவந்தாலும் அதற்கு நாங்கள் ஆதரவளிக்கமாட்டோம். அவர்களுக்கு எதிராக முன்வைக் கப்படும் காரணங்கள் பொருத்தமானவையல்ல. நாட்டின் சொத்துகளைச் சூறையாடி இருந்தாலோ அல்லது தவறு செய்திருந்தாலோ சிறிலங்கா சுதந்திரக் கட்சி அவர்களுக்குச் சார்பாக இருக்காது. அது எவராக இருந்தாலும் அவர்களின் பதவியைப் பறிப்பதற்கு நடவடிக்கை எடுப்போம்" என்றார். (உ-சி)

## கடுகதி...

(வயது -27) என்பவரே உயிரிழந்துள்ளார்.

தாண்டிக்குளம் பிரதான தொடருந்துக் கடவையில் விபத்து நடந்துள்ளது. ஒலிச் சமிக்ஞை மட்டும் கொண்ட கடவை ஊடாகக் கடக்க முற்பட்டபோது தொடருந்துடன் முச்சக்கர வண்டி விபத்துக்குள்ளானது என்று தெரிவிக்கப்பட்டது. முச்சக்கர வண்டி ஒரு கிலோமீற்றர் தூரம் வரை இழுபட்டுச் சென்றது என்று அங்கிருந்தவர்கள் கூறுகின்றனர்.

தாண்டிக்குளம் இராணுவ உணவகத்துக்கு அருகில் ரயில் நிறுத்தப்பட்டது. முச்சக்கர வண்டியில் சாரதி மட்டுமே பயணித்துள்ளார். அவர் தாண்டிக்குளம் தொடருந்து நிலையத்துக்கு அருகில் உள்ள பாலத்தில் இருந்து வெளிக்காயங்கள் இன்றி மீட்கப்பட்டார். அவரை மருத்துவமனைக்கு உடனடியாகக் கொண்டு சென்றபோது அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்று தெரிவிக்கப்பட்டது என்றும் கூறப்பட்டது.

சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

உயிரிழந்தவர் கிடாச்சூரிக்கான பேருந்துச் சாரதியாகவும் பணியாற்றுகின்றார் என்று தெரிவிக்கப்பட்டது. (ந-21)

## இக்கட்டுக்குள்...

அதேபோன்று ரெலோ கட்சிக்குள்ளும் முதலமைச்சரின் நடவடிக்கையால் பிளவு ஏற்பட்டது. அமைச்சர் டெனீஸ்வரனுக்கு எதிராக அந்தக் கட்சி ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தது.

முதலமைச்சரின் நடவடிக்கையால் அதிருப்தியடைந்த தமிழ் அரசுக் கட்சி ஒருபடி மேலு போய் இனிமேல் அமைச்சரவையில் எந்தப் பதவியையும் எடுப்பதில்லை என்ற ஆணித்தரமான முடிவை எடுத்தது. சுகாதாரத்துறை அமைச்சராக இருந்தவரான மருத்துவர் சத்தியலிங்கம் தனது பதவியைத் துறந்தார்.

அமைச்சர் டெனீஸ்வரனைப் பதவியில் இருந்து விலகுமாறு ரெலோ பணித்தது. ஆனால் அவர் அதற்கு மறுத்துவிட்டார். இதனால் புதிய அமைச்சரவை ஒன்றை அமைக்கும் பணி சிக்கலில் மாட்டிக்கொண்டுள்ளது.

இனி ரெலோ கட்சியின் மத்திய குழுகூடி அமைச்சர் டெனீஸ்வரனை கட்சி உறுப்புரிமையில் இருந்து நீக்கி அவரது மாகாண சபை உறுப்பினர் பதவியைப் பறிப்பதன் மூலமே அமைச்சுப் பதவியில் இருந்து அவரை நீக்க முடியும். இதற்கு பல வாரங்கள் அல்லது மாதம்கூட ஆகலாம்.

அதுவரையில் மாகாண அமைச்சரவையின் நிலை குழப்பத்துக்குள்ளாகியுள்ளது. ஏற்கனவே சுகாதார அமைச்சர் பதவி விலகி 8 நாள்கள் ஆகிவிட்டபோதும் அவரது இடத்துக்கு எவரும் நியமிக்கப்படவில்லை. இதனால் அந்த அமைச்சுப் பணிகள் தேங்கிக் கிடக்கின்றன. விவசாய அமைச்சை முதலமைச்சர் தன் வசம் எடுத்துக்கொண்டுள்ளபோதும் பணிச் சுமை காரணமாக அங்கும் உருப்படியான வேலைகள் நடபெறுவதில்லை என்று சுட்டிக் காட்டப்படுகிறது. கல்வி மற்றும் பெண்கள் விவகார அமைச்சர்கள் 3 மாதங்களுக்கான தற்காலிக அமைச்சர்களே என்ற முதலமைச்சர் அறிவித்ததால் அவர்களும் உருப்படியான செயற்றிட்டங்கள் எதனையும் ஆரம்பிக்க முடியாத திரிசங்கு சொர்க்கத்துக்குள் இருக்கின்றனர். புதிய அமைச்சரவை அமைக்கப் பட்டால் தமது பதவி இருக்குமா இல்லையா என்கிற குழப்பமும் அவர்களிடம் காணப்படுகிறது.

இப்படி எல்லாமும் இடியப்பச் சிக்கல் போல் குழம்பிப் போயுள்ளதால் மாகாண சபையின் பணிகள் குழப்பமடைந்துள்ளன. தற்காலிக அமைச்சர்களின் உத்தரவுகளைச் செயற்படுத்துவதா இல்லையா, புதிய அமைச்சர் எப்போது வருவார், அமைச்சரவை அங்கீகாரத்துக்கு என்ன செய்வது போன்ற கேள்விகளால் அரச அதிகாரிகளும் திக்கித் திணறிக் குழம்பிப் போயுள்ளனர்.

இந்த நிலமை இன்னும் சில நாள்களுக்கு நீடித்தால் மாகாண சபைப் பணிகள் முடக்கமடையும் நிலையை எட்டிவிடும் என்றும் சுட்டிக் காட்டப்படுகிறது. (உ-101)

## ஐ.தே.கவின்...

யிட்டுள்ளன.

நாட்டின் நற்பெயருக்காகவும் பௌத்த மதத்துக்காகவும் விஜயதாஸ ராஜபக்ச முன்னெடுக்கும் நடவடிக்கைகளைச் சுட்டிக்காட்டியுள்ள பௌத்த பீடங்கள், அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வருவதற்கு தாம் அனுமதிக்கப் போவதில்லை என்று திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளன.

"இலங்கைக்கு வருகை தந்த ஐ.நா. சிறப்பு அறிக்கையாளர் பென் எமர்சனுடன் விஜயதாஸ ராஜபக்ச வெளிப்படையாகக் கருத்துக்களை முன்வைத்திருந்தார். அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை சீனாவுக்கு வழங்கியமைக்கு அவர் வெளிப்படையாக எதிர்ப்புத் தெரிவித்தமை நாட்டின் மீது அவர் வைத்துள்ள பற்றையே எடுத்துக்காட்டுகின்றது. எனவே விஜயதாஸ ராஜபக்சவுக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சி கொண்டுவரத் தீர்மானித்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஒருபோதுமே அனுமதிக்க முடியாது" என முதன்மைப் பௌத்த பீடங்கள் நான்கும் நேற்று அழுத்தமாகத் தெரிவித்துள்ளன. (வ)

## படையினருக்கு...

மறுசீரமைப்பு, மீள்குடியேற்றம், மறுவாழ்வு மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சரால் முன்வைக்கப்பட்டது.

நாளை செவ்வாய்க்கிழமை கூடும் அமைச்சரவையில் இது தொடர்பில் கலந்துரையாடப்பட்டு இறுதி முடிவு எடுக்கப்படும். கேப்பாபிலவில் மக்களின் காணிகளை விடுவிப்பதற்காக ஏற்கனவே 5 மில்லியன் ரூபாவை மீள்குடியேற்ற அமைச்சு ஒதுக்கியது. ஜூலை 19ஆம் திகதி விடுவிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்ட 189 ஏக்கர் காணிகளில் இருந்து இராணுவம் வெளியேறுவதற்காக இந்தப் பணம் வழங்கப்பட்டது.

இருப்பினும் இராணுவம் அன்றைய தினம் விடுவித்த காணிகளில் தமக்குரிய குடிமனைக் காணிகள் ஏதும் இல்லை என்று மக்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். இதனால் காணி கையளிப்பு நிகழ்வு கைவிடப்பட்டது.

இதனையடுத்து மக்களின் காணிகளை விடுவிப்பதானால் தமக்கு மேலும் பணம் வேண்டும் என்று இராணுவம் கோரியது. அமைச்சில் நடந்த கலந்துரையாடலில் இது தெரிவிக்கப்பட்டது. அதனை அடுத்தே 148 மில்லியன் ரூபாவை ஒதுக்குவதற்கான அமைச்சரவைப் பத்திரம் முன்வைக்கப்பட்டது.

தமது சொந்தக் காணிகளை விடுவிக்குமாறு கேட்டு கேப்பாபிலவு மக்கள் 166 நாள்களாகத் தொடர்ந்து வீதியோரம் அமர்ந்திருந்து போராட்டம் நடத்தி வருகின்றனர். இந்தக் காணிகளை விடுவிக்க அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அவர் அளித்த வாக்குறுதியின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி எதிர்க் கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் அடுத்தடுத்து இரண்டு கடிதங்களை அனுப்பியிருக்கிறார்.

# மட்டக்களப்பு அணி வென்றது கிண்ணம்

யாழ்ப்பாணம், ஒக. 15
வடமராட்சி செவிப்புலனற்றோர் விளையாட்டுக் கழகத்தின் கால்பந்தாட்டக் கிண்ணத்தை மட்டக்களப்பு அணி தட்டிச் சென்றது.

வடமராட்சி செவிப்புலனற்றோர் விளையாட்டுக் கழகத்தின் 5ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தேசிய ரீதியில் நடத்தப்பட்ட கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் மாலிசந்தி மைக்கல் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இந்த இறுதியாட்டத்தில் காலி அணியும் மட்டக்களப்பு அணியும் பலப்பரீட்சை நடத்தின. இரு அணிகளும் சமபலத்துடன் மோதியதால் கோல்களை இலகுவாகப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. இருந்தபோதும் ஆட்டத்தின் இறுதி நிமிடத்தில் காலி அணியின் கோல் காப்பாளர் செய்த தவறு காரணமாக கிடைத்த தண்ட உதையை மட்டக்களப்பு அணியின் திருநாவுக்கரசு கோலாக மாற்ற 1:0 என வெற்றிபெற்று சம்பியனாகியது மட்டக்களப்பு அணி.

ஆட்ட நாயகனாக மட்டக்களப்பு அணியைச் சேர்ந்த ஜெயநீதன், சிறந்த கோல்காப்பாளராக நதூன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். மூன்றாமிடத்தை வடமராட்சி அணி பெற்றுக்கொண்டது. (ம-108-422)



# இங்கிலாந்து - மே.தீவுகள் தொடர் நாளைமறுதினம்

இங்கிலாந்து - மேற்கிந்தியத் தீவுகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் நாளைமறுதினம் ஆரம்பமாகிறது.

இந்த ஆட்டம் எட்ஜ்பஸ்டனில் நடைபெறவுள்ளது. இரண்டாவது ஆட்டம் எதிர்வரும் 25ஆம் திகதி லீட்ஸ் மைதானத்திலும், மூன்றாவது ஆட்டம் செப்ரெம்பர் மாதம் 7ஆம் திகதி லோட்ஸிலும் நடைபெறவுள்ளன.

இந்தத் தொடருக்காக கடந்த மாதம் 28ஆம் திகதியே மேற்கிந்தியத் தீவுகள் அணி இங்கிலாந்துக்குச் சென்றிருந்தது. சுமார் மூன்று வார காலப் பயிற்சியின் பின்னர் அந்த அணி இங்கிலாந்தை எதிர்கொள்கிறது.

(ம)





# றோயல் அணி சம்பியனானது

யாழ்ப்பாணம், ஒக. 15
அரியாலை ஐக்கியம் விளையாட்டுக் கழகம் நடத்திய 40 வயதுக்குமேற்பட்டவர்களுக்கான கால்பந்தாட்டத் தொடரில் ஊரெழு றோயல் அணி சம்பியனானது.

அமரர்களான யோகநாதன், பாக்கியலட்சுமி ஞாபகார்த்தமாக இந்தத் தொடர் நடத்தப்பட்டது. இறுதியாட்டம் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து றோயல் விளையாட்டுக் கழக அணி மோதியது.

முதற்பாதி முடிவதற்கு 5 நிமிடம் இருக்கையில் றோயல் விளையாட்டுக் கழக அணிக்கு தண்டனை உதை கிடைக்க அதனை தர்மகுலநாதன் கோலாக மாற்றினார். இதனால் அந்த அணி 1:0 என்ற கோல் கணக்கில் முதல் பாதியின் முடிவில் முன்னிலை வகித்தது.

இரண்டாம் பாதியின் 10ஆவது நிமிடத்தில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணியின் தேவா தனது அணிக்கான முதலாவது கோலினைப் பதிவு செய்தார். நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணிகளும் தலா ஓர் கோலைப் பெற்றிருந்தன. சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது றோயல் அணி.

அரியாலை ஐக்கிய அணியின் தேவா ஆட்டநாயகனாகவும், அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணியின் றூபகரன் சிறந்த கோல்காப்பளராகவும் தெரிவானார். (ம-108)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஒக. 15
நாவற்குழி சரஸ்வதி சனசமூக நிலையமும், விளையாட்டுக் கழகமும் இணைந்து யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இந்தத் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை இரவு 7.15 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நவாலி தென்றல் விளையாட்டுக் கழக 'ஏ' அணியை எதிர்த்து பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. இரவு 8.15 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உடுவில் ஆலடிசிந்து விளையாட்டுக் கழக 'பி' அணியை எதிர்த்து அறிவொளி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

(ம-23)

# விநாயகர், வைகறை அணிகள் அசத்தல்

யாழ்ப்பாணம், ஒக. 15
நாவற்குழி சரஸ்வதி சனசமூக நிலையமும், சரஸ்வதி விளையாட்டுக் கழகமும் இணைந்து யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக நடத்தும் தாச்சித் தொடரில், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் விநாயகர், வைகறை அணிகள் வெற்றி பெற்றன.

சரஸ்வதி விளையாட்டுக் கழக மைதானத்தில் தொடரின் ஆட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் விநாயகர் விளையாட்டுக் கழக 'ஏ' அணியை எதிர்த்து விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக அணி மோதியது. விநாயகர் அணி 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது.

இரண்டாவது ஆட்டத்தில் புதுமடம் வைகறை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டுக் கழக 'ஏ' அணி மோதியது. இதில் புதுமடம் வைகறை விளையாட்டுக் கழக அணி 9:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது.

(ம-23)

## பிரண்ட்ஸ் வென்றது

வவுனியா, ஒக. 15
வவுனியா பிரண்ட்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் துடுப்பாட்டத் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் பிரண்ட்ஸ் அணி வெற்றி பெற்றது.

பிரண்ட்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் அந்த அணியை எதிர்த்து ஸ்ரார் பைட் அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பிரண்ட்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப் பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து 137 ஓட்டங்களைப் பெற்றது. சாந்தகுமார் 50 ஓட்டங்களையும், அசோக்குமார் 47 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் டெனிசன் 2 இலக்குகளை வீழ்த்தினார்.

138 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய ஸ்ரார் பைட் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப் பரிமாற்றங்களில் 126 ஓட்டங்களைப் பெற்றதை அடுத்து 11 ஓட்டங்களால் பிரண்ட்ஸ் அணி வெற்றிபெற்றது.

(ம-23)

# வளர்மதி வி.கழகம் இறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஒக. 15
யாழ்ப்பாண மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தின் தொடரில் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது புத்தூர் வளர்மதி அணி.

நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழக மைதானத்தில் தொடரின் ஆட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழகமும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக அணியும் பலப்பரீட்சை நடத்தின.


5 செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது.

முதல் இரு செற்களையும் முறையே 25:23, 25:22 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வளர்மதி அணி கைப்பற்றியது.

மூன்றாவது செற்றை 25:14 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி நேர்செற் தோல்வியைத் தவிர்த்தது பல்கலைக் கழக அணி. நான்காவது செற்றை 25:22 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய வளர்மதி அணி 3:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது.

(ம-108)





# நிகழ்ச்சித் திட்டமிடல் இல்லாமை போல்ட்டின் காயத்துக்கு காரணம்

## கேத்லின் சாடல்

நிகழ்ச்சி பற்றிய சரியான திட்டமிடல்கள் இல்லாதமையே 4 வீரர்கள் பங்குபற்றும் 100 மீற்றர் அஞ்சலோட்டத்தில் உசைன் போல்ட் காயமடைந்து வெளியேறக் காரணம் என்று தெரிவித்தார் போல்ட்டின் போட்டியாளரான அமெரிக்க வீரர் ஜஸ்ரின் கேத்லின்.

உலக தடகளத் தொடர் லண்டனில் நடைபெற்று வருகிறது. 4 வீரர்கள் பங்குபற்றும் 100 மீற்றர் அஞ்சலோட்டம் நேற்றுமுன்தினம் அதிகாலை (இலங்கை நேரப்படி) நடைபெற்றது. ஜமைக்க அணியில் போல்ட்டும் இடம்பெற்றிருந்தார். இந்த ஓட்டமே பன்னாட்டு அரங்கில் போல்ட்டின் கடைசி ஓட்டம் என்பதால் அவருக்கு விடைகொடுக்க பல்லாயிரக் கணக்கான ரசிகர்கள் திரண்டிருந்தனர்.

100 மீற்றர் ஓட்டத்திலும் தடுமாற்றம் காணட்டிய காரணத்தால் இந்தப் போட்டியிலாவது சாதிப்பாரா என்பது தொடர்பில் பெரும் எதிர்பார்ப்பு ஏற்பட்டிருந்தது. நான்காவது வீரராகக் கோலைக் கையில் வாங்கிய போல்ட் தனக்கு முன் ஓடுபவரை முந்தும் முயற்சியின் போது எதிர்பாராத விதமாக அவரது இடது தொடையில் தசைக் கிழிவு ஏற்பட்டது. இதனால் அவர் தொடர்ந்து ஓடமுடியாமல் களத்தில் விழுந்தார். இது பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்த நிலையில் போல்ட் காயமடைந்தமைக்கு சரியான திட்டமிட்ட அட்டவணையின்படி போட்டிகள் நடத்தப்படாதமையே காரணம் என்று குறிப்பிடுகிறார் கேத்லின்.

"இரண்டு பதக்கங்களை வழங்கும் நிகழ்வுக்காக சுமார் 40 நிமிடங்கள் வீரர்கள் மைதானத்தில் காக்க வைக்கப்பட்டனர். மைதானம் சிறிது அனலாக இருந்தது. வியர்வை அதிகம் வெளியேறியது. போல்ட்டும் இதேநிலையில்தான் இருந்திருப்பார்" என கேத்லின் மேலும் தெரிவித்தார். (ம)

# இலங்கையை அதன் மண்ணில் வழித்துத் துடைத்தது இந்தியா

## இரண்டரை நாளில் முடிந்தது இறுதி டெஸ்ட்



இலங்கையை அதன் சொந்த மண்ணில் வைத்து 3:0 என்ற அடிப்படையில் வீழ்த்தி டெஸ்ட் கிண்ணத்தைக் கைப்பற்றியது இந்திய அணி. இந்திய அணி இலங்கைக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரு அணிகளுக்கும் இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் முதலாவதாக நடைபெற்றது.

மூன்றாவதும் இறுதியானதுமான ஆட்டம் பல்லேகலவில் கடந்த 12ஆம் திகதி ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. தவான், பாண்டியா ஆகியோரின் சதம், லோகேஸ் ராகுலின் அரைச்சதம் என்பன கைகொடுக்க இந்திய அணி 487 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக தவான் 119 ஓட்டங்களையும், பாண்டியா 108 ஓட்டங்களையும், ராகுல் 85 ஓட்டங்களையும் குவித்தனர். பந்துவீச்சில் சன்டகன் 5 இலக்குகளையும், புஸ்பகுமார 3 இலக்ககளையும், பெர்னான்டோ 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக்களமிறங்கியஇலங்கைக்கு 135 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக சந்திமல் 48 ஓட்டங்களையும், டிக்வெல்ல 29 ஓட்டங்களையும், குசல் மென்டிஸ் 18 ஓட்டங்களையும் சேர்த்தனர். பந்துவீச்சில் குல்தீப் யாதவ் 4 இலக்குகளையும், அஸ்வின், சமி இருவரும் தலா 2 இலக்குகளையும், பாண்டியா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.



இலங்கை அணி தொடர்ந்தும் களத்தடுப்பில் ஈடுபடத் தகுதியற்ற நிலையில் அந்த அணியை இரண்டாவது இன்னிங்ஸுக்காக தொடர்ந்து துடுப்பெடுத்தாடப் பணித்தது இந்தியா. நேற்றுமுன்தின இரண்டாம் நாள் முடிவில் இலங்கை அணி ஓர் இலக்கு இழப்புக்கு 19 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. கருணாரட்ன 12 ஓட்டங்களுடனும், புஸ்பகுமார ஓட்டமெதையும் பெறாத நிலையிலும் மூன்றாம் நாளுக்காக நேற்றுக் களமிறங்கினர். ஓர் ஓட்டத்துடன் ஆட்டமிழந்தார் புஸ்பகுமார. கருணாரட்னவை 16 ஓட்டங்களுடன் பவிலியனுக்கு அனுப்பினார் அஸ்வின். சந்திமல், மத்தியூஸ், டிக்வெல்ல மூவரும் முறையே 36, 35, 41 ஓட்டங்களைப் பெற்று ஓரளவு தாக்குப் பிடித்த போதிலும் குறைந்தபட்சம் இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்ப்பதற்கு போதுமான தாகக்கூட அவர்களின் பெறுபேறு அமையவில்லை. அஸ்வினின் சுழலிலும், சமியின் வேகத்திலும் இலங்கையின் பின்வரிசை அள்ளுண்டு போனது. முடிவில் 181 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது இலங்கை அணி.

இன்னிங்ஸாலும் 171 ஓட்டங்களாலும் அபார வெற்றிபெற்று 3:0 என்ற அடிப்படையில் இலங்கையை வழித்துத் துடைத்தது இந்திய அணி. ஆட்டநாயகனாக பாண்டியாவும், தொடராட்ட நாயகனாக தவானும் தெரிவு செய்யப்பட்டனர். (ம)

# வரலாறு படைத்தார் கோக்லி



இலங்கைக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தில் இந்திய அணி வெற்றிபெற்றதை அடுத்து, அந்த அணியின் தலைவர் என்ற வகையில் சில வரலாற்றுச் சாதனைகளுக்கு சொந்தக்காரர் ஆகியுள்ளார் கோக்லி.

இந்திய அணி, அதன் 85 ஆண்டுகால டெஸ்ட் வரலாற்றில் எந்த அணியையும் அன்னிய மண்ணில் வைத்து தொடர்ந்து மூன்று ஆட்டங்களில் வென்றதில்லை. இலங்கைக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தில் இந்தியா வெற்றிபெற்றதால் இந்த அடைவை எட்டிய முதல் இந்திய அணியின் தலைவர் என்ற பெயர் கோக்லிக்குக் கிட்டியது.

அதேபோல் டெஸ்ட் ஆட்டங்களில் மூன்று ஆட்டங்கள் அல்லது அதற்குக் கூடுதலான ஆட்டங்களை உடைய தொடரை இந்தியா இதுவரை அன்னிய மண்ணில் முழுமையாகக் கைப்பற்றவில்லை. இதனால் இந்த அடைவையும் கோக்லியின் தலைமையில் இந்திய அணி நிலைநாட்டியது. (ம)

# இந்திய அணி அறிவிப்பு

இலங்கைக்கு எதிரான ஒருநாள் தொடருக்கான இந்திய அணிநேற்று முன்தினம் மாலை அறிவிக்கப்பட்டது. கடந்த சில ஆட்டங்களாக இந்திய அணியில் இடம்பெற்றிருந்த சகலதுறை வீரர் யுவராஜ் அணியில் இருந்து விடுவிக்கப்பட்டார். ரெய்னாவுக்கு மீண்டும் இடம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்பட்ட போதிலும் எதிர்பார்ப்புப் பொய்த்துப் போனது.

இந்திய அணி விவரம் - விராட் கோக்லி (தலைவர்), தவான், ரோகித் சர்மா, கே.எல்.ராகுல், மனிஷ் பாண்டே, ரகானே, கேதர் ஜாதவ், டோனி, ஹர்திக் பாண்டியா, அக்சர் பட்டேல், குல்தீப் யாதவ், சாகல், பும்ரா, புவனேஷ்வர் குமார், சர்துல் தாக்கூர்.

இந்த அணியில் இருந்து யுவராஜ் நீக்கப்பட்டமைக்கு பல விமர்சனங்கள் வைக்கப்படுகின்றன. "நீக்கத்துக்குக் காரணம் மினி உலகக்கிண்ணத் தொடரில் பாகிஸ்தானுக்கு எதிராக பெற்ற அரைச்சதத்தின் பின்னர் யுவராஜ் பெரிதாக ஓட்டங்களைக் குவிக்கவில்லை என்பதே" என்று விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

இந்த இரு அணிகளுக்கும் இடையிலான ஐந்து ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரின் முதலாவது ஆட்டம் தம்புள்ளயில் எதிர்வரும் 20ஆம் திகதி ஆரம்பமாகிறது. (ம)



# பார்சிலோனாவை வென்றது மட்ரிட்

ஸ்பானியக் கழகங்களுக்கு இடையிலான 'சுப்பர் கப்' கால்பந்தாட்டத் தொடரில் நேற்று அதிகாலை நடைபெற்ற ஆட்டத்தில் பார்சிலோனாவை அதன் சொந்த மண்ணில் வைத்து பந்தாடியது ரியல் மட்ரிட் அணி.

கடந்த பருவகாலத்தின் முடிவுடன் ஓய்வுக்குச் சென்றிருந்த ரொனால்டோ இந்தப் பருவகாலத்தின் ஆரம்பத்தில் ரியல் மட்ரிட் அணியில் இணைந்திருக்கவில்லை. இந்த ஆட்டத்துக்கு இரண்டு தினங்கள் முன்னதாகவே அவர் மட்ரிட்டுடன் இணைந்திருந்தார். இதனால் மட்ரிட் தானாகவே பலம்பெற்றது. அதேநேரம் பார்சிலோனா அணியில் விளையாடிவந்த நெய்மர் சுமார் 4 ஆயிரம் கோடி ரூபா ஒப்பந்தத்தில் பரிஸ் செயின்ட் ஜேர்மன் அணியுடன் இணைந்ததால் அவர் இல்லாத பார்சிலோனா தடுமாற்றத்தை எதிர்கொள்ளலாம் என்று எதிர்வுகூறப்பட்டது.

ஆட்டம் ஆரம்பமானது. பரம எதிரிகளான இரண்டு அணிகளதும் விடாப் போராட்டத்தால் பந்து மாறிமாறி அல்லாடித் திரிந்ததே தவிர கோலெதுவும் பதிவாகவில்லை. கோல் கணக்கு ஆரம்பிக்கப்படாமலேயே முடிவுக்கு வந்தது முதல் பாதி.

இரண்டாம் பாதியின் 50ஆவது நிமிடத்தில் பார்சிலோனா அணியின் வீரர் பக்கியூ, தமது கோல் காப்பாளரை நோக்கித் தட்டிய பந்து கோலாக மாறாக தனது தலையில் தானே மண்ணைக் கொட்டியது பார்சிலோனா. 77 ஆவது நிமிடத்தில் நட்சத்திர வீரர் மெஸ்ஸி கோல் ஒன்றைப் பதிவுசெய்து கோல் கணக்கை 1:1 என்றாக்கினார்.

அடுத்த மூன்றே நிமிடத்தில் அசத்தலான கோல் ஒன்றைப் பதிவுசெய்தார் ரொனால்டோ. அதன் பின்னர் அவர் முறையற்ற விளையாட்டை கடைப்பிடித்தார் என்று சிவப்பு அட்டை காட்டி வெளியேற்றப்பட்டார். ரொனால்டோ எந்தத் தவறும் செய்யவில்லை என்றும் நடுவர் பார்சிலோனாவுக்குப் பக்கச் சார்பாகச் செயற்படுகிறார் என்றும் ரசிகர்கள் கூக்குரலிட்டனர். எனினும் எழுதியது எழுதியதே. அசென்சியோ வில்லியம்சன் 90ஆவது நிமிடத்தில் மட்ரிட்டின் மூன்றாவது கோலைப் பதிவுசெய்தார். முடிவில் 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது ரியல் மட்ரிட். (ம)



ரொனால்டோ எந்தத் தவறும் செய்யவில்லை என்றும் நடுவர் பார்சிலோனாவுக்குப் பக்கச் சார்பாகச் செயற்படுகிறார் என்றும் ரசிகர்கள் கூக்குரலிட்டனர்.

## செவ்வானம் அணி அபார வெற்றி

வவுனியா பிரண்ட்ஸ் விளையாட்டுக் கழகம் 9ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வவுனியா மாவட்ட ரீதியில் நடத்திய துடுப்பாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் செவ்வானம் அணி அபார வெற்றிபெற்றது.

பிரண்ட்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் யுனி பைட் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து செவ்வானம் விளையாட்டுக் கழக அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய செவ்வானம் விளையாட்டுக் கழக அணி 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 151 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக சிவதர்சன் 35 ஓட்டங்களையும், றொசான் 34 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் யுனிபைட் விளையாட்டுக் கழகத்தின் சார்பில் விதுஸ், நிசாந்தன் ஆகியோர் தலா 2 இலக்குகளை வீழ்த்தினர்.

152 ஓட்டங்களை இலக்காகக்கொண்டு துடுப்பெடுத்தாடிய யுனி பைட் விளையாட்டுக் கழக அணி 19 பந்துப் பரிமாற்றங்களில் 84 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்தது. பந்து வீச்சில் நீக்கிலஸ் 3 இலக்குகளைக் கைப்பற்றினார். (ம-23)

## சங்கா, மகேல ஆடமாட்டார்கள்

இலங்கையில் ஏற்பட்ட வெள்ள இடரில் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு நிதி சேர்க்கும் விதத்தில் நடைபெறவுள்ள இலங்கை அணிக்கும் உலக அணிக்கும் இடையிலான ரி-20 ஆட்டத்தில் சங்கா, மகேல இருவரும் ஆடமாட்டார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு ஆர்.பிரேமதாஸ மைதானத்தில் செப்ரெம்பர் மாதம் 8ஆம் திகதி இந்த ஆட்டம் நடைபெறவுள்ளது. இலங்கை அணியின் சார்பாக டில்சான் கலந்து கொள்வார் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

சங்கா, மகேலவுடன் பேச்சு நடைபெறுகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது. தற்போது அவர்கள் இருவரும் ஆடமாட்டார்கள் என்று தகவல்கள் வந்துள்ளன. (ம)




**மஹோற்சவகால கடை ஏலம் கூறல்**

தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தான மஹோற்சவ காலத்தை முன்னிட்டு எதிர்வரும் வியாழக்கிழமை 17.08.2017 பிற்பகல் 4 மணிக்கு சங்க பணிமனையில் ஏலம் கூறல் இடம் பெறும் என்பதை அறியத் தருகின்றோம்.

குறிப்பு :- ஏலத்தில் கடையெடுப்பவர்கள் அத்தினமே முழுத் தொகையினையும் செலுத்த வேண்டும். தவறும் பட்சத்தில் மற்றவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படும்.

செயலாளர்,
தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம்.

**பெண் உதவியாளர் தேவை**

யாழ்.நகரில் இயங்கிவரும் பிரபல தனியார் வைத்தியசாலையில் பகுதி நேரமாகப் பணிபுரியக் கூடிய பெண் உதவியாளர் தேவை.

077 375 4490

**வேலையாள்கள் தேவை**

யாழிலுள்ள விருந்தினர் விடுதிக்கு முழுநேர / இரவு நேரம் மட்டும் வேலைக்கு அறை பராமரிப்பாளர் (Room Boy) உடன் தேவை.

075 999 2027

**EASYWAY யின்**

புதிய முறையிலான ஆங்கிலப்பயிற்சி

[illegible]SY WAY யின் ஆங்கில பாடப்புத்தகங்களைக்கற்று அதிலுள்ள [illegible]ற்சிகளை செய்தவர்கள் சரளமாக ஆங்கிலத்திலும் பேசுவதை ஏற்கனவே எமது நேரடி வகுப்புகளில் நாம் நிரூபித்துள்ளோம்.

[illegible]ப்புகளுக்கு வர நேரமற்ற தொழில்புரிவோர், பாடசாலை [illegible]ாவர்கள், வீட்டுப்பெண்கள், ஆசிரியர்கள், பல்கலை கழக [illegible]ாவர்கள் ஆங்கிலம்பேசவிரும்புவோர் இணையமுடியும்

பாடநெறிக்கட்டணம் : ரூபா 3000 மட்டுமே.
(19.08.2017 இற்கு முன்னர் பதிவுசெய்வோருக்கு மட்டும்.)

90 பாடங்களையும், 90 வீடியோ பாடங்களையும் கற்று [illegible]திலுள்ள பயிற்சிகளுக்கு பதில்களை எழுதி ஆகக் கூடியது 90 - 120 நாட்களுக்குள் ஒப்படைத்தல்வேண்டும்

[illegible]லங்கையின் அனைத்து மாவட்டங்களிலும் இறுதிப்பரீட்சை நவம்பர் 12, 2017 அன்று இடம்பெறும்.

[illegible]ணத்தை வங்கி மற்றும் தபாலகங்கள் மூலம் செலுத்தமுடியும்.

[illegible]WAY [illegible], மலைக்கூட்டு வீதி, 021 320 3313 077 1570 486

**தவறிவிட்டது**

கொக்குவிலைச் சேர்ந்த சுப்பிரமணியம் சர்வதயாபரன், திருமதி சாந்தா சர்வதயாபரன் ஆகிய எங்களுடைய இத்தாலி பாஸ்போட் (02) விசா ரிக்கற், ATM காட் என்பன அடங்கிய கைப்பை 13.08.2017 ஞாயிற்றுக்கிழமை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

076 689 0827

[illegible]கை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.08.2017 [illegible]ட்டு வெளியிடப்பெற்றது.